Registered as a News Paper
பக்கம் – 16
விலை: 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

நாதம்–14 வெள்ளி–18 27–03 ஜூலை 2003



# பொங்குதமிழ்

## எமது நிலம் எமக்கு வேண்டும்



## அடுத்தது?!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 27.06.2003

# போர் வெறியில் பிதற்றும் சந்திரிகா

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14வது தேசியமாநாட்டில் சிறிலங்காவின் சனாதிபதி மீண்டும் ஒரு போருக்கான தயார்படுத்தல் குறித்த அறிவிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

'சமாதானப்பேச்சுக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு விடுதலைப்புலிகள் தங்களைத் தயார்படுத்தி வருகின்றார்கள்.' என்று சிங்கள மக்களுக்கு 'அச்சுறுத்தல்' ஒன்றை விடுத்துள்ள அவர். அதன் மூலம் சிங்கள மக்களை 'போருக்குத் தயாராகுங்கள்' என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

தான் ஒரு சமாதானதேவதை - ஆனால் விடுதலைப்புலிகள் தான்போர் வெறியர்களாக உள்ளனர். எனவேதான் சமாதானத்திற்கான யுத்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்ற சந்திரிகாவின் இறந்தகால வார்த்தைகளை நாம் மறந்து விட முடியாது.

இனக்கலவரங்களின் வளர்ப்புத் தந்தையான பண்டாரநாயக்காவுக்கும் இன ஒடுக்கு முறைகளின் மாதாவான சிறிமாவுக்கும் புத்திரியாக அவதரித்தவரல்லவா அவர்! - அப்படித்தான் கூறுவார்.

சமாதானப்பேச்சுவார்த்தை என்ற பேரில் - இடைக்காலநிர்வாகம் என்ற ஒன்றை - உத்தியோகப்பற்றற்ற தமிழீழமாகவே விடுதலைப்புலிகளுக்கு ரணில் வழங்கவுள்ளார் என அவர் 'பிதற்றி'யிருப்பது பேரினவாத சக்திகளை போருக்குத் தூண்டிவிடும் தன்மையைக் கொண்டதேயாகும்.

இதேபோன்றதோர் இடைக்கால நிர்வாகம் பற்றி இதே சந்திரிகா 1994இல் பேசியதை சிங்களப்பேரினவாதிகள் மிகவும் சுலபமாகவே மறந்துவிடும் அளவுக்கு அறியாமை கொண்டவர்கள் என்பதில் சந்திரிகா அதீத நம்பிக்கை கொண்டுள்ளார் என்பதையே அவரின் இந்தப்பிதற்றல் புலப்படுத்துகின்றது.

விடுதலைப்புலிகள் சமாதானத்தின் மீதும், பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வின்மீதும், தமக்குள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை கடந்த ஓராண்டுக்கும் அதிகமான காலப்பகுதிக்குள் எவ்வாறு நிரூபித்துள்ளார்கள் என்பதை சர்வதேச சமூகம் இப்போது தெளிவாகவே தெரிந்துள்ளது.

போர் நிறுத்தத்தின் பின்னர் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை இந்த ஓராண்டு காலமாக நடைமுறைப்படுத்தாமல் அரசு காலம்கடத்தி ஏமாற்றிவந்துள்ள போதிலும், அவர்கள் பொறுமைகாத்தே வந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் - இடம் பெயர்ந்த அகதி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு, அங்கீகாரமளித்து, அவரவர் வாழ்நிலங்களில் அவர்கள் குடியேற, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அனுமதியளிக்க மறுக்கும் ஓர் அரசுடன் தான் இந்த ஓராண்டு காலமாக விடுதலைப் புலிகள் - இரகசியமாக அல்ல பகிரங்கமாக - சர்வதேச அனுசரணையாளர்கள் முன்னிலையில் அவர்களே வியந்துபாராட்டி அங்கீகரிக்கும் வகையில் சமாதானம் குறித்து பேசிவந்துள்ளார்கள்.

இராணுவ ரீதியில் சமநிலையில்.... இன்னும் சொல்லப்போனால் பெரும் வெற்றிகளைப் பெற்ற நிலையில் தான் விடுதலைப் புலிகள் சமாதானம் குறித்து பேசிவந்துள்ளார்கள்.

அரசு காலம் கடத்தும், ஏமாற்றும், உடன்பாடுகளை அமுல் செய்யாது ஏமாற்றும், தீர்வுகுறித்த விடயங்களைப் பற்றி பேசப்பின்னடிக்கும்... என்பதெல்லாம் விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் நன்குதெரியும். ஆனாலும் ஒரு நம்பிக்கையில் சர்வதேசசமூகத்தின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் தான் அவர்கள் இன்னமும் பேசுவதற்கு தயாராக உள்ளார்கள்.

சந்திரிகா பிதற்றியிருப்பது போல் அவர்கள் போருக்குத் தயாராகி வருகின்றார்கள் என்பது உண்மையானால் அதற்காக சந்திரிகாவே தனது கட்டுப்பாட்டிலுள்ள கடற்படையினர் மூலம் விடுதலைப்புலிகளின் வர்த்தகக்கப்பல்கள் இரண்டை சர்வதேச கடற்பரப்பில் வைத்து சர்வதேச விதிமுறைகளை மீறித்தாக்கி அழித்த போது வழங்கியிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் விடுதலைப்புலிகள் அப்போதெல்லாம் பொறுமை காத்தது சமாதானம் மீதான - இன்னமும் எஞ்சியிருக்கக்கூடிய அற்ப சொற்பநம்பிக்கையினால் தான் என்பதை சந்திரிகா மட்டுமல்ல, அவரின் வார்த்தைகளை நம்பும் பேரினவாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சமாதான சூழலின் 'லாபத்தை' பெரும்பான்மை சமூகத்தவரே பெருமளவில் அனுபவித்து வருகின்றார்கள் என்ற யதார்த்தத்தையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல இன்னமும் தமிழ்மக்கள் மீது இராணுவ அழுத்தமும் போர்ச்சூழலும் தொடர்ந்து அமுல் செய்யப்பட்டே வருகின்றபோதிலும் புலிகள் பொறுமைகாப்பது சமாதானத்தின்மீது அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டாலேயாகும்....

அவர்களின் போராற்றல் மேலோங்கிய நிலையில் தொடர்ந்து அமைதிகாத்து சமாதானத்தை பேணுவது அவர்களின் பேராற்றலை உலகுக்கு உணர்த்துவதாகவே உள்ளது.




## தூரனின் பார்வையில்

# 'சமாதான' அற்புத விளக்கும் சில பூதங்களும்... மந்திரவாதிகளும்...

பிரச்சினையைத் தீர்த்தல், வளர்ச்சிக்கு உதவுதல், சமாதானத்தை உறுதிப்படுத்தல், சனநாயகத்தைப் பாதுகாத்தல், பொருளாதாரத்தை வலுப்படுத்தல், பாதுகாப்புக்கு உதவுதல்.... எனப்பல்வேறு பிரச்சார பிரகடனங்களை முன்வைத்தபடி உள்நுழையும் இந்த நாடுகளின் ஆதிக்க வலைப் பொறிக்குள்சிக்கும் நாடுகள் படும் அவலங்கள் சொல்லவும் மெல்லவும் முடியாதவை.

'நக்குண்டார் நாவிழந்தார்' என்ற நிலையில் இந்த சிறிய நாடுகள் எதிர்கொள்ளும் அழுத்தங்களின் பெறுபேறுகள்- நீண்ட கால நோக்கில் அவற்றை அந்த வல்லாதிக்க சக்திகளின் நவகாலனித்துவ நாடுகளாக, நிரந்தரமாக இயங்கும் நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதுடன், அந்த நாடுகளின் சுயத்துவமும் முற்றாகவே அழிக்கப்பட்டுவிடும் என்பதும் தவிர்க்க முடியாததாகும்.

இருந்தாலும்கூட சர்வதேச ஆதிக்க சக்திகளின் பொறிக்குள் சிக்கிய தேசிய நெருக்கடிகளை பன்முகப்பட்ட நோக்கில் கொண்ட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள நாடுகள் பலவும் சுயாதீனமாக முடிவுகள் எதனையும் எடுக்க முடியாத, அயலக மற்றும் அந்நியஅரசுகளின் இராணுவ அபிலாஷைகளை இலக்காகக் கொண்ட ராஜதந்திர மூலோபாய நகர்வுகளுக்கான வகைக்குள் சிக்கியுள்ள தென்றே கூற வேண்டும்.

கண்ணியமாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் சனநாயக ரீதியில் பரஸ்பர புரிந்துணர்வுடன் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு பிரச்சினையை- இனப் பிரச்சினையை இடியப்பச்சிக்கலாகிய சிறிலங்காவின் பேரினவாத அரசியல் கோமாளிகள், இப்போது வல்லாதிக்க பொறிக்குள் வசமாகச் சிக்கிக்கொண்ட ஏமாளிகள் ஆகியுள்ளனர்.

இந்தியா ஒரு புறம், அமெரிக்காவும் அதன் நட்புநாடுகளும் இன்னொருபுறம், சீனா மறுபுறம், என 'போர்' சமாதானம் என இரண்டுக்கும் கிரியா ஊக்கிகளாகச் செயற்பட்டு சிறிலங்காவை சுயமாக சிந்திக்கவோ செயற்படவோ இயலாத, எல்லாவற்றிற்கும் அந்நிய ஆதிக்க சக்திகளையே அண்ணாந்து பார்க்க வேண்டிய அநுதாபத்திற்குரியவர்களாக தள்ளிவிட்டுள்ளார்கள்.

யார் சொல்வதை செயற்படுத்துவது, எவரின் அபிலாசைகளைப் பாதுகாப்பது, யாருக்கு தலையாட்டுவது, மற்றவரை எப்படிச்சமாளிப்பது, என்று எந்த முடிவையும் தீர்க்கமாக எடுக்கும் திராணியற்று புற அழுத்தங்களின் தன்மைக்கேற்ப நெளியும் ஒரு 'புழு' நிலையிலேயே சிறிலங்கா இன்றுள்ளது. சிறிலங்காவின் அரசியல்வாதிகள் இன்று திணறுகின்றனர்.

இந்தியா மற்றும் சீனாவுடனான நெருக்கத்தை- உறவை அமெரிக்கா விரும்பவில்லை.

அமெரிக்காவுடனான நெருக்கம் இந்தியாவுக்கு சினத்தையே அதிகரிக்கச் செய்கிறது.

சீனாவுடனான உறவுகளை இந்தியா அமெரிக்கா இரண்டுமே விரும்பவில்லை.....

பாகிஸ்தானுடனான நட்பு இந்தியாவுக்கு எரிச்சலை உண்டு பண்ணும் விடயமாகியுள்ளது.

தன்னை மீறி அமெரிக்காவின் பின்னணியுடன் கூடிய, நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தையை 'இந்தியா' ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதரிப்பதாக் காட்டிக்கொண்டாலும் அதனைக்குழப்ப இந்தியா சகலவழிகளையும் நுட்பமாக கையாண்டே வருகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

தென்னாசியப் பிராந்தியத்தில், குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உலக வல்லாதிக்க சக்திகளின்பார்வை என்றுமில்லாதஅளவுக்கு குவிமையப்பட்டுள்ள இன்றைய கால கட்டம், ஒவ்வொரு வல்லாதிக்க சக்தியும் தனக்கான நேசசக்திகளின் துணையுடன், இந்த பிராந்தியத்தில் உள்ள வலுவற்ற- பொருளாதார பலமற்ற சிறிய நாடுகளை தம் அரசியல் மற்றும் இராணுவ ரீதியலான இலக்குகளை மற்றும் அபிலாஷைகளை எட்டுவதற்கான தளங்களாக பயன்படுத்துவதற்கும், இந்தப்பகுதியில் தமது ஆதிக்க இருப்பினை வலுப்படுத்துவதற்கும், இந்தச் சிறிய நாடுகளின் பலவீனங்கள்-உள்ளகப்பிரச்சினைகள் ஆகியவற்றை மிகவும் நுட்பமானதும், தொலைநோக்குடன் கூடியதுமான ராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

இந்த வல்லாதிக்க சக்திகளிடையே அடிப்படையில் எந்தவிதமான விசுவாசமான உறவுகளோ, நட்போகிடையாது என்பது வெளிப்படையானவிடயமே. ஒவ்வொரு சக்தியும் அவரவர் ஆதிக்க நலன்களையே கருத்தில் கொண்டு- அந்த முனைப்புடனேயே தமது நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டு - ஒருவிதமான 'சர்வதேச நட்பு' நாடகத்தை அரங்கேற்றி வருவதும் பகிரங்கரகசியமே.

இந்த மேலாதிக்கசக்திகளின் 'வில்லத்தன' உள் நோக்கத்துடனான 'கதாநாயக' செயற்பாடுகளால் இந்து சமுத்திரப் பிராந்திய வலுவற்ற உட்குழப்பம் மிக்க-அதே சமயம் சர்வதேச மட்டத்திலான புவிசார் அரசியல் மூலோபாயங்களுக்கு கேந்திர முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படும் நாடுகளில் மென்மேலும் குழப்பங்களும், நெருக்கடிகளும் அதிகமாகி வருவது கண்கூடு.

சதுரங்கப்பலகைகள் ஆகியுள்ளன. வலிமையற்ற, வளமற்ற, உள்ளூர் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வுகளை சுயமாக எட்டவக்கற்ற அரசுகளை இந்த மேலாதிக்க அரசுகள் பகடைக்காய்களாக்கியுமுள்ளன. இது ஒரு பரிதாபகரமான நிலையேயாகும்.

இன்னமும் தெளிவாகக் கூறுவதானால் சிறிய நாடுகளில் உள்ள நெருக்கடிகள், குழப்பங்கள், இன-மத முரண்பாடுகளை வளர்த்து, தீர்க்க முடியாதளவுக்கு சிக்கலான பிரச்சினைகளாக்கும் கைங்கரியத்தையும், தமது சுயஅரசியல் அபிலாசைகளுக்கேற்ப இந்த வல்லாதிக்கசக்திகள் மேற்கொண்டே வந்துள்ளன என்பதே அரசியல் யதார்த்தமாக உள்ளது.

இந்த நிலையில்- இன்றைய சிறிலங்கா- இம்மாதிரியிலான அவலப்பொறிக்குள் முழுமையாக- மிகவும் பரிதாபகரமான

# பொங்கு தமிழ்

**நிலாந்தன்**



**கடந்த** ஆண்டு யாழ்ப்பாணத்தில் மானுடத்தின் ஒன்றுகூடல் நடந்தபோது அதில் கலந்துகொண்டு பேசியவர்களில் ஒருவர் க.சிதம்பரநாதன் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர். இவர் தனது அரங்கச் செயற்பாடுகளுக்காக அதிகம் அறியப்பட்டவர்.

அவரது பேச்சின் பெரும் பகுதி பொங்குதமிழின் தோற்றம், வளர்ச்சி பற்றியவிபரங்களை அதிகம் தருவதாக இருந்தது.

ஒரு அரங்கச் செயற்பாடாகத் தொடங்கியது பிறகெப்படி குரலற்ற மக்களின் குரலாக, ஒரு மக்கள் எழுச்சியாக படிப்படியாக உருவாகியது என்று அவர்கூறிய போது, எமது மனதில் தவிர்க்க வியலாதபடி விழுந்த ஒரு சித்திரம் புடாபெஸ்ற் நாடக இயக்கத்தை நினைவில் கொண்டு வந்தது.

கங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ரில் காணப்பட்ட இந்த நாடக இயக்கம் கடந்த நூற்றாண்டின் நடுக்கூறளவில் கங்கேரியில் நடந்த சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் கருநிலைத் தொடக்கம் என்று வர்ணிக்கப்படுகிறது.

கங்கேரி சோவியத் யூனியனுடன் வலிந்து இணைக்கப்பட்டதை எதிர்த்து கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் தோன்றியதே புடாபெஸ்ற் எதிர்ப்பியக்கம்.

அரசியல் விழிப்புடைய ஒரு அரங்கச் செயற்பாட்டுக் குழுவாகத்தான் இது முதலில் தொடங்கியது. அரசியல் வாதிகள் வெளிப்படையாக செயற்பட அஞ்சிய ஒரு சூழலில் குரலற்ற மக்களின் குரலாக கலைஞர்கள் ஒலிக்கத் தொடங்கினார்கள். இது படிப்படியாக சனங்களை ஒன்று திரட்டி ஒரு பேரெழுச்சிக்கு இட்டுச்சென்றது. முடிவில் கங்கேரியில் இருந்து சோவியத் ராங்கிகள் பின்வாங்கவேண்டியதாயிற்று. இதற்கான அகப்புறநிலைமைகளை விரிவாக ஆராய்வது இப்பத்தியின் நோக்கமல்ல. ஆனால் அந்த அகப்புறநிலைமைகள் எல்லாவற்றையும் ஒரு பேரெழுச்சியாகக் கனிய வைத்தது புடாபெஸ்ற் கலைஞர்களே.

பொங்குதமிழ்பற்றி திரு.க. சிதம்பரநாதன் கூறியவற்றிலிருந்தும், கிடைக்கின்ற ஏனைய தகவல்களின் படியும், எமது மனதில் விழும் சித்திரத்தின்படி அது புடாபெஸ்ற் நாடக இயக்கத்தின் சாயல்களை குறிப்பிடத்தக்க அளவு கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்ல்மார்க்ஸ் பாட்டாளி வர்க்கமே புரட்சியின் முன்னணிப்படை என்று சொன்னார்.

ஆனால், கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஃபிரெஞ்சுத் தத்துவாசிரியரான ஹேபர்ட்மாக்கியூஸ், மாணவர்களே புரட்சியின் முன்னணிப்படை என்று சொன்னார்.

கடந்த நூற்றாண்டில் தென்கொரியாவில் இது ஓரளவுக்கு நிரூபிக்கப்பட்டது. சீனாவில் இத்தகைய மாணவர் முன்னணிப் படையொன்று தியனென்மென் சதுக்கத்தில் வைத்து ராங்கிகளால் நசுக்கியழிக்கப்பட்டது.

ஈழப்போரைப் பொறுத்தவரை மாணவர்களால் முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சி எனப்படுவது இதுதான் முதற்தடவையல்ல. இதற்கு முன்னரும் குறிப்பாக கடந்த நூற்றாண்டின்எண்பதுகளில் கணிசமான அளவு மக்கள் போராட்டங்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் ஒரு தளமாய் இருந்திருக்கிறது. வணக்கத்துக்குரிய சிங்கராயரை விடுவிக்கக் கோரிச்செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், விமலராஜனை விடுவிக்கக்கோரிச்செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்கள்....போன்றபல எதிர்ப்பார்ப்பாட்டங்களின் தளமாக யாழ்.பல்கலைக்கழகம் காணப்பட்டது.

மட்டுமல்ல, கடந்த நூற்றாண்டின் எழுபதுகளிலும் எண்பதுகளின் நடுக்கூறுவரையிலும் ஈழப்போரின் பிரதான அடைகாப்பு மையங்களில் ஒன்றாக யாழ். பல்கலைக்கழகம் இருந்தது.

இது தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் முதலாவது எழுச்சியின் அடைகாப்பு மையமாக வித்தியாலங்கார பல்கலைக்கழகம் இருந்தமைக்கு நிகரானது.

ஆனால், எண்பதுகளின் நடுக்கூறளவில் நிகழ்ந்த துரதிஸ்ரவசமான சில சம்பவங் களைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழகம் அரசியலில் ஒருவித சாட்சி நிலை எடுக்கலாயிற்று. எண்பது களின் நடுக்கூறிலிருந்து தொண்ணூறுகளின் நடுப்பகுதி வரையிலுமான மிகத் தீர்மானகரமான ஒரு தசாப்த காலத்துக்கு யாழ். பல்கலைக்கழகம் அரசியல் நடவடிக்கைகளில் இருந்து ஒப்பீட்டளவில் ஒதுங்கி மௌனமாய் இருக்கும் ஒரு போக்கே பெரும் போக்காய் இருந்து வந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியோடு நிலைமை மாறியது. ஈழப்போரின்மையம் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்குப் பின்வாங்கிவிட, புலிகள் தலைமறைவாகிவிட, உண்டாகிய தலைமைத்துவ வெற்றிடத்தில் செயற்பாட்டுக் குழுக்கள் (Activists) தீவிரமான ஒரு பாத்திரத்தை வகிக்கவேண்டிய ஒரு நிலை தோன்றியது.

இந்த வெற்றிடத்தை டக்ளஸ் தேவானந்தா மூலம் நிரப்பிவிட சந்திரிகா முயன்றார். ஆனால் தேவானந்தா பல்கலைக்கழகத்தில் தனக்கென்றொரு பலமான தளத்தை ஸ்தாபிக்க முடியவில்லை. இதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் இருந்தன.

முதலாவது ஹேபர்ட்மாக்கியூஸ் கூறியது போல மாணவர்கள் எப்பொழுதும் அரசுக்கும் ஆளும் அமைப்புக்கும் எதிரான அதிருப்தியின், ஆத்திரத்தின் கூர்முனையாகக் காணப்படுவார்கள் என்பது.

இரண்டாவது, யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியால் உண்டாகிய காயம், துக்கம், பயம், கோபம், அதிர்ச்சி போன்றவற்றிலிருந்து யாழ்ப்பாணத் துச்சமூகம் மீண்டெழாத ஒருநிலை.

இந்த இரண்டு காரணங்களினாலும் தேவானந்தா பல்கலைக் கழகத்தை வசப்படுத்த எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

பொதுவாக, தற்காப்புணர்வு அதிகமுடைய, சேமிக்கத்தெரிந்த யாழ்ப்பாணத்து படித்த நடுத்தர வர்க்கம் அதிகமதிகம் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்கவே விரும்பியது. இப்பொழுதும் விரும்புகிறது.

ஆயுதப் போராட்டங்களை முறியடிப்பதற்காக அரசுகள் மேற்கொள்ளும் படை நடவடிக்கைகள் 'வெற்றிபெறும்' போதெல்லாம், அந்தச் சமூகங்களில் உள்ள படித்த நடுத்தரவர்க்கம் அதிர்ச்சி, துக்கம், பயம் என்பவை கலந்த மௌனத்துடன் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பது ஒரு பொதுப் போக்காய் உள்ளது. தென்னிலங்கையிலும் எண்பதுகளின் இறுதி ஆண்டுகளில் இது நடந்தது. முந்நாள் ஜே.வி.பி. பிரமுகரும், இப்பொழுது ஒரு பத்திரிகை ஆசிரியராக இருப்ப வருமாகிய ஒரு சிங்களவருடன் கதைக்கும் போது அவர் இதைச் சொன்னார்.

கடந்த ஆண்டு தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களில் நிகழ்ந்த சில பயங்கரமான சம்பவங்களின் பின்னணிபற்றிக் கதைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். பிரேமதாச ,ஜே.வி.பி. யை வேட்டையாடியபோது கையாண்ட வழிமுறைகள், படித்த சிங்கள நடுத்தர வர்க்கத்தை அதிர்ச்சியுற வைத்துவிட்டன என்றும், அந்த அதிர்ச்சியோடும் அச்சத்தோடும் அவர்கள் பெருமளவுக்கு அரசியலில் இருந்து ஒதுங்கி நின்று விட்டார்கள் என்றும், இதனால் உண்டாகிய வெற்றிடத்துள் உதிரிகள், அரசியல் செய்ய முற்பட்டதன் விளைவே பல்கலைக் கழகங்களில் குரூரமாக வெளிப்




பட்டது என்றுமவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்திலும் படையினரின் பிடிக்குள் அது வீழ்ந்தபின் அங்கிருந்த படித்த நடுத்தர வர்க்கம் தானும் தன்பாடும் என்று ஒதுங்கிவிடும் ஒரு போக்கே பெரும் போக்காயிருந்து வருகிறது.

இதில் முதலில் அசைவை ஏற்படுத்தியது ஓயாத அலைகள் மூன்றுதான். ஓயாத அலைகள் மூன்றின் வெற்றிகள், கடலேரியைக்கடந்து குடாநாட்டுக்குள் புகுந்த போது யாழ்ப்பாணம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது.

ஒரு புறம் யுத்தத்தில் சிக்கிவிடப்போகிறோம் என்ற அச்சம். இன்னொருபுறம் காட்சி மாற்றத்தின் வேகத்தைக்கண்டு உண்டாகிய ஆச்சரியம், அதிர்ச்சி, மகிழ்ச்சி, நிச்சயமின்மை போன்ற எல்லாமும் சேர்ந்து யாழ்ப்பாணத்தை மெல்ல அசையவைத்தன.

குறிப்பாக ஆனையிறவுக்கான சமர்களின்போது பளையில் சிக்குண்டிருந்த சனங்களை மனிதக்கவசங்களாகப் பாவிக்கும் ஒரு நிலை தோன்றியபோது பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் குதித்தார்கள்.

மோதும் பீரங்கிகளின் மத்தியில், சனங்களை மீட்கும் மிக ஆபத்தான ஒரு வேலையை மாணவர்கள் மிகக் கட்சிதமாகச் செய்து முடித்தார்கள்.

சனங்ககளைக் கேடையமாகப் பாவிக்கமுடியாத ஒரு சூழலில் புலிகளின் முற்றுகைக்குள் நின்று பிடிக்கும் சக்தியற்று துருப்புக்கள் பின்வாங்கின. ஆனையிறவு வீழ்ந்தது.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியால் கூனிப்போயிருந்த யாழ்ப்பாணத்தின் ஆன்மா இந்த வெற்றிகளால் மெல்ல நிமிரத் தொடங்கியது.

இந்த நிமிர்வை, சிலிர்ப்பை, அசைவை அதற்கேயான ஒரு வெகுசனத்தளத்தில் நெறிப்படுத்தி ஒருங்கிணைத்தபோது 2001 ஜனவரியில் அது முதலாவது பொங்கு தமிழாக எழுச்சிபெற்றது.

இப்படியொரு எழுச்சியை நோக்கி யாழ்ப்பாணத்தைக் கனிய வைத்ததில் அங்கிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகைக்கும் ஒரு முக்கிய பங்குண்டு.

முதலாவது பொங்கு தமிழ் எழுச்சியின் போது அதில் தலையிட தேவானந்தா முயன்றதாகக் கூறப்படுகிறது. அமைப்பாளர்களில் ஒருவருடன் தொலைபேசியில் கதைத்த தேவானந்தா பொங்கு தமிழ் புலிகளுக்குச் சார்பானது என்று கூறினாராம். அதற்குப் பதில் கூறிய அமைப்பாளர் நாங்கள் சனங்களின் அபிலாசைகளைத்தான் வெளிக்கொண்டு வருகிறோம். இது போன்ற அபிலாசைகளை முன்வைத்துத் தானே நீங்களும் முன்பு போராடினீர்கள் என்று கேட்டதாகவும், அதோடு தேவானந்தா பின்வாங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

முதலர்வது, பொங்கு தமிழைப்பற்றி யாழ். பல்கலைக் கழகச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சொன்னார் - முதலில் தான் அதைப் பொருட்படுத்தவில்லையாம். அதில் கலந்து கொள்ள விரும்பவில்லையாம். ஆனால் ஏதோ ஒரு போருக்குத் தயாராவது போல துருப்புக்கள் ராங்கிகள் சகிதம் அதைத் தடுக்க வந்தபோது "இவர்கள் யார் இதைத்தடுப்பதற்கு" என்று தான் ஆத்திரப்பட்டதாகவும் அதன்பின்னரே தனது முடிவை மாற்றிக் கொண்டு அதில் கலந்து கொண்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

முதலில் இசைய மறுத்தவர்களையே பின்னர் பங்காளிகளாக்கிவிடுமளவிற்கு பொங்குதமிழ் ஒரு உருவேற்றும் அரங்காயிருந்தது. அல்லது உணர்ச்சிவசப்பட்ட ஒரு கூட்டு வெளிப்பாடாக இருந்தது. அல்லது குறைந்தபட்சம் துருப்புக்களின் மீதான தமது கோபத்தை, வெறுப்பை வெளிக்காட்ட விரும்பிய தமிழர்களுக்கு அது ஒரு உரிய தருணமாயிருந்தது. இத்தகைய அர்த்தத்தில் ஈழப்போரின் இதுவரையிலுமான எல்லா மக்கள்எழுச்சிகளோடும் ஒப்பிடுகையில் பொங்கு தமிழ் தனக்கென்று சில வித்தியாசமான இயல்புகளைக் கொண்டிருக்கக் காணலாம்.

முதலாவதாக அது எந்தவொரு அரசியல் கட்சியாலும் அல்லது இயக்கத்தாலும் நேரடியாக நெறிப்படுத்தப்படவில்லை என்பது படையினரின் பிடியிலிருக்கும் பகுதிகளில் அது முன்னெடுக்கப்படும் போது அதற்குள்ள பாதுகாப்பான அம்சமும் அதுதான்.

இரண்டாவதாக, ரிவிரசவின் பின் யாழ்ப்பாணத்தில் தோன்றிய அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்திலிருந்து இயல்பாக முகிழ்ந்த ஒரு செயற்பாட்டுக் குழுவினால்- Activists ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் மாணவர்களினால் முன்னெடுக்கப்படுவதாகவுமிருப்பது என்பது. அதன்படி கூறின் பொங்கு தமிழ் எனப்படுவது ஒரு ரிவிரசவின் குழந்தையே.

மூன்றாவது, அரசியலில் ஆர்வமின்றி ஒதுங்கி நின்ற யாழ்ப்பாணத்து நடுத்தரவர்க்கத்தை ஓரளவுக்கேனும் தற்காலிகமாகவேனும் அசைத்தது என்பது.

நாலாவது, எண்பதுகளின் நடுக்கூறிலிருந்து தொண்ணூறுகளின் நடுக்கூறுவரையிலும் யாழ் பல்கலைக்கழகத்தில் நிலவிய மௌனமாக, பிடிவாதமாக ஒதுங்கி நிற்கும் போக்கை தலை கீழாக்கி யிருப்பது என்பது.

இதுவரையிலுமான எல்லாப் பொங்கு தமிழ் எழுச்சிகளையும் வைத்துப் பார்க்கும் போது முதலாவது பொங்குதமிழின் பின் படிப்படியாக அதன் அரசியல் உள்ளடக்கம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

முதலாவது பொங்கு தமிழின் போது, யுத்தத்தின் வெற்றிகளாற்பெற்ற உற்சாகத்தோடும் சமாதானத்தை நோக்கிய எதிர்பார்ப்புகளோடும் காணப்பட்ட சனங்கள் ராங்கிகள் சகிதம் தம்மைச் சுற்றி வளைக்க முயன்ற படையினரை மீறித் தெருவில் இறங்கினார்கள். அந்தவகை எழுச்சிகளில் அது முதலாவது என்ற ஒருவிதநூதனமும், புனிதமும் அதை மேலும் பிரமிப்புக்குரியவை யாக்கின.

ஆனால் இன்று நிகழும் பொங்குதமிழைப் பொறுத்தவரை நிலைமை வேறாயுள்ளது.

கையாலாகாத சமாதானத்தைக் குறித்த ஏமாற்றமும் கொதிப்பும் அதிகரித்துவரும் ஒரு சூழலில்அடுத்தது யுத்தமா என்ற அச்சமும் கவலையும் கலந்த கேள்விகள் விடையின்றி அலையும் ஒரு சூழலில் கொலை, கைது, சுற்றிவளைப்புக்கள் அதிகரித்துவரும் ஒரு சூழலில் கடந்த பதினெட்டுமாதகாலமாக சிநேக பாவத்துடன் இருந்து வந்த துருப்புக்கள் இப்பொழுது விரோத பாவத்துடன் முகங்கள் இறுகிக் காணப்படும் ஒரு சூழலில் பொங்கு தமிழ் வந்திருக்கிறது.

மிகவும் நிச்சயமற்ற இத்தகைய ஒரு அரசியற் சூழலில் முன்னெச்சரிக்கையும் புத்திக் கூர்மையும் மிக்க யாழ்ப்பாணத்து நடுத்தரவர்க்கம் எப்படி நடந்து கொள்ளக் கூடும் என்பது இன்று தெரிந்து விடும்.

எல்லாவித விமர்சனங்களோடும் அவர்கள் எப்பொழுதும் போராட்டத்தின் பக்கம்தான் என்பது இன்று மறுபடியும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுவிடும். ●

பணம், வசதி, திருப்தி இல்லாதவன் மூன்று நல்ல பொருட்கள் இல்லாதவன் - வில்லியம் ஷேக்ஸ்பியர்

# நறுக்கென...

## தூரத்துப்பச்சையாகும் சமாதானம்...



"நீண்ட காலமாகப்போர் என்னும் இருண்டகுகைக்குள் சிக்கிப் போயிருந்த நாம் அதனுள் இருந்து வெளியேவரும் வழியைக் கண்டுள்ளோம். மீண்டும் ஒரு முறை எம்மால் மூச்சு விட முடிந்துள்ளது. எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையையும் வாழ்க்கை பற்றிய உறுதிப்பாட்டையும் கொள்ளும்சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது." என்று ரணில்விக்கிரமசிங்க தனது நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் தெரிவித்துள்ளார்.

மெத்தச்சரி..... சந்தோசம்.

ரணில் அவர்களே யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்ததைத்தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள், ஏற்படுத்திய நகர்வுகள் உங்களைப்பொறுத்தவரையில் சிங்கள தேசத்திற்கும், சிங்கள மக்களுக்கும் நீங்கள் குறிப்பிட்ட வழியும் - ஒளியும் தரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை மறுக்கமுடியாதவைதான்....

ஆனால் தமிழ் மக்களுக்கும், அவர்களின் பாரம்பரிய வாழ்நிலங்களுக்கும் ஏதாவது உறுதியான நம்பிக்கை தரும் மகிழ்ச்சியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனவா?

- அவர்கள் வாழ்வு இயல்பு நிலைக்குத்திரும்பிவிட்டதா?

- அவர்களின் வாழ்நிலம் முட்கம்பி வேலிகளினது ஆக்கிரமிப்பு வலயங்களிலிருந்தும் விடுபட்டுள்ளதா?

- துப்பாக்கி ஏந்திய இராணுவப் பார்வைகளின் அச்சுறுத்தல்களில் இருந்த அவர்கள் விடுபட்விட்டார்களா?

- தங்கள் தரையிலும் கடலிலும் அவர்கள் சுயாதீனமாக நடமாட, தொழில் புரிய முடிகிறதா?

இப்படிக்கேட்டுக்கொண்டே போகலாம்....

எல்லாக்கேள்விகளும் உங்களால் விடையளிக்க முடியாத கேள்விகளாகவே அமையும். இப்போது இந்தச்சமாதானச்சூழல் உங்களின் பிச்சாபாத்திரத்தை யென்களாளும், டொலர்களாலும், பவுண்களாலும் மற்றும் யூரோக்களாலும் நிரப்பி வரும் நிலையில் உங்களின் உற்சாகம் இவ்வாறு அறிக்கையை விடவைத்துள்ளது .

இந்த அறிக்கை சமாதானத்தின் பங்காளிகளாக இருக்கவேண்டிய தமிழர் தரப்பிலிருந்தும் வந்திருந்தால் அதில் ஏதாவது அர்த்தமிருக்கும். அந்தவகையில் - உங்களின் உற்சாகக்கைதட்டல் வெறும் ஒரு கை ஓசை மட்டுமே....

நீங்கள் இன்னமும் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு பங்காளிகள் என மட்டுமே தமிழர் தரப்பை நினைக்கின்றீர்கள். - ஆனால் சமாதானப்பேச்சுவார்த்தைப் பெறுபேறுகளின் சம பயனாளிகளாகவும் அவர்கள் இருக்கவேண்டும் என நினைக்கவில்லை. இது சமாதானத்தை வெறும் தூரத்துப்பச்சையாகவே வைத்திருக்கும்.

பேரினவாதம் உங்களை இப்படியெல்லாம் ஆரோக்கியமாகச்சிந்திக்கவிடாது... அதுவே யதார்த்தம்.

## 'கேலிக்'கூளாகியுள்ள பாதுகாப்பு அமைச்சர்



சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பல் மீது சர்வதேசக் கப்பற்போக்குவர்த்து விதிகளை மீறி சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட அழிப்புத்தாக்குதல் நடவடிக்கை குறித்து வெளிவரும் தகவல்கள் சிறிலங்காவில் ஆட்சிமுறை எவ்வளவு 'கோமாளித்தனமாக' அடாவடித்தனமாக இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றன.

இச்சம்பவம் நடந்தவேளையில் கடற்படைத்தளபதி நாட்டில் இருக்கவில்லை. வெளிநாடு சென்றிருந்திருக்கிறார்.

எனவே தாக்குதலுக்கான உத்தரவை அவர் நேரடியாகப் பிறப்பிக்கவில்லை.

துணைக்கடற்படைத் தளபதி பாதுகாப்பு அமைச்சுடனோ, அமைச்சருடனோ தொடர்பு கொண்டு அறிவித்து நடவடிக்கைகளுக்கான மேலதிக ஆலோசனையையோ, உத்தரவுகளையோ பெறும் அறிவையோ- துணிவையோ(!) கொண்டவராக இருக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சரே தனக்கு இதுகுறித்து உடனேயே அறிவிக்கவில்லை என்று பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

முப்படைத்தளபதி என்ற வகையில் சனாதிபதியே இதற்கான உத்தரவைப் பிறப்பித்ததாகக்கூறப்படுகிறது. அப்படியானால் சனாதிபதி பாதுகாப்பு அமைச்சருடன் ஏன் இது பற்றிக் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை?

பாதுகாப்பு அமைச்சகத்தை- அமைச்சரை ஒரு பொருட்டாக, அதிகாரமமதை கொண்ட சனாதிபதி மதிக்கவில்லை என்ற உண்மையை இது உணர்த்தவில்லையே.....

பாராளுமன்றத்தை- பிரதமரை' செயலற்ற' ஒன்றாக சனாதிபதி நினைத்தால் அதனைக் கலைத்துவிட்டு வெறும் சனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்யலாமே....

இப்படி ஒரு அவமதிப்பைத் தாங்கிக்கொண்டும் ஒருவர் பாதுகாப்பு அமைச்சர் என்றபதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறார் என்றால் அவரது 'சுயகௌரவம்' தொடர்பான உறுதியில் சந்தேகம் ஏற்படவே செய்கிறது.

எல்லாமே நடந்து முடிந்த பின்னர், அவமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் மாரப்பன- இவ்வாறான நிகழ்வுகளின் போது படையினர்- குறிப்பாகக் கடற்படையினர்- நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு Rules of Engagement என்ற பிரிவில் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதன் பிரகாரம் நடந்து கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகக் கூறுவதுதான் கோமாளித்தனமாக உள்ளது.

தனக்கு அறிவிக்கப்படாமை குறித்து எவ்வித விசாரணைகளையும் மேற்கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருப்பதானது அவரது 'வலு'வற்ற பதவியில் வெறுமைத் தன்மையை வெளிப்படையாக உணர்த்துவதாகவும் உள்ளது.....

## நான்காம் கட்ட ஈழப்போருக்கு தயாராக எச்சரிக்கும் சிஹலஉறுமய...



"விடுதலைப்புலிகள நான்காவது கட்ட ஈழப்போரை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அரசுத்தலைவர் என்ற வகையிலும் முப்படைத்தளபதி என்ற வ்கையிலும் சனாதிபதி ஆயுதப் படைகளை தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும்... போருக்கு தயார் நிலையில் இருக்கவேண்டும்" என்று சிஹல உறுமய தலைவர் சீறியிருக்கிறார்.

அறிக்கை விடுவது என்பது சிஹல உறுமயவின் பொழுது போக்கு. அதுவும் அதன் தலைவர் திலக்கருணாரத்னாவுக்கு புலிகளுக்கு எதிராகவும் போரை வலியுறுத்தியும் அறிக்கை விடுவதைவிட வேறுவேலையே கிடையாது.

வில்லையும் அம்பையும் கட்சியின் சின்னமாகக் கொண்ட சிஹல உறுமயக்காரர்களின் இலக்கு...... தமிழின அழிப்பு.... புலிகள் எதிர்ப்பு மட்டுமே.

அதுசரி, நான்காம் கட்ட ஈழப்போர் வரப்போவதை ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டுள்ளவர் போல்பேசும் 'திலக்கருணாரத்ன' அதுக்கு சனாதிபதி தயாராக இருக்க வேண்டும் என எச்சரிப்பதோடு மட்டும் நின்று விடுவது அவ்வளவு நல்லதல்ல....

முன்னர் அவர் கொடுத்தவாக்குறுதியையும் நிறைவேற்ற வேண்டும் என நினைவூட்டுகிறோம்....

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், புலிகளைநம்பக்கூடாது.... போர் மூலம் புலிகளை அழிக்கவேண்டும். அதற்கு சிஹல உறுமய உறுப்பினர்கள் படையில் சேர்ந்து போராட லட்சக்கணக்கில் முன்வரத்தயார் என முழங்கியிருந்தார்.

அதனை இப்போது நிறைவேற்றலாமே....!

இப்படிக் கேட்டால்.... தடித்த கண்ணாடிக்குள்ளாக 'திருட்டு முழி முழிப்பார், தாடியைச்சொறிந்துகொள்வார்....

இதைச்சமாளிக்க மற்றொரு அறிக்கை விடுவதைப்பற்றி யோசிப்பார் அவ்வளவுதான்....

பேரினவாதம் பேசிப்பேசியே அரசியல் வியாபாரத்தை நடத்த பழக்கப்பட்ட கும்பல்கள் சிறிலங்காவை தொடர்ந்தும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மட்டுமல்ல மதரீதியிலும் கூட சிங்கள தேசத்தையும், பௌத்த மக்களையும் ஏமாளிகளாக்கி வருகின்றனர்.

ரணிலுக்கு எதிராக சனாதிபதியைத்தூண்டும் இவர்கள் நாளை சனாதிபதிக்கு எதிராக ரணிலையும் தூண்டுவர் என்பதில் சந்தேகமில்லை.

கலங்கிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் பேர்வழிகளே இவர்கள்.....

ஐயா, திலக்கருணாரத்னா அவர்களே... தேர்தலில் சில ஆயிரம் வாக்குகளைப் பெறவே தவண்டையடிக்கும் நீங்கள் போருக்கு லட்சக்கணக்கில் ஆட்களைத் தருவோம் எனக் கூறியது

பூச்சுற்றலா.....? காது குத்தலா?

இனிமேலாவது உங்கள் இருப்பைக்காட்ட அறிக்கை விடுவதை நிறுததுங்கள்.

**செங்குட்டுவன்**

## முதலவடிமயிலர்



***செய்தி** : புலிகளைப் பேச்சுக்கு அழைக்க அரசாங்கம் சகலதையும் செய்யும் என்கிறார் ரணில்.*

**மயிலா** : ஓமோம் அரசு சகலதையும் செய்யும். ஆனால் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணிக்கவும் செய்யும்.... இவை இறால் போட்டு சுறா பிடிக்கிற ஆக்கள் பாருங்கோ.... கதைகண்ட இடம் கைலாசம் எண்டு நினைக்கிற வையோடை கவனமாக இருக்கவேண்டும் பாருங்கோ...

***செய்தி** : பாராளுமன்றத்தில் நேற்று செத்த வீடு... சவப்பெட்டிகள் சகிதம் கறுப்பு உடையுடன் எதிர்க்கட்சியினர் வினோதப்போராட்டம்.*

**மயிலா** : சிறிலங்காவில் 'சனநாயகம்' அது சுதந்திரம் அடைய முந்தியே செத்துப் போச்சுது பாருங்கோ.... இப்ப அது நல்லா நாறத்தொடங்கினபிறகுதான் செத்த வீடு கொண்டாடியிருக்கினம்.... பெட்டிகளைக்கொண்டு வந்தவையே அதுக்குள்ள போய் படுத்திருக்கினம் எண்டா நல்லா இருந்திருக்கும் பாருங்கோ... பேசாமல் சனம் பாராளுமன்றத்தையே சுடலையா பாவிச்சு அவைக்கு இறுதிக் கிரியை செய்திருக்கும்....

***செய்தி** : சாத்தியமான திட்டவரைபை தெளிவாக முன்வைத்தாலே பேச்சைத் தொடரலாம்.... மதியுரைஞர் பாலசிங்கம் கருத்து.*

**மயிலர்** : அரங்கை சரியாக அரசு அமைக்காம ஆட வரச்சொன்னால் எப்படியாம்? புதிய 'மொந்தை'யிலை பழைய கள்ளக்கட்டியடிக்க ரணில் நினைக்கிறார் பாருங்கோ... திட்டவரைபை முன்வைக்கவே தயக்கமென்றால் ஒரு சட்டவரைபை எப்படி முன்வைக்கப் போகிறாராம்...?

***செய்தி** : ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் வீட்டில் கொடுமைப்படுத்தப்பட்ட சிறுவன்.... பாதுகாப்பு அதிகாரசபை மீட்டது.*

**மயிலா** : இது சனாதிபதிக்குத் தெரிந்தால் ஈ.பி.டி.பி க்கு இன்னும் அதிக பாதுகாப்பை வழங்க உத்தரவிடுவார். சிறுவர்களால் ஈ.பி.டி.பிக்கு ஆபத்தென பிரகடனம் செய்வார்.... சிறுவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன் என எச்சரிப்பார்... என்ன நான் சொல்லுறது சரிதானே பாருங்கோ...

***செய்தி** : தனக்குரிய கௌரவம் வழங்கப்படுவதில்லையாம்! சந்திரிகா கவலை....*

**மயிலர்** : முதல்லை சந்திரிகா மற்றவையை மதிக்க பழகிக்கொள்ளவேணும் பாருங்கோ... கௌர்வத்தைக் கேட்டுப்பெறுமளவிற்கு கெட்டுப்போயிட்டுது சிறிலங்காவின் கலாச்சாரம்.... கெஞ்சினால் மிஞ்சுறார்... மிஞ்சினால் கெஞ்சுறார்... கண்டபடி கூத்தாடிக்காலை உடைத்து விட்டு கவலைப்படுவானேன்... அவலப்படுவானேன்...?

***செய்தி**:- இடைக்கால நிர்வாகத்தில் ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கும் அங்கத்துவம் அளிக்கவேண்டும். என சர்வமத அமைப்பு கோரிக்கை.*

**மயிலர்**:-நாடகமே இன்னும் எழுதப்படேல்லை.... மேடை இன்னும் அமைக்கப்படேல்லை... பாத்திரங்களுக்கு ஆள்தேடினம் பாருங்கோ... நாட்டிலை பொரிமாத்தோண்டிகள் கூடிப்போச்சு... கற்பனையில ஒரு இடைக்கால நிர்வாகம் நடத்தவே தொடங்கீட்டினம் பாருங்கோ...

மனத்திருப்தி இயற்கையான செல்வம்; ஆடம்பரம் செயற்கையான வறுமை - ஸாக்ரட்டீஸ்

# மாறிவிட்ட சமாதானத்தளம்

**சிறி.இந்திரகுமார்**





ஒரு பாடசாலையின் அதிபர் சொன்னார் "சமாதானம் இப்போது தளம் மாறிவிட்டது" என்று...

அவர் சமாதானத்தின் தளமாக எதைக்குறிப்பிட்டார் என்றால் சனங்களின் மனங்களின் உயிர்ப்பையேயாகும்.

அவர் இதனை இன்னும் தெளிவாக எப்படிக் கூறினார் என்றால் சமாதானம் சனங்களின் நம்பிக்கையின் தளத்தில் இருந்து நம்பிக்கையீனத்தின் தளத்திற்கு மாறிவிட்டது என்று.

அப்படியானால் இதுவரை சமாதானம் நம்பிக்கையின் தளத்தில் தான் கட்டி வளர்க்கப்பட்டதா என்ற கேள்வி எழும். அப்படிப்பார்த்தால் சமாதானம் தொடக்கப்புள்ளியில் மையங் கொண்ட போதும்கூட நம்பிக்கையின் தளத்தில் எழவில்லை.

இலங்யையின் சமாதானம் எப்போதுமே நம்பிக்கையின் தளத்தில் இருந்து கட்டிவளர்க்கப்பட்டதில்லை. இது இலங்கையில் எல்லா சமாதானக் காலத்திலும் காணப்பட்ட உண்மை.

ஏனென்றால் நம்பிக்கை துரோகங்களின் மத்தியில் எழுதப்பட்ட ஒப்பந்தங்களாலும். நம்பிக்கையோடு எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட போது எழுந்த நம்பிக்கையீனங்களாலும் என சமாதானம் எப்போதும் நம்பிக்கையின் புள்ளியை அண்மித்ததில்லை.

இதனால் சமாதானம் எப்போதும் நம்பிக்கைக்கும் நம்பிக்கையீனத்துக்கும் இடையில் அல்லாடியபடி இருக்கவே சமாதானத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இம்முறை நம்பிக்கையோடு சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று அரசைவிட புலிகள் அதிகம் விரும்பினார்கள்.

பல முறை சமாதானம் நாடாளுமன்றின் கருத்திற்குள்ளும் அரசின் அதிகாரத்திற்குள்ளும் தோற்றுப்போனதால் புலிகளே மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் தேவைபற்றி வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்த மூன்றாந்தரப்பு என்கின்ற சர்வதேசத்தின் ஆதரவுடன் சமாதானத்தின் வெற்றியின் இறுதிப்புள்ளிவரை நகர ஏதுவான எல்லா தமது தரப்பு சமன்பாடுகளையும் தெளிவாகவே உணர்த்தி நின்றார்கள். இதன் மூலம் சர்வதேசம் சமாதானத்தின் பயணத்திற்கு இருபக்க கைகளை நீட்டுவார்கள் என்றே எண்ணினார்கள்.

ஆனால் இலங்கைக்கான சர்வதேசத்தின் சமாதான சூழ்நிலையென்பது ரணிலை வலுப்படுத்தும் ஒரு நிலையென எண்ணுகின்றது.

இத்தகைய சர்வதேசத்தின் செயற்பாடு சமாதானத்தின் எதிர்த்தரப்பை தளர்வடையச் செய்யும் என்பதை புறந்தள்ளுகின்றது.

புதுவித அணுகு முறை எதுவுமின்றி இலங்கையின் பழைய நிலை அரசியலுக்குள் ரணிலைத் தள்ளி சாதிக்க நினைக்கும் சமாதானம் சங்கடங்களையே தோற்றுவிக்கும்.

அவ்வாறு தோற்றுவிக்கும் சமாதானம் அற்ப ஆயுளையே கொண்டிருக்கும்.

இலங்கையின் சமாதானம் தோற்றுவிக்கப்பட்டு தன் இலக்கை எட்டிவிட்டால் அது உலகின் எல்லாப்பிரச்சி னைகளிற்கும் முன்மாதிரியாக இருக்கும் என நினைக்கின்ற சர்வதேச சமூகம் காட்டும் பாதை தான் என்ன?

சந்திரிகாவின் கைகளில் இருந்து ரணிலின் கைகளுக்கு அரசு வந்தபோது ஆறுவாரங்களுக்கு மட்டுமே இருந்த இறக்குமதித்தகுதியை உயர்த்தி இலங்கையின் பொருளாதாரத்தளத்தினை உயர்த்துவதன் மூலம்சமாதானத்தை தட்டிவிட முடியும் என்பதையா?

இதனை மத்தியவங்கியின் பிந்திய அறிக்கை ஒன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடாக 20.9 கோடி அமெரிக்க டொலர் கிடைத்ததாகக் கூறுகின்றது இது.இதுவரை கிடைத்த முதலீடுகளில் மிக அதிகம் எனத் தெரிகின்றது.

இதைவிட இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடத் தைவிட 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிகின்றது.

இவையெல்லாம் ரோக்கியோ மாநாட்டில் ரணிலின் மடியை நிரப்பமுதல் வெளியான தகவல்கள்.

இதை விட ரோக்கியோவிலும் ரணிலின் மடியை சமாதானத்தின் பெயரால் 4.5 பில்லியன் அமெரிக்க டொலரால் நிரப்பப்பட்டுள்ளது.

இவையெல்லாம் சமாதானத்தின் பாதையை செப்பனிட வழிவகுக்குமா?

சமாதானத்தின் பயணத்தை இன்னும் விரைவுபடுத்தாமல் பொருளாதாரத்தின் பயணத்தை விரைவுபடுத்த முயற்சிக்கப்படுகின்றது.

இது உலகம் ஒரு வர்த்தக சாம்ராஜ்ஜிய சக்கரத்தில் நகர்வதையும் இதற்குள் இனங்களின் தீர்வுகள் என்பதும் தேவைகள் என்பதும் வர்த்தகத்தின் தேர்விற்குள் இருந்தே தோன்றும் என்பது போலவும் உள்ளது.

இவ்வாறே இலங்கையின் சமாதானத்தையும் வர்த்தகத்திற் கூடாகவும் தமது பிராந்திய நலனிற்கூடாகவும் சர்வதேச சமூகம் நோக்க இலங்கை அரசு தனது தேர்தல் இலாபங்களிற் கூடாகவும் இராணுவ இலாபங் களிற்கூடாகவும் பார்க்கின்றது.

இறுதியாக வெளியான தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. ரோக்கியோவில் வழங்கப்பட்ட நிதி ஒருபகுதி இராணுவ நலனிற்காகவும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவும் பயன்படுத்த இருப்பதாக வெளிவந்துள்ளது.

இதன் மூலம் எழும் கேள்வி சர்வதேச சமூகம் வலுப்படுத்த நினைக்கும் சமாதானம் எது என்பதே ஆகும்.

தென்னிலங்கையின் மையத்தில் நகர்த்தப்படும் சந்திரிகா ரணிலின் இழுபறி கயிறிழுத்தலில் ரணிலின் பக்கத்திற்கான வெற்றிக்கான ஆதரவாகவே சர்வதேசத்தின் ஆதரவுப்பலத்தைப் பார்க்கப்படுகின்றது.

பதிலாக வடக்குக்கிழக்கு மாகாணத்தில் இடம் பெயர்ந்துள்ள இரண்டு லட்சத்து இருபத்தேழாயிரம் குடும்பங்களின் மீள் குடியேற்றத்திற்கும் உடல்உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மூன்று லட்சம் சிறார்களின் புனர்வாழ்விற்கும் உரிய கட்டமைப்பிற்கூடாக எந்தப் புனர்வாழ்வையும் உந்தித் தள்ளப் பயன்படாது என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் பார்க்கப்படுகின்றது.

இதனால்தான் சமாதானம் இப்போது தளம் மாறிவிட்டது என எண்ணுகின்றனர்.

அதிலும் இப்போது யூலை மாதம் நெருங்கிவருவதால் இன்னும் அதிகமாக சந்தேகம் கொள்கின்றார்கள். ஒருவர் இந்த யூலை மாதத்தை குழப்பமாதம் வருகின்றது. எல்லாம் குழம்பிப் போடும் போலகிடக்கு என்றார்.

ஏனென்றால் இந்த யூலை மாதத்தில்தான் பல குழப்பங்கள் தமிழர்களுக்காக வடிவமைக்கப்பட்டன. இந்தயூலை மாதத்தில்தான் வடிவமைக்கப்பட்ட பல குழப்பங்களுக்கு தமிழர் தரப்பில் இருந்து பதிலளிக்கப்பட்டன.

இவ்வாறு எல்லாமாகச் சேர்ந்து சமாதானத்தின் தளத்தை மாற்றி வைத்துள்ளது.

அது ஆரம்பத்தில் இருந்த சனங்களில் நம்பிக்கையின் தளத்தில் இருந்து நம்பிக்கையீனத்தின் தளத்திற்கு மாற்றி வருகின்றது. ●

---

# எமது மண் அழிக்கப்படுகின்றது

**தி.தவபாலன்**



**பொருளாதாரத்தடை** நீக்கத்தின் பின் சூழல் பாதிப்படைவது தமிழ்ப் பகுதிகளில் அதிகமாகியுள்ளது. குறிப்பாக வேளாண்மையில் தான் பாதிப்பு அதிகமாகியுள்ளது.

பொருளாதாரத்தடையினால் யூரியாவராத காரணத்தினால் இயற்கை உரப்பாவனையில் ஈடுபட்டிருந்த வடபகுதி வேளாண்மை இப்பொழுது யூரியாவை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றது. கிருமிநாசினிகளை அளவுக்கு மீறி பயன்படுத்துகின்றது.

யாழ் குடாநாட்டில் அதிக யூரியா பயன்பாட்டால் நிலங்கள் உவரடைந்துள்ளதுடன், 90 விழுக்காடு நிலக்கீழ் நீரும் மாசடைந்துள்ளது. இப்பொழுது குடா நாட்டு குடிநீரை கிளிநொச்சி இரணைமடுவிலிருந்து பெற ஆலோசிக்கப்படுகின்றது.

வன்னியில் பெரும் பரப்பளவு வேளாண் நிலங்களாகும். இந்த அதிகரித்த பரப்பில் யூரியாவை அதிகமாகப் பயன்படுத்துகையில் நிலத்துக்கும், நீருக்கும் ஏற்படும் மாசை கணிப்பிடவேண்டும். அதைவிட கிருமிநாசினிப் பயன்பாடும் உலகளவில் குறைக்கப்பட்டு வருகின்றது.

கிருமிநாசினிகளால் உணவுப் பொருட்களூடாக உடல் நஞ்சடைகின்றது. சூழலில் உயிரினங்கள் அழிகின்றன. தமிழர்தாயகம் வேளாண்நிலத்தை ஆதாரமாக்கக் கொண்டது என்பதால் இந்த இரு பாவனைகளும் தாயகச் சூழல் பாதிப்புற பிரதான காரணிகளாக அமைகின்றன.

இன்று உலகளவில் இயற்கை வேளாணில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு பன்நாட்டுச் சந்தையில் அதிககிராக்கியுள்ளது.

சிறிலங்காவில் இயற்கை வேளாண்மையில் விளையும் அரிசி கிலோ 80 ரூபாவுக்கு வெளி நாடுகளுக்கு விற்கப்படுகின்றது. அதேபோல் தமிழர்தாயக விவசாயிகளும் இயற்கை வேளாண்மையில் தீவிர கவனம் செலுத்தினால், அவர்களின் விளை பொருட்களை சர்வதேச சந்தைக்குக் கொண்டு செல்லமுடியும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை அவர்கள் முன்னைய காலங்களில் இயற்கை வேளாண் உற்பத்திகளில் கைதேர்ந்தவர்கள். இன்று உலகளவில் புதிய கண்டுபிடிப்புக்களாக பரபரபுக்குட்படுத்தப்படும் இயற்கை வேளாண் உற்பத்திகள் தமிழ் மக்கள் முன்னைய காலங்களில் பயன்படுத்தியவை கூட்டெரு, குழைதாழ்த்தல், தாவரச் சாற்றுக்கிருமி நாசினி உட்பட்ட உத்திகள் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டவை.

பூநகரியினதும் யாழ் தீவகத்தினதும் பாரம்பரிய நெல்லின அரிசி மிகச்சுவையாக இருப்பதற்கு அவர்கள் இயற்கை வேளாண் உத்திகளை அதிகளவில் பயன்படுத்தியதாகும்.

புதிய இயற்கை வேளாண் உத்திகளை பழையனவற்றுடன் புதிய முறைகளைக் கலந்ததாக அமைந்துள்ளன. உதாரணமாக கூட்டெருவைத் தனித்துப்பயன்படுத்தாது, பயிர்களின் வளர்ச்சி வீதத்தை அதிகம் ஆக்க அதனுடன் குறிப்பிட்ட அளவு யூரியா கலக்கப்படுகின்றது. உலகளவில் இயற்கைவேளாண் உத்தியில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியின் மூலம் தமது நிலங்களை உவராகாது, அமிலமடையாது அல்லது காரமடையாது பாதுகாக்க முடியும். அதனுடன் விளைச்சலில் இயற்கைப் பசளைக்குரிய பெறுபேறையும் அடையமுடியும்.

இதைவிட யூரியாவின் பிரதான கூறான நைதரசனை உற்பத்தி செய்யும் பக்ரீரியாக்கள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. ரைசோபியம் உட்பட பலவித நைதரசன் உற்பத்தி பக்ரீரியாக்கள் சந்தைக்கு வந்துள்ளன. இந்தியாவில் இது தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. உயிர் உரங்கள் எனப்படும்

(14ஆம் பக்கம் பார்க்க....)

# மரங்கள்... இயற்கை தந்த வரங்கள்





முன்னெப்போதையும விட இப்போது தான் அதிகமாக மரங்கள் தறிக்கப்படுகின்றன. அதுவும் ஊர்களுக்குள் நிற்கும் மரங்கள் கூடுதலாகத்தறிக்கப்படுவது இப்போதுதான்.

கடந்த பதினைந்து வருடங்களில் இப்போதே மரங்களுக்கான தேவை கூடியிருக்கிறது. ஏற்பட்டிருக்கும் இந்த அமைதிச்சூழலில் புதிதாகக்கட்டப்படும் வீடுகளின் தொகை என்றுமில்லாத அளவிற்குக் கூடியிருக்கிறது. இதனால் கட்டுமானங்களுக்கான மரத்தேவையும் அதிகரித்திருக்கிறது. அத்தோடு புதிய தளபாடங்களுக்காகவும் மரங்கள் தேவையாக இருக்கிறது.

ஆனால், இந்தத்தேவைகளுக்கான மரங்களை ஈடுசெய்யக்கூடிய நிலைமை இப்பொழுது தமிழ்ப்பகுதிகளுக் கில்லை.

கடந்த பதினைந்து வருடகாலப்பகுதியில் தமிழ்ப்

## நமக்கான இயற்கையின் வளங்களை நாமே அழித்தொழிக்கும் அறிவீனம்

பகுதிகளில் அழிந்துபோனதும் அழிக்கப்பட்டதுமான மரங்கள் மிக அதிகமானது.

பெருமளவு மரங்களை படையினர் அழித்திருக் கிறார்கள் காவலரண்களுக்காகத் தறிக்கப்பட்ட மரங்கள், படையினரின் பாதுகாப்புக்கென தறித்தொதுக்கப்பட்ட மரங்களும் காடுகளும் என பெருமளவு மரங்கள் அல்லது காடுகள் அழிக்கப்பட்டன தவிர குண்டு வீச்சிலும் ஷெல்லடியிலும் அழிந்து போன மரங்களும் காடுகளும் கூட கொஞ்சமல்ல.

பொதுமக்கள் கூட பதுங்குகுழிக்காக மரங்களைத் தறிக்க வேண்டியதாக இருந்தது. இடம்பெயர்ந்து காடுகளில் புதிய குடியிருப்புகளை அமைக்கும் போது அழிந்த காடுகளும் மரங்களும் அதிகம்.

பொதுவாக யுத்தத்தில் அதிகமும் அழிக்கப்படுவது மரங்களும் காடுகளும் என்று சொல்லப்படுவதுண்டு.

இங்கும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைகளின் போதும் இதுதான் நடந்திருக்கிறது.

மிகப்பிரமாண்டமான அளவில் மேற்கொள்ளப்பட்ட எல்லாப்படையெடுப்புகளிலும் மரங்களும் காடுகளுமே கூடுதலாகப்பலியிடப்பட்டன.

இதில் தொண்ணூறுகளிலும் இந்தியப்படையினரின் காலத்திலும் அழிந்த மரங்கள், காடுகளின் அளவு ஆகக் கூடுதலானது. பல இடங்களும் ஊர்களும் பாலை வெளியாக விரிந்திருப்பதை இப்போதும் நீங்கள் பார்க்க முடியும்.

இப்படியான ஒரு பின்னணிச் சூழ்நிலையில், இன் றைய மரத்தேவையும் சேரும் போது நிலைமை இன்னும் நெருக்கடிக்குள்ளாகிறது.

தேவைக்கான மரங்களைப் பெறுவதற்கு பொதுவா கவே சனங்கள் கடுமையாகக் கஸ்ரப்படுகிறார்கள். முன்னரைப் போல கண்டபடி பொறுப்பில்லாமல் காட்டில் மரங்களை வெட்டவோ எடுத்துச் செல்லவோ முடியாது. தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு காடுகளைப் பாதுகாக்கவும் பேணிவளர்க்கவும் சில நடைமுறைகளை வைத்திருப்பதால் காட்டிலிருந்து மரங்களைக்கொண்டு வருவது மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது சந்தையில் மரத்தட்டுப்பாட்டை அதிகரித் துள்ளது. இதை ஈடுசெய்வதற்காக தமிழ்ப் பகுதிகளுக்கு வெளியேயிருந்து மரங்கள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

ஆனால், சனங்களை வெளியேயிருந்து கொண்டு வரப்படும் மரங்கள் கவரவில்லை. அவர்கள் உள்ளூர் மரங்களையே அதிகமாக விரும்புகிறார்கள்.

உள்ளூர் மரங்கள் மட்டும்தான் தரமானவை யென்றும் நீண்டகாலப் பாவனைக்குரியவை என்றும் ஒரு அபிப்பிராயம் பொதுவாகவே பலரிடமுண்டு. பாரங்குறைந்த தளபாடங்கள் பாவனைக்கு இலகுவானவை என்று பலருக்குத் தெரிவதில்லை.

எங்களுடைய பலவீடுகளுக்கும் பனைமரங் களையே பயன் படுத்தும் வழக்கம் தொடர்ந்து வரு கிறது. பதிலாக தென்னைமரங்களையும் அவற்றுக்குப் பயன் படுத்தலாம் என்று தெரிந்தாலும் பலரும் அதை ஏற்பதுமில்லை, அப்படிச் செய்வது மில்லை.

கட்டடத்துறை சார்ந்த ஒரு பொறியிய லாளர் ஒரு தடவை சொன்னார். "பனை மரங் களைவிட தென்னை மரங்களே வீட்டுக்குப் பாரமுமில்லை வளைந்து விடாமல் சீராகவும் அழகாகவும் இருப் பவை" என்று.

எங்களுடைய சூழலில் முன்பு பனை மரங்கள் வேண்டிய அள வுக்கு இருந்ததால் அத னைப் பயன்படுத்துவதாக இருந்தது. அது தொடர்ச் சியான ஒரு வழக் கமுமாகியது. யுத்தத்தால் சில லட்சக்கணக்கான பனை மரங்கள் அழிந்துள்ள நிலையில் தொடர்ந்தும் பனைகளையே பயன்படுத்த முனைவது மேலும் பனை அழிவையே தரப்போகிறது.

தென்னையைப் போல விரைவாக வளர்ந்துவிடக் கூடியதுமல்லப்பனை.

தென்னை மரங்களை மரத்தேவைகளுக்காகப் பயன் படுத்தும் ஈடுபாடோ பழக்கமோ இருந்திருந்தால் ஷெல்லடியிலும் குண்டுவீச்சிலும் காயப்பட்டுப் படும் நிலையிலிருந்த அல்லது பட்டுப்போயிருந்த தென்னைகளை அரிந்து பயன்படுத்தியிருப்போம். இந்தப் பழக்கம் இல்லாததால் எத்தனையோ நூற்றுக்கணக்கான தென்னைகள் அப்படியே கிடந்து உக்கிப்போயின. அவற்றை அரிந்து பயன்படுத்தியிருந் தால் இன்று தறிக்கப்படும் பல பனைகளைக் காப்பாற்றியிருக் கலாம். இப்போது கூட சோடைத்தென்னைகளை இப்படிப் பயன்படுத்தலாம்.

இதுபோல வேறு மரங்களிலும் பாலை,முதிரை, தேக்கு, சமண்டலை, யாவறனை, வேம்பு போன்ற மரங்களையே வீட்டுத்தேவைகளுக்கும் தளபாடங்களைச் செய்வதற்கும் கூடுதலாக விரும்பும் பழக்கம் எங்களுடைய சூழலில் உண்டு.

பதிலாக வேறு மரங்களைப்பயன்படுத்த எவரும் விரும்புகிறார்களில்லை. ஏனைய மரங்களையும் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்ற விழிப்பு நிலை எம்மிடமில்லை.

உண்மையில் தென்பகுதிகளில் முழுக் கட்டடங்களுமே வேறுமரங்களைக் கொண்டே நிர்மாணிக்கப் பட்டவை, தொடர்ந்தும் நிர்மாணிக்கப்படுபவை என்பதைக் கவனிக்கவேண்டும் எல்லோரும்.

நாங்கள் விரும்பும் மரங்களின் தொகைவீதம் வரவரக் குறைந்து வரும் நிலை குறித்த அச்சத்தைவிட, இருக்கும் மரங்களை எப்படியாவது அரிந்து எடுத்துவிட்டால் போதும் என்ற நோக்கம் தான் பரவலாகச் சனங்களிடம் உண்டு. காட்டு மரங்களுக்குக் கட்டுப்பாடுகளிருக்கும் போது ஊருக்குள்ளிருக் கும் மரங்களையே அறுத்தெடுக்க முனைகிறார்கள். இதனால் ஊர்கள் மரமற்ற நிலைக்காளாகின்றன. கிராமங்கள் வெக்கை வலயங்களாகக் கூடிய ஆபத்தும் பெருகுகிறது. மரநிழலுடன் வாழ்ந்த வாழ்க்கை முற்றாக அழிந்துபோகக் கூடிய பிரச்சினைதான் உருவாகிறது. எங்களுடைய கோடைகாலத்தை எப்படித்தான் கழிக்கப்போகிறோமோ? வேலியில்கூட மரங்களில்லை. அவையும் மதில்களாகின்றன.

புதிதாக மரங்களை நடும் ஆர்வம் குறைந்துவருகிறது. பல இடங்களிலும் இல்லையென்ற நிலைமைதான்.

இருக்கும் மரங்களைத் தறிப்பதிலுள்ள முயற்சியில் பாதிகூட புதிய மரங்களை நடுவதிலும், நிற்கும் மரத்தைப் பேணுவதிலும் இல்லை. எப்போதையும் விட அண்மைக்காலங் களில் மர நடுகை, வனப்பேணுகை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன. பல அமைப்புகள் இதற்காகவே செயற்படுகின்றன.

வனவளப் பாதுகாப்புப் பிரிவு இதன் மையமாக நின்று தொழிற்படுகிறது. இது ஒருவகையில் பெரிய ஆறுதலுக் குரியது.

ஆனால், மரங்களைத் தறித்தெடுப்பதற்காக தினமும் வனவளப் பாதுகாப்புப் பிரிவு மையங்களை நோக்கி வருவோர் தொகையோ கூடிக்கொண்டே வருகிறது. அப்படி வருவோரிடம் பொதுவாகவே கேட்டுப் பார்த்தால் தங்கள் வாழ்நாளில் ஒரு மரத்தைத் தானும் நட்டு விடாதவர்கள் பாதிக்கு மேலிருப்பதை அறிய முடிகிறது.

இயற்கையாக வளர்ந்த மரங்களையும் தமது முன்னோர் வைத்துவளர்த்த மரங்களையும் தறிக்க முனைவோர் தமது எதிர்காலத்தினருக்கான மரங்களை நடாமலிருப்பதுதான் பெரிய கவலைக்குரியதாயிருக்கிறது.

மரம் தறிப்பதற்கு அனுமதி கேட்டுவருவோர்கள் தாங்கள் நட்டுவளர்க்கும் இரண்டு மரங்களையாவது காண்பிக்க வேண்டும் என்ற ஒரு நடைமுறை வரவேண்டும் என்றொரு நண்பர் சொன்னது உண்மையில் கவனிக்கத்தக்கதே.

சுற்றுச்சூழல் பராமரிப்புப் பற்றியும் காடுகளை வளர்த்தல் - பாதுகாத்தல் எண்டது பற்றியும் உலகளாவிய அளவில் விழிப்புணர்வும் செயற்பாடுகளும் ஏற்பட்டுவரும் போது நாம் எப்படி மாறுதலாகப் போக முடியும். அதுவும் அழிவை நோக்கி.

30,40,50,60,100 வருடங்களுக்கு முந்தி வெள்ளையர்கள் நட்ட மரங்கள்தான் இன்றும் எங்களுடைய நகரங்களில் பெரிய விருட்சங்களாக நிற்கின்றன. நிழலையும் அழகையும் தருகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோண மலை, மன்னார், மட்டக்களப்பு என எல்லா நகரங்களிலும் இதனைக் காணமுடியும். பல சவுக்கு மரத்தோப்புகளையும் தேக்குமரக் காடுகளையும் கூடதொடக்கி வைத்தவர்கள் அவர்கள்.

எந்தக் கூச்சமில்லாமல் அவற்றைப்பயன்படுத்தியும் அனுபவித்தும் வரும்நாங்கள் எங்கள் நிலத்தில் எங்களுக்காக ஏன் மரங்களை நடுவதற்கு யோசிப்பதில்லை.

முன்னர் எங்கள் வாழ்க்கை அமைப்பில் மரங்களை நடுவது ஒரு பண்பாக, முக்கியமான ஒரு நடத்தையாக இருந்தது.

மரணச் சடங்குகளின் போதான கிரியைகளில் கூட மரத்தை நடுவது மரங்களின் முக்கியத்துவத்தைக் காட்டியது.

ஒரு மனிதனின் மரணத்தில் கூட அவனுடைய நினைவுக்கு ஒரு மரம் நாட்டப்படுகிறது. அவனில்லாமல் போகையிலும் ஒரு மரம் புதிதாக வளர்க்கப்படுகிறது.

ஆனால், இது பின்பு வெறும் சம்பிரதாயமாக்கப்பட்டு விட்டது. இப்போது அப்படி நடப்படும் மரங்கள் அடுத்தவாரமே பட்டுத்தீய்ந்து போகிறது. இது ஒரு வகையில் நாம் இறந்தவருக்கு அளிக்கும் போலியான ஒரு செயற்கைதான். அவருடைய நினைவுக்கு அளிக்கும் அவமதிப்புத்தான்.

எங்களுடைய சமகால வாழ்க்கை அனுபவங் களினூடாகப் பார்த்தாலே சிலவற்றைப் புரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கேற்பட்ட இடப்பெயர்வுகளின் போதும் பிற சந்தர்ப்பங்களிலேற்பட்ட போராட்ட நடவடிக்கைகளிலும் ஆறுதலளித்தவை காடுகள்தான். மரங்கள்தான்.

பல குடியிருப்புகளாகவும், பாடசாலைகளாகவும் சனங்கள் கூடுமிடங்களாகவும் மரங்களேயிருந்தன.

எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை இன்னும் தீராத நிலையில் இப்போது அந்த மரங்களையே அழித்துவிட முயல்வது இன்னும் கவலையளிக்கிறது.

நாளைக்கு நாங்கள் வெறும் வானத்தின் கீழேயா நிற்பது தலையில் கைகளை வைத்துக்கொண்டு?

வெளிவாசல் பாலன்

---

# ஊக்கமாத்திரை



## சிந்திப்போம்... செயற்படுவோம்...

மனதில் படுபவை எல்லாவற்றையும் வெளியில் சொல்ல வேண்டும் என்பதில்லை. அதேநேரத்தில் மனதில் ஒன்று வெளியில் ஒன்று என்பதும் தேவையற்றது. பக்குவப்படாத மனம் தாறு மாறாக எண்ணத்தொடங்கும் .அது மனதிற்குள்ளே இருந்து மறையட்டும். அந்த எண்ணங்களுக்கு எழுத்து வடிவமோ, சொல் வடிவமோ தராதீர்கள். அப்படி வடிவம் தருவதன் மூலம் நல்ல பெயரை விட பொல்லாப்பே மிஞ்சுகிறது.

மனதில் எண்ணுவதை எல்லாம் அப்படியே கக்கிவிடாமல் சொல்ல வேண்டியதை மட்டுமே சொல் பவர்களும், எழுதவேண்டியதை மட்டுமே எழுதுபவர் களுமே, இன்றைய உலகில் சிறந்த பண்பாளர்களாக, உச்சி மேல் வைத்து போற்றத்தக்க உத்தமர்களாக விளங்குகின்றார்கள்.

எனக்கு எதையும் மறைக்கத்தெரியாது; பட்டென்று சிதறுகாய் அடிக்கிற மாதிரி கேட்டுவிடுவேன்- யார் என்பதைக்கூட பார்க்கமாட்டேன்; என்பதை தங்கள் இயல் பாகக் கூறுபவர்கள் இனிச்சற்றுச் சிந்தியுங்கள்; சிந்திக்கவேண்டும்.

நீங்கள் உங்கள் வாழ்நாளின் வரலாற்றுப் பக்கங்களைப்புரட்டுங்கள். இப்படிப்பட்ட உங்கள் இயல்பால் அடைந்துகொண்ட கஷ்ர, நஷ்டங்களை மீட்டுப்பாருங்கள். கஷ்ரமாவது; நஷ்டமாவது; நான் அடைந் தவை. நற்பலன் தான் என வாதம் புரிவீர் களானால்; நீங்கள் பலராலும் விரும்பப் படுகிற நபராக விளங்குகிறீர்களா?! என்பதைச்சிந்தித்துப்பாருங்கள். இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

எதையும் வெந்ததும் வேகாததுமாக கொட்டித்தீர்க்கக்கூடாது. காரணம் அதை ஏற்பவர்களால் ஜீரணம் செய்யமுடியாமல் போய்விடும். எது ஒன்றைச் சொல்லும் முன்பும், இதைச்சொல்லவேண்டிய கட்டாயம் தான் என்ன? கேட்கும் நபர் உரியவர் தானா? நாம் சொல்லும் நேரம், காலம், இடம் சரிதானா? இதன் பின் விளைவுகள் என்னவாய் அமையும் என்றெல்லாம் சிந்திக்க வேண்டும்.

எனவே!

கொதிக்கும் உணர்வுகளுக்கு அறிவு என்னும் நீரை ஊற்றி ஆற்றுவோம்; கட்டுக் கடங்கா எண்ணச்சிதறல்களுக்கு நிதானம் என்னும் அணையைக்கட்டுவோம்: துள்ளி எழுந்து வெளிவரத்துடிக்கும் கருத்துக் களின் மீது பொறுமை என்னும் வலையை வீசுவோம்.

அப்படிச்செய்வோமானால் - நம்மைச் சுற்றி இருப்பவர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடிப்போம். மற்றவர்களும் நம்மை மிகவும் விரும்பத்தொடங்குவார்கள்.

லேனாதமிழ்வாணன்

---

அதிகம் அடைய விரும்புவோருக்கு எப்பொழுதுமே அதிக குறைகள் இருக்கும் -ஹோரஸ்

# தாமரைச்செல்வியின்

# பச்சை வயல் கனவு

## தொடர்- 02

'சிவம்.... சிவம்.... டேய் சிவத்தான்' கூப்பிட்டுக் கூப்பிட்டு ஆச்சி அலுத்துப் போனாள். வளவு முழுக்கதேடினாள். வெய்யில் மறைகின்ற நேரமாகி விட்டது. மத்தியானம் ஒடியல் புட்டும் நெத்தலி மீன் குழம்பும் சாப்பிட்டுவிட்டு தலைவாசல் திண்ணையில் சிறிது நேரம் படுத்திருந்தான்.

ஆச்சி மூலை வளவில் ஆட்டுக்கு குழை ஒடித்துப் போட்டு விட்டு வந்து பார்த்தாள் படுத்திருந்தவனைக் காண வில்லை.

இன்னமும் வரவில்லை. ஆச்சி பனை ஓலையால் அடைத்திருந்த வேலிக்கு மேலாக எட்டிப் பக்கத்து வீட்டைப் பார்த்தாள்.

"அக்காள்.... அக்காள்"

சத்தமாய் குரல் வைத்தாள்.

"அக்காள்! உவன் சிவத்தானைக் கண்டியே..."

"இஞ்சை வரேலையடி எங்க போனவனாக்கும்."

"போன இடம் சொன்னால் நான் ஏன் தேடப்போறன். தரவைக்குப் போய் மாடுகளை சாய்ச்சுக் கொண்டு வரவேணும் இவனைக் காணேல்லை. எக்கணம் மனிசன் வந்து கொல்லப்போகுது."

"அவன் எங்க போறது. புளிவெட்டைக்குத்தான் விளையாடப் போயிருப்பான்" என்றாள் செல்லாச்சி.

"போற இடம் சொல்லியிட்டுப் போறேல்லை..." ஆச்சிக்கு யோசனையாய் இருந்தது.

"ணேய் ஆச்சி..."

வாசல் படலையில் குரல் கேட்டது.

எட்டி நடந்து ஆச்சி முற்றத்துக்கு வந்தாள். இடுப்பிலிருந்து நழுவும் துண்டை கையால் இழுத்துப் பிடித்துக்கொண்டு நடராசு நின்றான்.

"என்னடா பெடியா"

"சிவம் அண்ணை புளி வெட்டையில கிளித்தட்டு மறிக்கிறார். விளையாடிப்போட்டு பொழுதுபட தரவைக்குப் போய் மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு வாறாராம். சொல்லிவிடச் சொன்னவர்" ஆச்சிக்கு கோபம் வெடித்துக் கொண்டு கிளம்பியது.

"இருவது வயதாச்சு. இன்னமும் விளையாட்டே ..." "ஓம் ஆச்சி. கிளித்தட்டில சிவம் அண்ணையட்ட ஒருதரும் உச்ச ஏலாது.இப்பவே நாலு பழம் எடுத்திட்டார்." ஆச்சியின் கோபம். புரியாமல் நடராசு சந்தோசத்தோடு விபரித்தான். "விளையாட்டுப் பார்க்க நான் போறன். அப்புட்டச் சொல்லி விடணை." நடராசு திரும்பி ஓடிப்போனான். ஒழுங்கையில் புழுதி பறந்தது. ஆச்சி ஒரு நிமிடம் படலையடியிலேயே தயங்கி நின்றாள். பிள்ளையின் போக்கு கவலையைத்தந்தது. மாட்டுச் சவாரி அல்லது கிளித்தட்டு மறிப்பு இவைகளை விட்டால் அவன் வேறொன்றும் செய்வதில்லை. அப்பு தட்டத்தனிய தோட்டத்தரையில் நின்று பாடுபடுகிறாரே என்ற எண்ணம் வருவ தில்லை. கல்லுமூலைக்குப் போய் தன்னால் தோட்டம் செய்ய முடியாது என்று சிவம் சொல்லிவிட்டதில் ஆச்சிக்கு மிகுந்த மனவருத்தம். இருக்கின்ற 20 பரப்பு வயலை யும் அப்புவோடு போய் கவனித்துக்கொள்ள மாட்டான்.

இவனை என்ன செய்வது என்று தெரியவில்லை " என்னடி யாத்த சிவத்தான் வந்திட்டானே வேலிக்கு மேலால் செல்லாச்சி அக்காவின் குரல் கேட்டது.

"இல்லை அக்காள் அவன் அங்க கிளித்தட்டு மறிக்கிறானாம் வரேக்க மாடு களைக் கொண்டு வாறானாம். " ஆச்சி அவிழ்ந்த தலைமயிரை அள்ளி உயத்தி முடிந்து கொண்டு பனைமட்டைகளினால் வரிந்திருந்த குசினிக்குள் நுழைந்தாள். அன்னம் தேனீர் போட்டுக் கொண்டிருந்தாள்.

பதினெட்டு வயதாகிற இவளுக்கு இன்னமும் கலியாணம் செய்து வைக்க முடியவில்லையே என்ற கவலை நெஞ்சில் பெரு நெருப்பாய் எரிந்தது. வண்டில்கார சின்னையனுக்கு அன்னத்தைக் கட்டிக் கொடுக்க பேச்சு நடக்கிறது. சின்னையன் கள்ளுக்குடிப்பதாக யாரோ கதைத்தார்கள் என்று சிவத்துக்கு இதில் அவ்வளவு விருப்பம் இல்லை.

இந்த இடமும் தட்டிப் போய் விடுமோ என்று ஆச்சிக்குப் பயம் வந்துவிட்டது. எப்பதான் இந்தப் பெட்டைக்கு ஒரு பலன் வரப்போகுதோ என்று ஏக்கமாய் இருந்தது.

பளபளவென்று மினுக்கிய மூக்குப் பேணியில் தேனீரை ஊற்றிய அன்னம் ஆச்சி யிடம் நீட்டினாள். ஒரு துண்டுப் பனங் கட்டியும் கொடுத்தாள். "இந்தா... தேத்தண்ணியைக் குடியணை" குசினிவாசல் குந்தில் ஆச்சி அமர்ந்து கொண்டு தேனீரை பனங்கட்டியுடன் குடிக்கத் தொடங்கினாள்.

மூக்குத்தி மின்னிய மகளின் முகத்தைப் பார்க்கப் பார்க்க ஆச்சிக்கு ஆற்றாமை பொங்கியது. கறுப்பு நிறமென்றாலும் களையான முகம் எண்ணெய் வைத்து படிய



இழுத்து கொண்டை முடிந்திருந்தாள். காது மடலில் வாளி, முத்து வைத்த முருகு கட்டை, காதுப்பூ, தோடு என்று வரிசையாக போட்டிருந்தாள். எல்லாம் மூத்தவன் கொண்டு வந்து தந்த காசில் அப்பாத்துரை பத்தரிடம் சொல்லி செய்வித்தது. இவளுக்கு ஒரு கலியாணம் ஒப்பேறுதில்லையே என்ற கவலைதான் ஆச்சிக்கு.

மனிசனும் கிடந்து மண்கொத்திக் கஸ்ரப்படுகுது. மூத்தவன் அங்க கிளிநொச்சிக் காட்டுக்க கிடந்து வயல் செய்து காயுது. ஆர்தான் முன்னுக்கு நிண்டு பேசிறது.

ஆச்சி குறுக்குக்கட்டின சேலையை இன்னும் இறுக்கி முடிந்தபடி காதுக்கடுக்கன் ஆட எழுந்து முற்றத்துக்கு வந்தாள்.

வெய்யில் நன்றாக மறைந்து விட்டது. வீட்டுக்குப்பக்கத்தில் போடப்பட்டிருந்த அட்டாளையில் ஓலைப்பாயில் பனாட்டுக் காய்ந்து கொண்டிருந்தது. அது அன்னத்தின் வேலை.

ஆச்சி முற்றத்தில் நின்று படலையைப் பார்த்துக் கொண்டிருந்த போதே அப்பு மண்வெட்டி கடகத்துடனும் சேறு அப்பிய கால்களுடனும் உள்ளே வந்தார். ஆச்சி சட்டென்று பின் பக்கமாய் போய்விட்டாள். அப்பு கிணற்றடிக்குப் போய் கால் முகம் கழுவிக்கொண்டு வந்து திண்ணையில் அமர்ந்தார். "இந்தாணை அப்பு தேத்தண்ணி" அன்னம் தேனீர்க் கோப்பையையும் பனங்கட்டியையும் கொடுத்தாள்.

"எங்க பிள்ளை. ஆச்சியைக் காணேல"

"ஆடு கட்ட பின் வளவுக்கு போயிட்டா"

"இவன் சிவத்தான் மாடு சாய்ச்சுக்கொண்டு வரேலையே"

"வந்திடுவார் அப்பு. இன்னும் பொழுது படேலைத்தானே"

. அன்னம் தயங்கியபடியே சொன்னாள்.

"என்னத்த வாறது. அங்க வெட்டையில நிண்டு கிளித்தட்டு மறிக்கிறானாம். உவன்ர வயதில மூத்தவன் எங்களுக்கு பிறந்திட்டான். இவன் கிளித்தட்டு மறிச்சுக்கொண்டு திரியுறான். எல்லாம் தாய் குடுக்கிற இடம். கண்ட கண்ட பெடியளோடதான் விளை யாட்டு, இண்டைக்கு வரட்டும்."

அப்புவுக்கு கோபம் வந்து விட்டால் தன்பாட்டில் புறுபுறுத்துக் கொண்டேயி ருப்பார். முன்னால் நிற்க ஆச்சிக்குப் பயம். அதனால் தான் ஏதாவது சாட்டு வைத்து எட்டியே நின்று விடுவாள். •

நாலைந்து பெண்கள் தலையில் கடகங்களுடன் விசுக்விசுக்கென்று ஒழுங்கையில் நடந்து போனார்கள். அப்பு கூர்ந்து பார்த்துவிட்டு "இண்டைக்கு புதன் கிழமையல்லே கொடி காமம் சந்தைக்குப் போயிட்டு வருகுது களாக்கும். வண்டில் கிடைக்காமல் நடந்து வருகுதுகள் போல. பிள்ளை! உவள் சின்னாச்சி போறாளோ பார்"

அன்னம் படலையடிக்குப் போய் ஒழுங்கையில் எட்டிப்பார்த்தாள்.

"ஓம் அப்பு போறா. கூப்பிடட்டே"

"வேண்டாம் மோனை. நான் காலமை போய்க் கதைக்கிறன்."

"அண்டைக்கு அஞ்சுரூவா யாவாரத்துக்கெண்டு கைமாத்தாய் வாங்கினவள் இன்னும் தரேலை. நான் கேட்டாலும் எண்டு எட்டி எட்டி நடந்து போறாளாக்கும், சின்னய்யன் வண்டில் ஓடி உழைச்சுக்கொண்டு வந்து வீட்ட குடுக்கிறே லையாக்கும்"

அன்னத்தின் முகம் ஒரு வினாடியில் வாடிப்போனது.

சிறிது நேரம் பேசாமல் நின்றாள். வேலிக்கு மேலாக அவள் பார்வை பாய்ந்தது. விளக்குக் கொழுத்திற நேரமாச்சு. இந்த அண்ணையைக் காணேலை.

இண்டைக்கு வந்து பேச்சு வாங்கப் போகுது.

அன்னம் கவலையுடன் ஒழுங்கையைப் பார்த்தாள். அப்பாடா.. தூர வருவது சிவம் தான்.

கழுத்து மணி அசைய சிவலையும் வெள்ளையும் வந்து கொண்டிருந்தன. குதிரை போன்ற கம்பீர நடை. செங்காரிப் பசுவும் சிவப்பிப் பசுவும் தொடர்ந்து வந் தன. முழங்காலுக்கு மேலாக நாலு முழவேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு கையில் நீளக்கம்புடன் சிவம் அவசரமாய் நடந்து வந்தான். முகத்தில் வேர்வைத் துளிகள் படிந்திருந்தன.மெல்லிய உயர மான தோற்றம், சமீப நாட்களாய் அதிக கவனம் செலுத்தி வளர்க்கப்பட்ட இளமீசை. நாடியில் ஒரு சிறு கறுப்புப் பொட்டு மச்சம். தலை கலைந்து நெற்றியில் பாதியை மறைத்திருந்தது.

பொழுது இருள்வதற்குள் குறைந்தது அப்பு தோட்டத்திலிருந்து வருவதற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற அவசரம் அந்த நடையில் இருந்தது. படலை கடந்து உள்ளே வரும் போதே அப்புவின் செருமல் சத்தம் கேட்க 'பக்' கென் றது. தலைகுனிந்தபடி மாடுகளை அவைகளுக்குரிய கொட்டில் களுக்குள் கட்டிவிட்டு வீட்டைச் சுற்றிப்போய் குசினியின் பக்கத்து தாழ்வாரத்தில் அமர்ந்து விட்டான்.

அந்த நேரத்தில் கையில் ஒரு சாக்கு முடிச்சுடன் வேலாயுதம் உள்ளே நுழைந்தான். அவனது வருகை அந்த சூழ்நிலையை சட்டென்று இலகுவாக்கியது.

"இஞ்ச...மூத்தவன் வாறான் வா மோனை.."

அப்பு எழுந்து போய் கையில் கொண்டு வந்திருந்த சாக்கு முடிச்சை வாங்கிக் கொள்ள வேலாயுதம் களைப்புடன் திண்ணையில் அமர்ந்தான்.

"எப்பமோனை, கிளிநொச்சியிலயிருந்து வெளிக்கிட்டனி"

ஆச்சி வாஞ்சையோடு கேட்டாள்.

"காலமை வெளிக்கிட்டனானணை வண்டில் ஒண்டும் கிடைக்கேலை. மத்தி யானம் கரிக்கோச்சியில வந்து சாவகச்சேரியில இறங்கி நாலுகட்டை நடந்து வாறன். இலங்கைக்கு சுதந்திரம் கிடைச்சிருக்காம்எண்டு வழியெல்லாம் சனம் கதைச்சுக் கொண்டிருக்குதுகள். எனக்கு நாலு நாளாய் காய்ச்சல் குணமாய் இருந்தது. அதுதான் வந்திட்டன்."

"அய்யோ உதுக்குத்தான் அந்தக் காட்டுக்க போகாத எண்டனான்"

"இஞ்ச நீ ஒப்பாரி வைக்காத பேசாமலிரு"

அப்பு அதட்டி விட்டு வேலாயுதனுக்கு பக்கத்தில் அமர்ந்தார்.

வேலாயுதம் கிளிநொச்சிக்குப் போவதில் அவருக்கும் கூட அவ்வளவு விருப்பமில்லைத்தான். சாவகச்சேரி தாண்டி எந்த இடமும் அவர்கள் அறிந்ததில்லை. கிளிநொச்சிக்குப் போறன் என்று மூன்று வருஷத்துக்கு முன்பு வேலாயுதம் கேட்டபோது யாரும் சம்மதிக்கவில்லை.

ஆச்சி குரல் வைத்து அழவே தொடங்கி விட்டாள்.

அடர்ந்த பற்றைகளும் உயர்ந்த மரங்களும் உள்ள காட்டுப்பிரதேசம். யானைகள் உலவும் ,நுளம்புகள் பறக்கும் பிரதேசம் என்ற அளவில் தான் அவர்கள் கிளி நொச்சி பற்றி அறிந்திருந்தார்கள்.

ஆனால் அவர்களை சமாதானப் படுத்தி பிடிவாதமாய் வேலாயுதம் கிளி நொச்சிக்குப் போய் விட்டான்.

போனவருஷம் மாரிக்கு குத்த கைக்கு காணி எடுத்து விதைத்தது என்று நெல் மூட்டைகளை வண்டியில் கொண்டு வந்து தந்த போது அவர்களாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இங்கே ஊரில் இருக்கும் வயல்களில் விளையும் நெல் அவர்களுக்கு போதுமானதாய் இருந்த தில்லை. " யானைக்காடு மோனை கவன மாய் இரு." என்று நூறு தரம் திருப்பித் திருப்பி சொல்வார்கள்.

திண்ணையிலிருந்த வேலாயுதத் திடம் அப்பு சிவத்தைப் பற்றிய முறைப் பாடுகளை வரிசையாய் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வேலாயுதம் கடைசியாச் சொன்னான். " என்னோட அவனையும் கிளி நொச்சிக்கு கூட்டிக் கொண்டு போறன்." "அங்கே வந்து அவனும் என்னோட சேர்ந்து உழைக்கட்டும்." ஒரு நிமிடம் அங்கே அமைதி நிலவியது. ஆச்சி கவலையோடு அப்புவைப் பார்த்தாள். அந்த அமைதியை கிளித்துக் கொண்டு சிவத்தின் குரல் முணு முணுப்பாய் கேட்டது. "கிளிநொச்சிக்கு நான் போகமாட்டன் என்னால ஏலாது"

(தொடரும்...)

உனக்குக் கிட்டியவற்றைக் கொண்டு, நீ திருப்தியாய் இரு - புனிதர் பவுல்




# காத்துக்கொண்டிருக்கிறேன்...

அவனை எங்களுக்கு முன்பின் தெரியாது. யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து புதுக்குடியிருப்பில் தங்கியிருந்த வீட்டுக்கு வரும், எங்களுக்கு அறிமுகமான போராளி ஒருவனுடன் அவன் ஒருநாள் வந்தான். முதல் முறை வந்த பொழுது அவன் அதிகம் பேசவில்லை. பெயரைக் கேட்ட பொழுது பெயரை மட்டும் சொன்னான். மிகவும் அமைதியாக இருந்தான். ஐம்பதுகளில் இருந்த என்னையும் மனைவியையும் உற்று உற்றுப் பார்த்தான். கண்களில் இனம் புரியாத ஏக்கம் தெரிந்தது. கூட்டி வந்த போராளி எங்களை அப்பா அம்மா என்றே அவனுக்கு கூறி வைத்தான். "இங்காலப்பக்கம் வந்தால் இங்க வந்து போ என்று" அவனிடம் சொல்லி வைத்தான். கொடுத்த தேனீரை அமைதியாகக் குடித்தான். கப்பை கிணற்றடியில் கழுவி விட்டு கொண்டு வந்து என் மனைவியின் கைகளில் கொடுத்தான். "போய்த்து வாறன் அம்மா" என்றவனின் குரலில் தென்தமிழீழ வாசனை பதின்மூன்று வருடங்களுக்கு மேல் அங்கே பணியாற்றிய எனக்கோ என் மனைவிக்கோ அவன் பிறப் பிடத்தை அறிவதில் சிக்கலே இருக்கவில்லை.

இரண்டாம் முறை வந்த பொழுது சிறிது கலகலப்புத் தெரிந்தது. கடற்புலிகளில் இருப்பதாகக் கூறினான். என்னைவிட என் கூறினான். என்னைவிட என் மனைவியிடம் அம்மா அம்மா என்று வாய் நிறைய கதைத்தபடி வீட்டினுள் வலம் வந்தான். அன்று வந்த வேளை மத்தியானச் சாப்பாட்டு வேளையாக இருந்தது. "சாப்பிடன் தம்பி" என என் மனைவி கேட்டாள். "போட்டு வாங்கோ" என்றவன் அவள் பீங்கானோடு வந்ததும் "பெரட்டித் தாங்கம்மா.... தின்னுறன்" என்றான். முதல் நாள் கண்களில் தெரிந்த ஏக்கத்தின் பொருள் சிறிது புரிவது போலிருந்தது. என் மனைவியும் கண்ணீரை அடக்கப் போராடுவது தெரிந்தது. அவள் பிரட்டிக் கொடுத்த கவளங்களை ஆசை ஆசையாக வாங்கித்தின்றான். பசியில் விழுங்குவதாகத் தெரியவில்லை. ஏதோ நீண்ட நாள் ஏக்கம் தீரும் அறிகுறிதான் தெரிந்தது. "சாப்பிடு அப்பன்... சாப்பிடு அப்பன்" என்று சொல்லிச் சொல்லி முதல் பீங்கான் சோற்றைக் கொடுத்துவிட்டு மறுபீங்கானை போடத் தொடங்கியபோது "ஒள்ளமா போடுங்கம்மா... கொள்ளையாத் திண்டிட்டன்" என்றான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து இருபிள்ளைகளுடன் நடந்து வந்த போது வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளை இழந்து விட்டு வந்திருந்தோம். இடையில் பிள்ளைகள் இருவரும் தாகத்தால் பாதையோரம் சுருண்டு படுத்தது.... நாவற்குழிப்பாலத்தின் மேல் வரும் போது பெய்த மழை நீரை குடையில் ஏந்திக் குடிக்க நேர்ந்தது... எல்லாமே எங்கள் மனதுப் பாரத்தை அதிகரித்து விட்டதுடன், இங்கு வந்த பின் மூத்தவள் இயக்கத்துக்குப் போய் மாவீரராகியதோடு பாலைவனமாக போன எமது வாழ்வில் பெய்த மழைத் வரவு இருந்தது. அவர்கள் எம்மீதுகாட்டிய பாசம் இருந்தது. எம்மால் முடிந்த அளவுக்கு அவர்கள் மீது அன்பு காட்டினோம். முதல் முறை வந்தபோது, பேசாமல் அமர்ந்திருந்த அவன் இப்போ "ணேய் அம்மோய்... பசிக்குதணை... சோறு தீத்தி விடணை" என்கிற அளவுக்கு முன்னேறியிருந்தான். எங்கள் இழப்புகளின் கனதியை குறைக்க முயற்சி செய்வான். நல்லாய் பம்பலடிக்கத் தொடங்கினான். பயிற்சியில நெய் எடுக்கிறவிதம் பற்றிச் சொல்லுவான். எப்படி பயிற்சியில பம்ஸ் அடிக்கிறதெண்டு சொல்லுவான் தங்களுக்குள் நடந்த குறும்புகளைச் சொல்லுவான் நாங்கள் இருவரும் மனம் விட்டுச்

எதுவும் சொல்லவேமாட்டான். இப்பொழுதெல்லாம் அவனைக் கண்டால் ஏதோ எங்கட சொந்தப் பிள்ளைவாற உணர்வு தான் வந்தது. பலவருடம் மட்டு நகரில் இருந்ததால் எனது பேச்சு வழக்கில் மட்டு நகர் பாணி படிந்திருந்ததாக வேறு நண்பர்கள் சொல்வார்கள். அதுதான் அவன் என்னோடு அவ்வளவு நெருக்கமாக ஈர்க்கப் பட்டதற்கு காரணமாக இருக்கலாம்.

சில வேளைகளில் ஏதாவது ஆங்கிலச்



சொற்களுக்கு விளக்கம் கேட்பான். அவனது கொச்சையான உச்சரிப்பைக் கேட்டே மனம்

னான்.. எனக்கு ஏதோ புரிவதும் புரியாததுமாக இருந்தது.

மீண்டும் சில நாட்கள் அவனைக் காணவில்லை. அவனை முதலில் கூட்டி வந்த போராளி ஒருநாள் வந்தான். அந்தப் போராளி ஒரு கரும்புலி என்பது எப்படியோ எனக்குத் தெரிந்திருந்தது. அவன் தயங்கித் தயங்கி எங்களுக்குச் சொன்னான் "ணேய் அம்மா...... அவனும் என்னைப் போல தான்... கெதியில பணிக்கு போய் விடுவான்...." எங்கள் மனங்களில் ஏதோ பாறாங்கல் விழுந்தது போல் உணர்வு. நீண்ட நேரம் என் மனைவி அழுதுகொண்டிருந்தாள். ஒருவாறு அவளைத் தேற்றினேன். அவளுக்கு முன்னால் என்னால் அழமுடியவில்லை. அவள் இரவு உறங்கியபின், மனதின் பாரம் நீங்கு மட்டும் அழுது தீர்த்தேன். அதற்குப் பின் எங்கள் நெருக்கம் அதிகரித்துப் போனது.

திடீரென ஒருநாள் அவனது தாயும் தகப்பனும் மட்டக்களப்பில் இருந்து எங்கள் வீட்டைத் தேடி வந்திருந்தார்கள். அலுத்துக் களைத்துப் போய் வந்திருந்த அவர்களை ஓய்வு எடுக்கச் செய்து உணவளித்த பின் அவனை விடக் கலகலப்பாய் கதைக்கத் தொடங்கினார்கள். லீவில் அவன் வந்து

ருக்கும் காட்டாத. ஒருதருக்கும் குடுக்கவும் கூடாது என்னணை" சொல்லியபடி அவள் கையில் படத்தை கொடுத்தான். மகிழ்ச்சியோடு அதைப் பார்த்தவள் அதை என்னிடம் தந்தாள். என்னால் சிரிக்க முடியவில்லை. அவன் அணிந்திருந்த அந்த உடை...அந்த பெரே.. அதிலிருந்த அந்தச் சின்னம்... பக்கத்தில் நின்று கொண்டிருந்த தேசியத்தலைவர்.. எல்லாம் சேர்ந்து உலுப்பிவிட்ட துக்கத்தை வெளியே காட்டாமல் ஒப்புக்காகச் சிரித்தேன். அந்தப்படம் சொன்ன செய்தி புரியாமல் என் மனைவி மீண்டும் மீண்டும் அதைப் பார்த்துச்சிரித்தபடியிருந்தாள். சிறிது நேரத்தில் அவன் போய்விட்டான்.

சில நாட்களுக்கு முன் அவன் வந்தான். "இரண்டு நாள் லீவு அப்பா உங்களோட இருந்திட்டுப் போகலாம் எண்டு வந்தனான்" என்றான். பிரியும் நேரம் வந்து விட்டது என எனக்குப் புரிந்தது. வழமை போலவே என் மனைவி அவனோடு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள். மற்ற நாட்களை விட கலகலப்பாய்கதைத்துக் கொண்டிருந்தான்.இரவு எங்களருகிலேயே படுத்துக்கொண்டு வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு தூங்கிப்போனான். விடிந்ததும் போக ஆயத்தமானான். நான் அவனைக் கொண்டு போய் பஸ்சில் ஏத்திவிட ஆயத்தமானேன். வழக்கத்துக்கு மாறாக என் மனைவியை கட்டிப்பிடித்துக் கொஞ்சினான். என் மகனையும் கட்டிப் பிடித்துக் கொஞ்சினான்.

"போயிட்டு வாறன் அம்மா.. போயிட்டு வாறன் தம்பி" என்று விடை பெற்றுக் கொண்டான். நான் மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்ய வெளிக்கிட்டு வெளியே விறாந்தைக்கு வரும்போது அவன் எனக்கு முன்னால் எதற்காகவோ கீழே குனிவது தெரிந்ததில் நான் தரித்துக் கொண்டேன். பின்னால் திரும்பி "சைக்கிள் திறப்பைத் தாங்கோ.." என்று கேட்டுக் கொண்டிருக்கும் போது எனது கால்களில் ஏதோ பாரம் தெரிந்தது.

**அவன் அணிந்திருந்த அந்த உடை... அந்த பெரே.. அதிலிருந்த அந்தச் சின்னம்... பக்கத்தில் நின்று கொண்டிருந்த தேசியத் தலைவர்.. எல்லாம் சேர்ந்து உலுப்பிவிட்ட துக்கத்தை வெளியே காட்டாமல் ஒப்புக்காகச் சிரித்தேன். அந்தப்படம் சொன்ன செய்தி புரியாமல் என் மனைவி மீண்டும் மீண்டும் அதைப் பார்த்துச்சிரித்த படியிருந்தாள். சிறிது நேரத்தில் அவன் போய்விட்டான்.**

இருவரும் மனம் விட்டுச் சிரிப்போம். அவன் வரும் கொஞ்ச நேரத்துக்காவது எங்கள் சோகங்கள் எங்களிடமிருந்து எங்கோ போய் விட்டிருக்கும். இப்படியே சிறிது காலம் போனது.

இப்போதெல்லாம் அவன் வந்தால் அப்பா அப்பாவென்று அழைப்பான். வசனத்துக்கு மூன்று அப்பாவாவது வரும். மனைவியுடன் கதைக்கும் போது வார்த்

**அனபாயன்**

தைக்கு வார்த்தை அம்மா அம்மா என்று வரும். அந்த நாட்களிலே இவன் எப்ப வருவான் என்று ஏங்கத் தொடங்கி விட்டிருந்தோம். வெள்ளிக் கிழமைகளில் வாசலைப் பார்த்த படியிருப்போம். அன்றைக் குத்தான் மெடிக்சில் கிளினிக் நாள். ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி கிளினிக் வந்து, வீட்டுக்கு வராமல் போக மாட்டான். கடலில் ஏதாவது சண்டை நடந்தால் இவனை நினைத்து என் மனைவி அழுவாள். புலிகளின் குரலில் வீரச்சாவுகள் அறிவிக்கப்படும் வரை ஓயமாட்டாள். இது அவனுக்கும் தெரியும். அடுத்த நாள் சிரித்தபடி வருவான். "என்னணை நான் முடிஞ்சிது எண்டு அழுதனியே" எண்டு கேலி செய்வான். போய் விடுவான். தான் உயிரோடிருக்கிறதைக் காட்டத்தான் வாறவன் எண்டது எனக்கு நல்லாவே தெரியும்.

சில வேளைகளில் "எங்க மகனே நிற்கிறாய்? என்று அம்மா

விட்டுச் சிரிப்போம். பின்பு உச்சரிப்பையும் திருத்தி விளக்கத்தையும் கொடுப்பேன். மகிழ்ச்சியோட போவான்.

முன்பு சில போராளிகளோட நெருக்கமாக பழகி, அவர்கள் திடுதிடுப்பென்று வீரச்சாவு அடைய இதயம் கனத்துப் போக இனி இவங்களோட கதைக்கவே கூடாது என்ற சுடலை வைராக்கியத் தோடதான் நான் இருந்தனான். ஆனா இவன் அந்த வைராக்கியத்தையெல்லாம் கரைச்சுப் போட்டு மனசை நிறைத்துக் கொண்டு விட்டான்.

ஒரு முறை சில மாதங்களாக அவனைக் காணவில்லை. வாற போற போராளிகளையெல்லாம் அவன் எங்க.. அவன் எங்க... என்று என் மனைவி துழைத்தெடுத்தாள் தெரியாதம்மா என்று தான் பதில் வரும் அல்லது வருவானம்மா என்று பதில்வரும். திடீரென்று ஒரு நாள் அவன் வந்தான். மெலிந்திருந்தான். சிவந்திருக்கும் அவன் முகம் வெய்யிலில் கறுத்துப் போயிருந்தது. "எங்கமகனே போனனீ?" என்று கேட்ட மனைவிக்கு வழக்கமான அதே மழுப்பல் தான். " பயிற்சியணை அம்மா... வாட்டிப் போட்டாங்கள்..." எண்டவன் "சோறு போடணை.. உன்ர சோறு சாப்பிடத்தான் ஓடி வந்தனான்" என்று கதையை மாற்றி

நின்ற பொழுது எங்களை பற்றி வாய் ஓயாமல் கதைத்ததை சொன்னார்கள். சந்திக்க வரும்படி விசளம் அனுப்பியிருந்ததாகச் சொன்னார்கள். அடுத்தநாள் நான் உரிய இடத்துக்கு அறிவித்ததும் அவன் அவர்களைக்காண வந்தான். அவர்களுடன் இரவு வெகு நேரம் கதைத்துக் கொண்டிருந்தான். அதற்கிடையிலும் அம்மா... அப்பா என்று எங்களை அழைத்தபடியிருந்தான். காலையில் போய் விட்டான். அடுத்தநாள் காலை பயணம் கிளம்பிய அவனது அம்மா "உங்கட மவனை நல்லாப் பாத்துக் கொள்ளுங்கோ" என்று சொல்லி விடைபெற்ற போது அந்தக் குரலில் லேசான பொறாமை எதிரொலிப்பது போல் இருந்தது.

வழமை போலவே ஒரு நாள் திடீரென வந்தான். பொக்கற்றுக்குள்ளால் ஒரு போட்டோவை இழுத்தெடுத்தான். "நெடுக படம் கேட்டனியணை இந்தா படம் ஒருத

திரும்பிப் பார்த்த நான் திடுக்கிட்டுப் போனேன். அவன் தன் இரு கைகளாலும் காலைத் தொட்டு நிமிர்ந்து கொண்டிருந்தான். கண்களில் கண்ணீர். பிரியாவிடை அது என்பது தெரிந்துதான் இருந்தது. அவனைக் கொண்டு போய் பஸ்சில் ஏத்தி விட்டு திரும்பி வரும் போது கண்களில் பெருகிய கண்ணீரைத் தடுக்க முடியவில்லை.

அடுத்த நாள் மாலையிலேயே அவனை முதல் நாள் கூட்டி வந்த போராளி வீட்டுக்கு வந்தான்.

"... அப்பா... அவன்... பணிக்கு போய்விட்டான்... "என்று என்னிடம் மட்டும் சொல்லிவிட்டு நிற்காமலே போய் விட்டான்.

இப்போது நான் அவனுக்காக கனக்கும் நெஞ்சுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.... சில வேளை அது எங்களுக்கு தெரியவராமலும் இருந்திருக்கலாம்...

கோபுரத்திலிருந்து கரைவதால், காக்கை, தெய்வபக்தி உடைய பறவையாகிவிடாது. - தாமஸ்-ஹூட்

# படித்ததில் பிடித்தது



என்னைத் தவிர மற்ற எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்கிறார்களே, எப்படி? என்று ஒரு சீடன் கேட்டான்.

குரு சொன்னார் 'அவர்கள் எதிலுமே நல்லதை மட்டுமே பார்க்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.'

## உலகம் பார்வையால் ஆனது

'நான் ஏன் நல்லதைப்பார்க்க முடியவில்லை?' என்று கேட்டான் சீடன்.



குரு சொன்னார். 'உன் உள்ளே இருப்பதையே நீ வெளியில் காண்கின்றாய். உன் உள்ளே நல்லது இருந்தால் வெளியிலும் நீ நல்லதையே காண்பாய். உன் உள்ளே தீயது இருந்தால் வெளியிலும் தீயதையே காண்பாய்.'

'உலகம் இன்பமானது' என்கின்றான் ஒருவன். 'துன்பமானது' என்கின்றான் மற்றொருவன்.

இருப்பது ஒரே உலகம் தான். அது எப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்க முடியும்?

துரோணர் தருமனை அழைத்தார். " இந்த ஊரில் கெட்டவர்கள் யாராவது இருக்கின்றார்களா, பார்த்து விட்டு வா' என்று அனுப்பினார்.துரியோதனனை அழைத்தார். இந்த ஊரில் யாராவது நல்லவர்கள் இருக்கின்றார்களா பார்த்து விட்டு வா என்று அனுப்பினார். அவனும் புறப்பட்டு போனான். ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு இருவரும் திரும்பி வந்தனர்.

ஊரில் எல்லோரையும் பார்த்தேன். கெட்டவன் ஒருவன் கூட இல்லை. எல்லோருமே நல்லவர்களாகவே இருக்கிறார்கள்' என்றான் தருமன்.

' நானும் எல்லோரையும் பார்த்தேன். நல்லவன் ஒருவன் கூட இல்லை. எல்லோருமே கெட்டவர்களாகவே இருக்கின்றார் கள்' என்றான் துரியோதனன்.

உலகம் நம் பார்வையைப் பொறுத்தது.

நமக்குள் அழகு இருந்தால் உலகமும் அழகாகத் தெரியும். நமக்குள் அசிங்கம் இருந்தால் உலகமும் அசிங்கமாகத் தெரியும்.

நாம் மகிழ்ச்சியாக இருக்கும் போது வாழ்க்கையும் மகிழ்ச்சியானதாக தோன்றுகிறது. நாம் துன்பப்படும் போது வாழ்க்கையும் துன்பமானதாகத் தோன்றுகின்றது.

உலகத்தை நல்லதாக, அழகானதாக, இன்பமானதாக ஆக்குவது நம் கையில் இருக்கிறது.

நமக்குள் நன்மையை, அழகை, இன்பத்தை நிரப்பிக்கொண்டால் உலகமும் தீயதாக, அசிங்கமானதாக ஆகிவிடும் மக்கள் தீமையை, அசிங்கத்தை, துன்பத்தை நிரப்பிக் கொண்டால் உலகமும் தீயதாக அசிங்கமானதாக, துன்ப மானதாக ஆகிவிடும்.

துரியோதனன் சுயநலமும் பொறாமையும், பேராசையும் உடையவன். அவனோடு வஞ்சகம் நிறைந்த சகுனியும் சேர்ந்திருந்தான். அதனால் மகாபாரதப் போர் வெடித்தது.

சுயநலமும், பேராசையும் உடையவன் மற்றவனைப் பொறாமையோடு பார்க்கின்றான். இதனால் பகைமை உண்டாகிறது. பகைமை அழிவைக்கொண்டு வருகிறது.

மனிதன் தன்னிடம் இல்லாததை நினைத்து துயரப்படுகின்றான். அதனால் அவனிடம் இருப்பதைக் காணத் தவறுகிறான்.

தன்னிடம் இருப்பதைக் காண்பவன் மகிழ்ச்சி அடைகிறான்.

"செருப்பில்லையே என்று கவலைப்பட்டேன் காலில்லாதவனைப் பார்த்தபோது எனக்கு கால் இருக்கின்றதே என்று மகிழ்ந்தேன். அதற்காக இறைவனுக்கு நன்றி கூறினேன்."

என்கிறான் பாரசீகக் கவிஞானி சஅதி.

ரோஜாச் செடியில் பூவும் இருக்கிறது, முள்ளும் இருக்கிறது.

"முள்ளில் பூ இருக்கிறதே" என்று ஒருவன் மகிழ்கிறான்."பூவில் முள் இருக்கிறதே"என்று ஒருவன் கவலைப்படுகிறான்.

பார்வையே இன்பத்தையும் துன்பதையும் உண்டாக்குகிறது.

விமர்சகர்களில் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் எதிலும் குறையையே காண்பார்கள்.

வண்டுகளில் இரண்டு வகைஉண்டு. ஒருவண்டு கமலத்தைத் தேடிப்போகின்றது. மற்றொரு வண்டு. மலத்தைத் தேடிப்போகிறது.

மனிதர்களிலும் இந்த இரண்டு வகை உண்டு

ஒரு நாய் தெருவில் செத்துக்கிடந்தது அதைச்சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது.

"திருட்டு நாய். எங்காவது திருடிஇருக்கும் அடித்திருப்பார்கள் அதுதான் செத்துவிட்டது" என்றான் ஒருவன்.

"நாசமாகப் போகிற நாய் இங்கே செத்துக்கிடப்பதால் தெருவெல்லாம் நாறுகிறது" என்று திட்டினான் ஒருவன்.

"அதன் உடம்பைப் பாருங்கள்..... எவ்வளவு அசிங்கமாய் இருக்கிறது" என்றான் ஒருவன்.

அப்போது,"அதன் பற்களைப்பாருங்கள் முத்துக் களைப்போல் எவ்வளவு அழகாக இருக்கின்றன." என்ற குரல் கேட்டது.

எல்லோரும்வியப்போடு திரும்பிப் பார்த்தார்கள்.

இயேசு பெருமான் நின்றுகொண்டு இருந்தார்.

இயேசு பெருமானின் மனம் அழகானது. அதனால் அவர் அழகையே கண்டார்.

உயர்ந்தவர்கள் அருவருப்பானதில் கூட அழகைத் தேடிக் காண்கிறார்கள்.

பழம் கனிந்திருக்கும் போது நறுமணம் வீசுகின்றது. அழுகிவிடும் போது துர்நாற்றம் வீசுகிறது.

சூரியன் ஒளியால் ஆனவன். அவன் தன்னையும் ஒளிரவைத்துக்கொண்டு மற்றவற்றின் மீதும் ஒளியை ஏற்படுத்துகிறான்.

அழகிய மனம் உடையவன் உலகத்தையும் அழகாக் குகிறான்.

**கவிக்கோ
அப்துல் ரகுமான்**

# குறுங்கதை

## இதுவும் ஒரு சோதனை



அந்தச் சோதனைச் சாவடியில் நான் சென்ற வாகனம் நிறுத்தப்பட்டது.

'ஏன்...'வாகன கண்ணாடி யன்னலைத் திறந்து தலையாட்டிக் கேட்டேன்.

'உங்கட;வாகனத்தைச் சோதனை செய்ய வேண்டும்.....'

'சமாதானப் பேச்சு அடிபட தொடங்கிய போது மூடப் பட்ட இந்த சோதனைச் சாவடி இன்றுதான் புதிதாக.....' வாகனத்துக்குள் கருத்துப்பரிமாறல்கள் எழுந்து கொண்டி ருந்தன.

வாகன காப்புறுதி; இந்த ஆண்டு வாகன அனுமதிப் பத்திரம்,எனது வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் எல்லாவற்றை யும் எடுத்துக்கொண்டு சோதனைச் சாவடிக்குள் நான் நுழைந்தேன்.

'மச்சான்.... எப்படி சுகமா... வானில வந்தது.... மச்சான்.... நீங்க போங்க...' சாவடிக்குள் எனக்கு தெரிந்த முகமொன்று பேசியது.

'இல்ல மச்சான். உங்கட கடமையை நீங்க செய்ய வேணும்...'

எனது பெயர்; முகவரி; வாகனப் பதிவுகள், அடையாள அட்டை இலக்கம் எனது கையொப்பம்.......

சாவடிக்கு வெளியே வந்தேன். வாகனத்தில் உள்ளவர் களை இறக்கி மூன்று பொலிஸ்காரர்கள் அடையாள அட்டை களைப்பார்த்து..... வாகனத்தில் ஏறி இறங்கி சுற்றி வந்து குனிந்து பார்த்து.......

நான் அமைதியாக நின்றேன்.

'மச்சான் என்ன இது....' சோதனை செய்த பொலிஸ்காரர்களுக்கு சாவடிக்குள் இருந்து வெளியே வந்த என்னைத் தெரிந்த பொலிஸ்காரன் என்னென்னமோ சொன்னான் ஆத்திரத்தோடு.

வாகனம் செல்ல அனுமதிக்கப்பட்டது.

எனக்கு தெரிந்த பொலிஸ்காரன், 'மச்சான் .... சொறி.....' என் றைவிங்சீற் கண்ணாடிப் பக்கம் வந்து நின்றான்.

என்னுள் புன்னகை.

'என்ன மச்சான்...?'

'இல்ல... பத்து நிமிடம் வாகனம் சோதிக்கப்பட்டது. இந்த நிமிட நேரத்தில் இந்த இடத்தை நூறு வாகனங் களாவது கடந்திருக்கும்... இனிமேல் இன்னொரு வாகனத் தைச் சோதிக்கப்போறியள்.... நீங்களும் உங்கள் சோதனை யும்....' அவனது மொழியில் சொன்னேன்.

என்ன அந்த பொலிஸ்காரன் முகத்திலும் புன்னகையா??

**திருமலைசுந்தா**



# சிதையும் உயிரும் உடமையும்

வீதித்திறப்பின் மூலம்
விடிவு வந்ததெண்டு
ஊருக்கு வந்தபோது
உயர்பாதுகாப்பு பலகையுடன்
எங்கள் வீடு.
ஆனாலும்
பொறுமையுடன்
அங்கங்கே
தெருவோரங்களில்
எம் வாழ்வு.
காலம் நகர்ந்தாலும்
கட்டிய வீட்டை
ஆச்சிக் கொருமுறை
அப்புவுடன் போய்
பார்த்துவிடும்
துடிப்பு.
கூட்டிப்போக
மனிசரில்லாததால்
துணைக்கு
நானும்.
காணியைச் சுற்றி
கட்டைகளால்
பனம் குற்றிகள்
கம்பிகளைத் தாங்கி
கலங்கிய கண்களை
கைகளால் துடைத்து
கால்களை
மெல்ல-எம்
காணிக்குள் பதித்தபோது
புரியாத
மொழியில்
எவனோ ஒருதன்
அதிகாரம்
செய்தான்
எம்மை.

அநியாயம் இது
என்று
புரியவைக்க
நினைக்கிறேன்.
பெரியவர்கள்
இருவரும்-உயிர்
துறந்ததால்
ஒத்திவைத்து
காத்திருக்கிறேன்.
அவனுக்கு
புரியவைப்பதற்காக.

**ரி.ரமேஸ்**

# க ரு ணை



*நீயேன் உடம்பை கெடுத்துக் கொண்டாய்?
மேனி மெலிந்து
தோலும் சுருங்கி
எலும்புகள்தெரிய ஏன் நலிவுற்றாய்?
உன்னுயிர்தோழன் நானிங்கிருப்பதை
ஏனோ மறந்து நீயலைந்துள்ளாய்
இப்போதே
என்னுடனேயே நீ வா?
ஆற அமரக் கட்டிலிற் சாய்ந்து
காலையாட்டி ஆட்டி
என்னுடன் பேசிக்கொண்டிரு
நோகாமல் நான்
உன் இரத்தம் கறப்பேன்
இரத்தம் சுண்டி
விருந்து நாம் உண்போம்
போகும் போது.......
உன் முதுகெலும்பில்
ஒரு சிறு துண்டு மட்டும்
தந்து நீ போகலாம்
அடிக்கடி வந்து போ.*

**ந.கிருஸ்ணராசா**




## குட்டிக்கதை

# ஆசையின் விபரீதம்

அந்தக கிராமத்தில் இராசு என்ற இளைஞன் நீண்ட காலமாகப் புல்லாங்குழல் செய்து விற்றுவந்தான். இதனால் கிடைக்கும் சொற்ப பணத்தைக் கொண்டு நோயாளித் தாயான பகவதியையும் தந்தையான சுந்தரத்தையும் காப்பாற்ற வேண்டியிருந்தது.

அந்த ஊரிலே ஏன் அடுத்த ஊர் என்றாலும் இவனது புல்லாங்குழல் என்றால் அனைவரும் விரும்பி வாங்குவார்கள். இதனால் இவனுக்குள் ஒரு சந்தோசம் எப்பொழுதும் இருக்கும்.

ஒரு நாள் வழமை போல காலை எழுந்த இராசு தாய்க்கும் தந்தைக்கும் தேநீர் தயாரித்துக் கொடுத்து விட்டு மூங்கில் வெட்டிவரப் புறப்பட்டான். மேகம் கருமையாகிக் கொண்டிருந்தது. மழைவரும் போலத் தோற்றம் அளித்தது. தலைப் பாகையை சரிசெய்து கொண்டு வேகமாக வர எண்ணி விரைந்து கொண்டிருந்தான். மூங்கில் காட்டில் நுழையவும் மழைபெய்யத் தொடங்கவும் சரியாகத்தான் இருந்தது. ஒதுங்க நினைத்தவன் அடைக்கலம் தேடி மூங்கில் காட்டை விட்டு அருகில் உள்ள பெருங் காட்டினுள் புகுந்தான். அங்கே ஒரு குகை அவனது கண்ணில் தென்பட்டது. பயமாக இருந்தாலும் தன்னைக்கட்டுப் படுத்தியவாறு இறைவனை உள்மனதால் வேண்டிக் கொண்டு குகைக்குள் மெதுவாகப்போனான்.

அவனது கண்ணிற்கு எதுவுமே தெரியவில்லை. உள்ளே அவ்வளவு இருட்டு. தட்டுத்தடுமாறிய போது திடீரென வெளிச்சம் குகை முழுவதும் பரவிக் கொண்டது. அவனால் கண் திறந்து பார்க்க முடியாது கொஞ்சநேரம் தவித்தான். கண்களை சாதுவாகத் திறந்த போது முத்துக்கள், இரத்தினங்கள், வைரங்கள் என நிறைந்த பெட்டிகளும் குடங்களும் காட்சியளித்தன. அவன் வியந்து நின்ற போது

“ இளைஞனே உனக்குத் தேவை



யானவற்றை அள்ளிச் சென்ற உனது குடும்பக்கஸ்ரத்தைப் போக்கி செல்வந்தனாக மாறு” என அங்கு காவல் நின்ற பூதம் அவன் முன்தோன்றிக் கூறியது. அதிர்ச்சி அடைந்தவனது பார்வையில் நவரத்தினங்களிற்கிடையில் கிடந்த அழகிய புல்லாங்குழல் தென்பட்டது. இராசு அதை எடுத்துப் பார்த்துவிட்டு அப்படியே இருந்த இடத்திலேயே வைத்து விட்டான். அவனது மனதிலே அந்த புல்லாங்குழலின் வர்ணங்கள், அதன் தோற்றம் படமாகப் பதிந்து கொண்டு விட்டது. இதே போன்று செய்து விற்றால் அனைவரும் வாங்குவார்கள் என்றவாறு புறப்பட்டான்.

உடனே குகைக்கதவு மூடிக் கொண்டது.

“ இளைஞனே நில். நீ உழைத்து வாழ விரும்புகின்றவன். உனக்கு பொன்னோ, பொருட்கள் மீதோ ஆசையில்லை. உன்னை நான் மெச்சுகின்றேன். உனக்குப் பரிசாக இந்த அதிசய புல்லாங்குழலைத் தருகின்றேன். இதைக் கொண்டு உனக்கு என்ன தேவையோ புல்லாங்குழலை வாசிப்பதனூடாக பெற்றுக் கொள்ளலாம்”

அவனால் மறுக்க முடியவில்லை. பூதத்திடம் பெற்றுக் கொண்டதும் குகைக் கதவு திறந்து வழிவிட்டது. வீட்டில் தாய்க்கும் தந்தையருக்கும் காட்டில் நடந்தவற்றை விபரித்தான். புல்லாங்குழல் கொண்டு தந்தையதும் தாயினதும் தீரா நோயைக் குணப்படுத்தினான். ஏழைகளுக்கெல்லாம் வாரி வாரி வழங்கினான். இராசு பிறருக்குக் கொடுத்து வாழ்வதையே வரும்பினான்.

பல நாட்களாக கவனித்து வந்த குமரனது மனைவி தாரணி தாங்களும் பணக்காரராக வரவேண்டும். அந்த ஊரில் இராசுவைவிட செல்வந்தனாக மாறவேண்டும் என நினைத்தவள் கணவன் வேலை விட்டு மாலை வீடு வந்ததும் தொடங்கிவிடுவாள்.

“ நீயும் போய் குகையிலே புல்லாங்குழல் எடுத்துவா”

அவன் மறுத்தால் சண்டை பிடிக்கத்தொடங்கிவிடுவாள். பொறுமையிழந்த குமரன் ஒரு நாள் புறப்பட்டான். ஆனால் அவன் மீண்டும் திரும்பி வரவேயில்லை. அவனது மனைவி தாரணியோ கவலைபடுவதாகத் தெரியவில்லை. அவள் செல்வம் சேர்ப்பதிலேயே குறியாக இருந் தாள்.

தாரணி குகைதேடிப் புறப்பட்டாள். அமாவாசை இருட்டு யாரும் தன்னை பார்க்கிறார்களா என கவனித்து விட்டு காட்டினுள் நுழைந்த போது கால் இடறி நீர் நிறைந்த பாழடைந்த கிணற்றினுள் விழுந்து விட்டாள். உயிருக்காகப் போராடி அவளுக்கு எந்தப் பலனுமே கிடைக்கவில்லை.

“ அளவுக்கு மீறி எதையுமே பெற்றுக் கொள்ள ஆசைப்படுவது ஆபத்தில் கொண்டு சென்றுவிடும். எனவே இருப்பதோடு திருப்தி அடைவதே மிகவும் நன்று. அதுவே வாழ்க்கைக்குச் சிறந்ததொன்றாகும்”

**வி.பாணு**

# வாரம் ஒரு குறள்



நாம் எமக்குத் தெரிந்த நல்ல விடயங்களை அடுத்தவருக்குச் சொல்லப்பழக வேண்டும். அப்படிச் சொல்வதால் பெரும்பாலும் எல்லோரும் நல்ல விடயங்களை தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும். நாம் எமக்குத் தெரிந்த விடயங்களைச் சொன்னாலும் கேட்பவர்கள் விரும்பிக்கேட்க வில்லையென்றால் அதனால் என்ன பயன்? ஆகவே நாம் சொல்ல விரும்பியுள்ளதை அடுத்தவர்கள் கேட்கும்படியாக, இனிமையாக, சுவையாகச் சொல்லப்பழகவேண்டும். இதனை வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடும்போது,

**“கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்” என்றார்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 26

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 |
| 07 | 08 | | 10 | | |
| 13 | | 15 | | | |
| | | | | 23 | |
| | | | | 29 | 30 |
| | | 33 | | | |

### இடமிருந்து வலம்

01. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன்.
07 இது இரும்பைக் கவரும். குழம்பியுள்ளது.
13. சூரியன்.
23. மதியால் இதை வெல்லலாம்.
29. மீன்பிடிக்க உதவுவது.
3[illegible]. உணவு வகைகளில் ஒன்று தலைகீழாக உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. நிலவு.
06. வண்டுகள் பூக்களில் இவற்றைப் பெறும். தலைகீழாக உள்ளது.
08. பாலைவனத்தில் தெரிவது.
10. பூமி.
15. தபால்.
30. கடலில் தோன்றுவது. தலைகீழாக உள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.24 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01.காங்கேசன்துறை. | 01. காலை |
| 08. சரஸ்வதி | 02. சங்கீதம் |
| 14. கீரி | 05. பகலவன் |
| 19. மாதவன். | 12. அதிசயம் |
| 25. அபசகுணம் | 19. சமாதி |
| 33. ஆம். | |

**குறுக்கெழுத்துப்போட்டி இல.24 இன் பரிசுக்குரியவர்**

**மா.துஜேந்திரன்**
**ஆண்டு-6**
**சிவபாதகலையகம்**
**பொன்நகர்**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.24 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

01. மா.தயாநிதி, பாலிநகர், வவுனிக்குளம்.
02. எஸ்.வசந்தி, 723 சிவிக்சென்றர், வட்டக்கச்சி.
03. கா.தனுஷான், தரம்:-4, இராமநாதபுரம்.
04 மா.கார்த்திகா, மாணிக்கபவனம், உடுப்பிட்டி.
05 க.யசோதா, சில்வாவீதி, வட்டக்கச்சி

இளையவர்களே!

மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.26
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# நட்பு

நான் என்பது நட்பல்ல
நாங்கள் என்பதே நட்பு
உதவி செய்வதே நட்பு
உபத்திரவம் கொடுப்பது
நட்பல்ல
நண்பனுக்காக உயிரை
கொடுப்பதே நட்பு
அவன் உயிரை பறிப்பது
நட்பல்ல
ஆபத்தில் கைகொடுப்பதே
நட்பு
ஆபத்தில் விலகி நிற்பது
நட்பல்ல
இன்பத்தில் மட்டும்
இருப்பது நட்பல்ல
துன்பத்திலும் பங்கு
கொள்வதே நட்பு
கைவிடுவது நட்பல்ல
கடைசிவரை இருப்பதே நட்பு
அழும்போது பார்த்துச்
சிரிப்பது
நட்பல்ல
அவன் கண்ணீரை
துடைப்பதே நட்பு
எனக்காக வாழ்வது
நட்பல்ல
நண்பனுக்காக வாழ்வதே
நட்பு
பணத்துக்காக வாழ்வது
நட்பல்ல
அவன் பாசத்திற்காக
வாழ்வதே நட்பு

J.P.ஜேசுதாசன், அமலதாஸ்
C.C.T.M.S
வவுனியா.



# கண் இமைப்பதால் விளையும் பயன் யாது?

நம் உடம்பில் அற்புதமானஇன்றியமையாத உறுப்புக்களுள் கண்ணும் ஒன்று. நாம் வாழும் சூழ்நிலைகளில்தூசிகள் எப்போதும் உள்ளன. கண்கள் இமைக்காவிடில் தூசித்துகள்கள் பட்டு, கண்கள் பழுதுபட்டுக் குருடாகவும் கூடும். தூசித்துகள்கள் பார்வைக்குப்புலப்படாதஅளவுக்கு நுண்ணியவையாக இருப்பினும், படும்போது விழித்திரையானது நரம்பு மையத்திற்குச் செய்தி அனுப்புகின்றது. அங்கிருந்து மேல் இமைக்கு உத்தரவு பறக்கிறது. கண் இமை கண்ணைமூடும்போது விசிறி போன்று இயங்கி நுண்தூசியை அடித்து அகற்றுகின்றது. கண்இமைகள் காவலாளிகளைப் போலப்பணியாற்றுகின்றன. தூசித்துகள்கள் இந்தக்காவலாளிகளை மீறி உள்ளே புகுந்து விடுமானால் ஒரு அற்புதம் நிகழ்கின்றது. கண்ணீர் சுரப்பிகளிலிருந்து கண்ணீர்கசிந்து உறுத்தும் பொருளை கழுவி அகற்றுகின்றது.



# நான் சென்று வந்த சுற்றுலாப் பயணம்

காலை 5.00 மணிக்கு கிளிநொச்சி பஸ்நிலையத்திலிருந்து புறப்பட்டு தலைநகர் திருகோணமலையை அடைந்தோம். அன்று உறவினர் வீட்டில் தங்கி அவர்களோடுசேர்ந்து கன்னியாவில் உள்ள வெந்நீர் ஊற்றுக்குப் போனோம்.அங்கு ஏழு சுடுநீர் கிணறுகள் உள்ளன. அவற்றில் நீராடும் வாய்ப்புக்கிடைத்தது. அக்கிணற்றுத் தண்ணீரிலும் ஒவ்வொரு வித விதமான சூடு இருந்தது. பெருந்திரளானவர்களும் வந்து நீராடிச்சென்றனர். திருக்கோணேஸ்வரம் சென்றோம். அங்கு இராவணன் வெட்டையும், சுற்றியுள்ள கடலையும் பார்த்து ரசித்து படமும் எடுத்தோம். அங்கிருந்து நிலாவெளியிலுள்ள உல்லாச விடுதியையும் பார்த்து விட்டு, புறாமலை எனும் தீவுக்கு போட்டில் சென்று கடலில் குளித்து மகிழ்ந்தோம். பின்பு சுற்றலாப்பயணத்தை முடித்து இதுவரை தெரியாத இடங்களையும் கண்டறிந்த மகிழ்வோடு வீடுதிரும்பினோம். நான் பார்த்தது மாதிரி என் போன்ற இளையவர்களும் அவர்களின் பெற்றோருடன் சென்று பார்த்து மகிழவேண்டும் என்பதே எனதுஆவல்.

**யோ.சுமிர்தா**
**ஆண்டு:-3B**
**கிளி /கனகபுரம் ம.வி**

அமைதி, எல்லா வேளைகளிலும் களங்கமற்ற தன்மையின் அறிகுறியாகிவிடாது. - பைரன்பிரபு.



# அரங்கம்

## நேர்காணல்



பழம் பெரும் நாடகக் கலைஞர் செல்லத்தம்பி

எட்டு வருசத்துக்குப் பின்பு
அவர் வீட்டுக்குப் போனேன்...
அதே பார்வை, அதேமுகம்
சற்றுத் தளர்ந்த நடை...
அந்த ''விலங்குகள்'' நாடக நினைவுகள்
என்னில் அலைகளாய் எழுந்தது...
என்னை ஒரு நடிகனாக்கிய அந்த முகத்துடன்
சில மணிநேரம் பகிர்ந்ததிலிருந்து...

# எங்கள் படைப்புகள் எல்லாம் விடுதலை பற்றித்தான் இருக்கும்

*நீங்கள் நீண்டகாலமாக நாடக அரங்க ஆற்றுகையில் செயற்பட்டு வந்துள்ளீர்கள். இந்த ஈடுபாடானது எப்படி உங்களுக்கு வந்தது?*

எனது தகப்பனார் ஒரு அண்ணாவியார். மிருதங்கமும், ஆர்மோனியம் இந்தியாவில் கற்று வந்தவர். நான் சின்னப் பராயத்தில் - எங்கு நாடகம் நடந்தாலும் எனது தகப்பனார் என்னையும் அழைத்துச் செல்வார். சங்கர தாஸின் நாடகங்கள் என்றால் தகப்பனாருக்கு அலாதி விருப்பம். இந்தியாவில் அவரின் ''அல்லி அருச்சுனா,'' ''பவளக்கொடி'', ''புக்ததுருபன்'' "அரிச்சந்திரா" "சாரங்கதாரா" "நந்தனார்" போன்ற நாடகங்களைப் பார்வையிட்டு வந்தார்.

இலங்கையிலும் இந்தியக் கலைஞர்கள் வந்து அந்த நாடகங்களை மேடையேற்றினார்கள். அதில் அதிக ஈடுபாடு வைத்த தகப்பனார் தானும் சங்கரதாஸின் சில நாடகங்களைத் தயாரித்தார்.

எனக்கு ஒன்பது வயதில் "காந்தா மணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி" எனும் நாடகத்தை தகப்பனார் தயாரித்தார். அந்த நாடகத்தை பருத்தித்துறையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் எழுதியிருந்தார் - எனது தகப்பனார் போலே நானும் ஒரு நாடக இயக்குநராக வரவேணும் என்ற எண்ணம் ஒன்பது வயதிலேயே என்னில் முளைவிட்டது.

எனது பன்னிரெண்டாவது வயதில் "குமணன்" எனும் நாடகத்தை எழுதி நானே தயாரித்துள்ளேன். சீமெந்துப் பைகளில் சீன்ஸ் தயாரித்து பெற்றோல் மாக்ஸ் வெளிச்சத்தில் தான் மேடையேற்றப்பட்டது.

*எமது பாரம்பரிய கலை வடிவங்களின் ஆற்றுகைச் செயற்பாடுகளில் இருந்த நீங்கள் பார்ஸிலான மரபுகளின் ஈர்ப்பு எப்படி எமது பாரம்பரிய கலை வடிவங்களிலிருந்து உங்களை மாறுதலடைய வைத்தது?*

யாழ்ப்பாணத்தில் "கொட்டடிக் கறுத்தார்", "கொட்டடிச் சீனி வாசகம்," "புத்து வாட்டிச் சின்னத்தம்பி" ஆகியோர் கொட்டகைகளை அமைத்து, இந்தியக் கலைஞர்களை வரவழைத்து நாடகங்களைப் போடுவார்கள்- அவர்களின் அந்தநாடகங்கள் பற்றித்தகப்பனார் எனக்கு அடிக்கடி கூறுவார். அந்தக் கூற்றுகளை கேட்கும் போது அந்த முறை இலகுவானதாக எனக்குப்பட்டது. எமது பாரம்பரிய கூத்து மரபுகளில் ஆட்டங்களுக்கும் அசைவுகளுக்குமே முக்கியத்துவம் கொடுத்தார்கள். முடிகளுடனும், பாரமான கரப்புகள் மாதிரியான உடைகளோடும் தாளக்கட்டுக்கே ஆடவேண்டியதாயுள்ளது. எமது கவனங்கள் எல்லாம் ஆட்டங்களிலென்றபடியால் உணர்வுகளை முகபாவங்களால் வெளிப்படுத்த முடியாத நிலையிருந்தது. ஆனால், இசை நாடக மரபுகளுக்கு இப்படியான சிரமங்களெதுவுமிருக்கவில்லை. இசை நாடகங்களில் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாயிருந்தது. ஆனால் இசைநாடக மரபு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது. நானும் அந்த மரபில் கவரப்பட்டேன்.

அந்தக் கவர்தல் காரணமாகவே நானும் அப்படியான நாடகங்களைத் தயாரித்து மேடையேற்ற வேணுமென நினைத்து. பதினான்கு வயது மாணவர்களை வைத்து "அரிச்சந்திராமயான காண்டம்" செய்துள்ளேன்.

*உங்களின் "மரகதபுரிமாலா" கற்பனைச் சரித்திர நாடகமும் "சங்கிலியன்" சரித்திர நாடகமும் "ரத்தக்கறை" சமூக நாடகமும் பல இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளதென்று பலராலும் பேசப்படுகின்றது. ஆனால் இசைமரபு வழியை விட்டு வசன அரங்க ஆற்றுகைக்கு வந்ததற்கான காரணங்கள் என்ன?*

இசை மரபுகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது சினிமாக்களின் தாக்கம் தான். 1945 இற்குப் பிறகு வந்த சினிமாக்கள் வசனங்களை முதன்மைப் படுத்தின. குறிப்பாக அண்ணாத்துரையின் "வேலைக்காரி"யாகத் தானிருக்கவேணும். மக்களின் ரசனைக்கேற்ப நாங்களும் வசன நாடகங்களையே ஆற்றுகைப் படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

இசை நாடகங்களை விட வசன நாடகங்களில் சிரமங்கள் அதிகமில்லை. இசைக்கருவிகளுக்குப் பதிலாக இசைத்தட்டுகளைப் பயன்படுத்துவது இலகுவாகவுமிருந்தது. பாடசாலைகளிலும் இவைகளையே பின்பற்றினார்கள.

*இந்த வசன அரங்க ஆற்றுகை மேவல்களால் எமது இசை மரபுவழி அற்றுப் போகும் அபாயம் இருக்கிறதல்லவா?*

இந்தக் கவலை எனக்குமிருக்கிறது.இசை நாடக மரபை வளர்க்கும் நோக்கோடு 1994ஆம் ஆண்டு "புலிகளின் குரல்" வானெலிக்கு "விடிவைவேண்டி" எனும் இசை நாடகத்தை சமூகப்பார்வையோடு எழுதிக் கொடுத்தேன். அதை அவர்கள் ஒலிபரப்பவில்லை - பின் அந்த நாடகத்தை அதே ஆண்டு "கரும்புலிகள்" தினத்தன்று கரவெட்டி "விக்னேஸ்வராக் கல்லூரி" யில் மேடையேற்றினேன்.

*நீங்கள் 1993 - 1994 காலப் பகுதியில் வடமராட்சி "கலைபண்பாட்டுக்கழகத்''தில் இணைந்து "விலங்குகள்'' எனும் நாடகத்தை ஆற்றுகைப் படுத்தியுள்ளீர்கள். ஆனால், எல்லா வடிவங்களையும் விட்டு "குறியீடு" அரங்க ஆற்றுகையில் ஒரு கவனிப்பாளராக இனம் காணப்பட்டீர்கள். இந்த மாற்றங்கள் பற்றி...?*

"விலங்குகள்" எனது நாடகமல்ல. வடமராட்சிக்கோட்ட ''கலைபண்பாட்டுக் கழக"த்துக்குப் பொறுப்பாயிருந்த "மேஜர் பகலவன்" அவர்களின் வேண்டுதலிலேயே அந்த நாடகத்தை நெறிப்படுத்தினேன். ஆனால், எனக்கு இந்த "குறியீடு" நாடகங்களில் உடன்பாடில்லை.

*ஏன் ?*

"குறியீடு" என்பது ஒரு "பூடக"த் தன்மை. பூடகமாக நாமேன் செய்திகளைச் சொல்லவேணும்? அதாவது இந்தப் போர்ச் சூழலில், ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் சொல்லவேணுமென்ற கடமைப்பாட்டில் இயங்கவேணும். சாதாரண மக்கள் மத்தியில் எமது கருத்துக்கள் சேரவேணும். உடனுக்குடன் அவர்களுக்கு விளங்கக் கூடியதாகச் சொன்னால் தான் நாம் அதன் பலாபலன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

*இன்று "எமது தமிழ் நாடக அரங்கு உலகதரத்துக்குச் செல்லவில்லை'' எனக் கூறப்படுகின்றது. காரணம் எமது அரங்க ஆற்றுகைகள் அரசியல் சார்ந்ததாகவும் போர்ச் சூழல் நாடக அரங்க ஆற்றுகைகளை சுவீகரித்து விட்டுள்ளதாகவும் சிலர் கூறுகின்றார்கள். இது பற்றி உங்கள் கருத்து...?*

"படைப்புகள்" எப்போதும் காலத்தின் கண்ணாடிகளாகவே இருக்கவேணுமென்று சொல்லுவார்கள். குறிப்பாக அந்தக் காலத்தில், அந்நியர் வருகையால் மதமாற்றங்கள் ஏற்பட்டது. அந்தவேளையில் எமது சமய தத்துவங்களை எடுத்துக்காட்டுவதற்காக "புராண" நாடகங்கள் தோன்றின. "கற்பு நெறி" அவசியம் என்பதைக்காட்ட "சத்தியவான் சாவித்திரி"யும் "வாய்மை"யை எடுத்துக்காட்ட "அரிச்சந்திரா"வும் மனிதசமூகத்தில் "சாதி" "சமய" ஏற்றத்தாழ்வுகள் இல்லையென்பதனை எடுத்தியம்ப "நந்தனார்"போன்றும், மற்றும் அறிஞர் "அண்ணாத்துரை" கலைஞர் "கருணாநிதி" போன்றவர்கள் எழுதிய சமூகமாற்றங்களுக்கான பல நாடகங்கள் அந்தந்தக் காலங்களுக்கேற்பத்தான் எழுதப்பட்டன.

இன்று எமது வாழ்க்கை இராணுவ வேலிகளுக்குள்ளாலானது. "விடுதலை"யே எங்களை அவாவி நிற்கின்றன. ஆகவே, எங்களின் "படைப்புகள்" எல்லாம் "விடுதலை" பற்றித்தான் இருக்கும்.

எமது நாடக அரங்கு உலகதரங்களுக்குச் செல்லவேணுமேயானால் ஒரு "புத்திஜீவி அரங்கு" தோன்ற வேணும் தோற்றுவிக்க வேணும்.

*''இளங்கோ'' அவர்கள் நெறிப்படுத்திய ''ஆத்மதகனம்'' போன்ற நாடகங்கள் ஒரு "புத்திஜீவி" அரங்க முயற்சியாகக் கொள்ளப் படுகிறது. இது பற்றி...?*

அறிந்திருக்கின்றேன். ஆனால், பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

*யாழ்ப்பாண இடப்பெயர்வோடு நீங்கள் வன்னிக்கு வந்துள்ளீர்கள். வன்னியில் உங்கள் அரங்க ஆற்றுகைகள் எதுவும் நிகழவில்லை. அதற்கான காரணங்கள்?*

மாற்றுப் பிரதேச ஒவ்வாமை காரணமாக எனது உடல் நிலை அடிக்கடி பாதித்த வண்ணமிருந்தது. அதன் காரணமாகத்தான் அரங்க ஆற்றுகைத் தளத்திலிருந்து என்னால் இயங்க முடியாமலிருந்தது. ஆனால், வன்னியில் நிகழ்த்தப்பட்ட பெரும்பாலான நாடகங்களை பார்த்திருக்கிறேன்.

*அவை பற்றிய எண்ணப்பாடுகள் என்ன?*

ஓரிரு நாடகங்களைத் தவிர ஏனைய நாடகங்கள் ஒரே மாதிரியாகவே, அசைவுகள், நகர்வுகளில் மாற்றங்களேதுமில்லாமல் நாடகத்துக்கென ஒரு மொழியை உருவாக்கி விட்டார்களா? என்ற கவலை என்னில் எழுந்தது. இன்னுமொரு முக்கியமான விடயம் யாழ்ப்பாணத்தில் ஆற்றுகைப் படுத்திய சில நாடகங்களின் உத்தி முறைகளை இங்கே அவதானிக்க முடிந்தது. சில நாடகங்களையும் சிலர் தங்களது நாடகமென ஆற்றுகைப் படுத்தியதையும் கண்டு கவலைப்பட்டேன்.

*உங்களின் அடுத்த ஆற்றுகைபற்றி?*

ஒரு "புத்திஜீவி" அரங்க முயற்சியில், தேடுதலில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறேன்.

*அப்படியானால், சமாதான காலத்தில் சொந்த இடத்திலேயே வாழ்கிறீர்கள். உங்கள் புத்திஜீவிய அரங்க ஆற்றுகைக் களம், சூழல் பற்றி...?*

யாழ்ப்பாணம் இப்போ முன்னைய யாழ்ப்பாணமல்ல. முன்னைய மனிதர்களுமல்ல. அவர்களின் மனவுலகு வேறு. எனது பழைய கலைஞர்கள் இன்னும் ஊர்வந்து சேரவில்லை. எனது ஆற்றுகைக் களம் யாழ்ப்பாணம், வன்னியென்ற நிலையற்று எமது வாழ்வு குறித்தான ஒரு அரங்காகவே அமையும்.

**நேர்காணல் கருணைரவி**

## பன்முகம் -25

# ஆரிய ஊடுருவல்

ஆரிய இனத்தைப் பொறுத்தவரை ஆரியரைத்தவிர ஏனையவர்களை, குறிப்பாக திராவிடரை மனிதர்கள் என்று கூறுவதைக்கூட விரும்புவதில்லை. ஆரியர் அல்லாதவர்களை அரக்கர், அசுரர், மிருகங்கள் என்றே கருதினர். திராவிடர்கள் நாகரீகத்தை, ஒழுக்க நெறிகளைக்கற்றுக் கொண்டதே தம்மிடம் இருந்தே தான் என்பது அவர்கள் கொள்கை.

ஆரியர்களின் ஊடுருவல் தென்னகத்து மன்னரிடையே, புலவர்கள் அறிஞர்களிடையே புகுந்து தமிழ் புலவர்கள் தம் பாட[illegible]ளிடையே பரவி விட்டது. தெய்வத்தன்மை பொருந்த ஆரிய [illegible]தாரங்களால் திராவிட அசுரர்கள் அழிக்கப்பட்டு திராவிட இனம் சீர் திருத்தம் செய்யப்பட்டது என்பது அவர்கள் கூறும் செய்தியாகும்.

இதற்கு கம்பராமாயணம் நல்ல எடுத்துக்காட்டாகும். வடக்கில் இருந்து தெற்கு நோக்கிவரவர அங்கு வாழ்ந்த பாத்திரங்கள் குரங்குகளாகவும், பறவைகளாகவும், அசுரர்களாகவும் அரக்கர்களாகவும், காமுகர்களாகவும், அநாகரீகம் மிக்கவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமன்று இராமாயணத்தில் திராவிடர்களுக்கு இடப்பட்டுள்ள பெயர்கள் கூட திராவிடர்களை இழிவுபடுத்தும் தன்மையிலே உள்ளன. அப்பெயர்களின் வடமொழிக் கருத்தை ஆராய்ந்து பார்த்தால் அந்தக் கொச்சைப்படுத்தல் புரியும்.

புலவர் குழந்தை அவர்கள் இராவணனின் பெருமை கூறிப்பாடியுள்ள இராவண காவியத்தின் முன்னுரையில் இவற்றுக்கான உதாரணங்களை மிகத்தெளிவாகக்கூறியுள்ளார்.

அ) சூர்பம் + நகை = சூர்ப்பனகை- வடமொழியில் சூர்ப்பம் என்பது சுளகு எனவே சூர்ப்பனகை என்பவள் சுளகு போன்ற பற்களை உடையவள் என்றாகின்றது.

ஆ) கும்பம் + கர்ணன் = கும்பகர்ணன். வடமொழியில் கும்பம் என்பது குடம், கர்ணன் என்பது செவியன் எனவே கும்ப கர்கணன் குடச்செவி ஆகின்றான்.

இ) மண்டு + உதரி = மண்டோதரி. வடமொழியில் மண்டு என்பது முடா, உதரம் என்பது வயிறு எனவே மண்டோதரி முடா வயிறள் ஆகிறாள். இப்படியாக உத்தமிகளையும், பத்தினிகளையும், செய்நன்றி மறவாதவனையும், சகோதர பாசம் மிக்கவனையும் பெயர்களால் இழிவு படுத்தியது ஆரியக்கதையான இராமாயணம் இதற்குக் கம்பனும் துணை போனான் என்பது வேதனையே.

இத்தகைய காரணங்களாலும், படு அசிங்கமான வர்ணனைகளாலுமே நாற்பதுகளில் சுயமரியாதைக் கட்சி, திராவிடக் கழகம், தொடர்ந்து திராவிடர் முன்னேற்றக் கழகம் என்பன கம்பராமாயணத்துக்கு எதிரான "தீபரவட்டும்" இயக்கம் நடாத்தி 'இராமாணயத்தை கொழுத்தி எதிர்த்தனர்.

இவற்றை இங்கு கூறுவதன் மூலம் கம்பனின் கவிதைச் சுவையையோ, காவியச் சுவையையோ, கற்பனை வளத்தையோ, வரகவித் தன்மையையோ கம்பராமாயணம் கூறும் அறக்கருத்துக்களையோ யான் கொச்சைப்படுத்துவதாகயாரும் கருதிவிடக்கூடாது. தமிழ் அறிஞர்களின் கருத்தை அப்படியே முன்வைத்துள்ளேன்.

இத்தகைய ஆரியத்தின் ஊடுருவலின் இன்னுமொரு வடிவம்தான் தீபாவளியும், கண்ணபிரான் நரகாசுரனைக் கொன்றழித்தகதையும் என்பது தமிழறிஞர்களின் கருத்தாகும்.

குறிப்பாக மறைமலை அடிகள் தாம் எழுதிய 'தமிழர் மதம்' எனும் நூலில் இது பற்றி மிகத்தெளிவாக விளக்கியுள்ளார்.

உயிர்ப்பலி வேள்விபோன்ற அநாகரீக வழிபாடுகள் ஆரியர்களால் திராவிடரிடையே புகுத்தப் பட்ட சடங்குளாகும். இந்த மூடத் தனமான நம்பிக்கை வழிபாடுகளை ஏற்க மறுத்து ஆரியர்களைப் புறக்கணித்து ஆண்டவனே நரகாசுரன் எனும் குறுநிலத்தமிழ் மன்னன். (நரகாசுரன் என்பது அவனது பெயர்தானா என்பது கூட ஆராய்ச்சிக்கு உரிய விடயமே)

இத்தகைய நாகரீகம்மிக்க தமிழ் மன்னனை ஆரிய மாயைக்குள் அகப்பட்ட இன்னுமொரு குறுநில மன்னனான கண்ணன் என்பவனை ஏவி தீபத்திருநாள் அன்று ஆரியர்கள் கொலை செய்வித்தனர் என்பது மறைமலை அடிகள் கூறும் வரலாறு.

தீபாவளித்திருவிழா என்பது தொன்று தொட்டுத் தமிழரிடையே கொண்டாடப் பட்டு வந்ததொரு விழாவாகும். முழுமுதற் கடவுளாம் இறைவனை ஒளியின் வடிவில், தீபச்சுடரின் வடிவில் கண்டு வழிபட்டவன் தமிழன். அந்த வகையைச் சார்ந்ததே தமிழர் திருவிழாவாம் தைப்பொங்கல் விழாவும் ஒளிவடிவான கதிரவனை, உணவு உற்பத்திக்கு உறுதுணையான அந்த ஒளிப்பகலவனை இறைவடிவாகக் கண்டு பொங்கிப் படைத்து நன்றி கூறிய உழவர் விழாவே தைப்பொங்கல்.

தீபத்தை ஆவலிகளாக வைத்து (ஆவலி=வரிசை,நிரை) அதாவது நிரை நிரையாக அடுக்கிவைத்து இரவிலும் ஒளிவடிவில் இறைவனைக் கண்டு துதிபாடினான் தமிழன். அந்த விழாவே தீபாவளித்திருநாள். அத்திருவிழாவன்று கண்ணன் என்னும் தமிழ் மன்னனை ஏவி, நரகாசுரன் எனும் தமிழ் மன்னனை ஆரியர் கொன்றனர்.

தான் கொல்லப்பட்ட அந்த நாளை தீபமேற்றிக் கொண்டாடுங்கள் என்று நரகாசுரன் இறக்கும் தறுவாயில் கேட்டுக் கொண்டதெல்லாம் பிற்காலத்தில் ஆரியர்களால் இட்டுக்கட்டப்பட்ட கதை என்பது மறைமலை அடிகளின் கூற்றாகும்.

இவைபோன்று ஆரிய ஊடுருவல்களால் தமிழரிடையே ஏற்பட்ட இழிவழக்குகளே வர்ணாச்சிரமமுறையும், உடன் கட்டை ஏறும் 'சதி' வழக்கும் என்பது தமிழ் ஆய்வாளர்களின் ஒத்த கருத்துகளாகும்.

**நாவண்ணன்**

கொஞ்சத்தைக் கொண்டு வாழ அறியாதவன் எப்பொழுதும் அடிமையாகவே இருப்பான். - ஹோராஸ்




அத்தியாயம் - 3

# இடம் பெயர்ந்தவன்

பிளானறி ஓ கொணரின்

தமிழில்
சு.மகேந்திரன்

'கறுப்பர்களாகிய நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்கிறீர்கள் இல்லை. நான் தான் எல்லாவற்றையும் தாங்க வேண்டும் என நினைக்கிறீர்கள். நீங்கள் வேலை செய்யாவிட்டால், எனக்கு வருமானம் கிடைக்காமல் போகும். பின் என்னால் உங்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போகலாம். நீங்கள் என்னில் தங்கியுள்ளீர்கள்.



ஆனால் உங்களின் செயற்பாடுகள் எல்லாம் சப்பாத்துக்களை மாறிப் போட்டு விட்டு நடப்பது போலிருக்குது' அவள் எழுந்து அவனைப் பின்தொடர்ந்து நடந்தாள். அவளது நெற்றியில் ஒரு பெரிய பள்ளம் போன்ற ஒன்று உண்டாகியது. 'நீதிபதி இங்குள்ள கொடுப்பனவுகளைக் கொடுத்து பலகாலமாகியுள்ளது' என அவள் கூறினாள்.

நீகிரோக்களில் அவன் மட்டுமே நீதிபதியை நேரிடையாக அறிந்தவன். அதனால் தனக்கு எங்களூரில் ஒரு உரிமை உண்டு என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. அவளது மற்றைய கணவர்களாகிய குறூம்ஸ் மீதும் மக்கின்ரயர் மீதும் அவன் குறைவான மதிப்பே வைத்திருந்தான். ஒவ்வொரு மன முறிவின் போதும் அவளை மென்மையும் கேலியுமான வகையில் வாழ்த்துவான். இவ்வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்ற அவசியம் தோன்றும் போதெல்லாம், அவள் உள்ளே அறையில் அமர்ந்திருக்கிறாள் எனத்தெரிந்தால், அறையின் யன்னலுக்கு சமீபமாக வெளியே நின்று, வேலை செய்வான். சுற்றிவளைத்த கதைகளில் அவளை இழுத்து வம்பாக தனக்குத்தானே கேள்விகள் கேட்பதும், பதில் சொல்வதும் மாக இருப்பான்.

ஒரு நாள் அவள் எழுந்திருந்து யன்னலை ஓங்கி அறைய, கிழவன் கால் தடுமாறி பின்புறமாக வீழ்ந்தான். சில வேளைகளில் கிழவன் மயில்களுடன் கதைத்துக் கொண்டிருப்பான். அவளை அவன் போகுமிட மெல்லாம் மயில்கள் பின்தொடர்ந்தபடி இருக்கும். அவற்றின் கூர்மையான கண்கள் அவனது பின்பொற்கற்றில் உள்ள சோழப் பொத்தியைப் பார்த்தபடியோ அல்லது அவனது பக்கத்தில் வந்து அவற்றைக் கொத்தியபடியோ இருக்கும். அவன் ஒருமுறை திறந்திருந்த கதவருகே நின்று கொண்டு.'நான் முன்பு 20 மயில்கள் இங்கு உலாவித்திரிவதை கண்களால் கண்டவன். குறூமஸ் இருந்தபோது அவை 12ஆகக் குறைந்தன. பின் மக்கின்ரயர் வந்தபோது ஐந்தாகின இப்போது இருப்பது நீயும் இரண்டு பெட்டைகளும் தான்' என மயில்களுடன் கதைப்பது போல் கூறினான்.

இதனைக் கேட்ட மிஸிஸ் மைக்கின் ரயர் வெளியே வந்தாள். 'மிஸ்ரர் குறூம்ஸ்!, மிஸ்ரர் மைக்கிரயர்! இவர்கள் பற்றி நீ இனிமேல் பேசுவதை நான் விரும்பவில்லை. இதனை மட்டும் நீ புரிந்துகொள்: இந்த மயில் குஞ்சுகள் இறந்தொழிந்தபின் அவற்றிற்கு ஈடு செய்யமட்டும் எதுவும் இங்கு வரவழைக்கப்பட மாட்டாது.

அவள் அவரை பணத்திற்காகவே அவரது வயோதிப காலத்தின் போது மணம் புரிந்தவள். இதற்கு அவள் அப்போதெல்லாம் தனக்குள் கூட ஒப்புக்கொள்ளாத காரணம் ஒன்றும் இருந்தது, அவள் அவரை விரும்பியே இருந்தாள். மூக்குத்தூள் மிக அதிகமாகவே நாசியில் போட்டு அடைத்துக் கொள்ளும் ஒரு அசுத்தமான நீதிபதி அவர். பணத்தால் கிராமப்புறம் முழுவதும் அவரது புகழ் பரவியிருந்தது. எப்போதும் மிக விலை உயர்ந்த சப்பாத்துக் களையும், மெல்லிய கயிறு போன்ற ரையும், சாம்பல் நிறத்தில், கறுத்தக் கோடுகளையுடைய சூட்டும் கோட்டும் அணியும் அவர் என்றாலும் கோடை ஆயினும் பனாமத் தொப்பியுடனேயே இருப்பார். அவரது தலைமயிரும் பற்களும் புகையிலையின் நிறத்திலிருந்தன. தழும்புகளுடன் கூடிய அவரது முகம் இளஞ்சிவப்பான நிறமுடையது. சரித்திரகாலத்துக்கு முற்பட்ட புரிந்து கொள்ள முடியாத அடையாளங்களுடன், அடிச்சுவடுகளைப்பின் பற்றி கண்டு பிடிக்கப்பட்ட புதைபொருட்களுடன் சேர்த்து எடுக்கப்பட்டது போன்ற முகம் அவரது.

வியர்க்கும் போதெல்லாம் அவரிடமிருந்து ஒருவிதமான மணம் வீசும். தனக்கு சேர வேண்டிய பணத்துக்கான பற்றுச்சீட்டுக்களை கண்ணும் கருத்துமாக போற்றி பாதுகாத்து வைத்திருப்பார். ஒரு நாளில் கூட காசுடன் அவர் எங்கும் சென்றதில்லை. ஒரு சல்லிக்காசுகூட அவரிடம் இருப்பது யாருக்கும் தெரிந்ததில்லை.

சில மாதங்கள் மிஸிஸ் மக்கின்ரயர் அவரின் செயலாளராகப் பணிபுரிந்தாள். தன்னைத் தனக்காக விரும்புமொருத்தி இங்கே இருக்கிறாள் என கிழவரின் கூர்மையான கண்கள் கண்டு பிடித்துவிட்டன. அந்தத் திருமணம் நடந்து, அதன் பின் அவர்கள் வாழ்ந்த அந்த 3 வருடங்கள் தான் மிஸிஸ் மக்கின்ரயரின் வாழ்வின் மிகவும் செழுமையான காலங்கள். ஆனால் அவர் இறந்த பின்னரே அந்த எஸ்ரேற் திவாலாகியிருந்தது தெரியவந்தது. அவர் அவளுக்கு கடனுடன் கூடிய ஒரு வீட்டையும், ஐம்பது ஏக்கர் நிலத்தையும் விட்டுச் சென்றிருந்தார். கிழவர் இறப்பதற்கு முன் தோட்டத்திலிருந்த மரங்களைக் கூட விற்று விட்டிருந்தார். அதனால் கிடைத்த பணத்தால்தான், வெற்றிகரமான அவரது வாழ்வின் கடைசி யான கொண்டாட்டங்களையும் செய்யக் கூடியதாக இருந்தது. அவர் போகும் போது எல்லாவற்றையுமே தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டார்.



ஆயினும் அவள் எல்லாத் தொல்லைகளிலிருந்தும் மீண்டுகொண்டிருந்தாள். அந்த நீதிபதிக் கிழவரே மிகவும் கஸ்ரத்துடன் நிர்வகித்த: தொடர்ந்து வருவதும் போவதுமாக இருந்த குத்தகைக் கமக்காரர்களையும், பால்ப் பண்ணையில் வேலை செய்பவர்களையும் எப்படியோ சமாளித்து நிலைத்துநிற்க அவளால் முடிந்தது.. சரியாக எவ்வாறானவர்கள் என மட்டிட முடியாத எப்போதும் அவர்கள் மேல் தொடர்ச்சியாக பணத்தையே இறைத்துக் கொண்டிருக்க வேண்டிய சமூக அமைப்பைக் கொண்ட மாறி மாறி வரும் ஒரு வகையான மனநிலையையும் கொண்ட நீகிரோக்களையும் எப்படியோ சமாளித்தாள். இடையிடையே இரத்த உறிஞ்சிகளாக வந்து போகும் மாட்டு வியாபாரிகளையும், கழிவுப் பொருட்களை வாங்கு பவர்களையும். வாகனமும் பெட்டிகளுமாக இணைந்த வண்டிகளில் வந்து முற்றத்திலேயே வாடிகட்டி வருபவர்களையும் எப்படியோ சமாளித்தாள்.

தனது மேலாடையின் மேல் கைகளைக் கட்டியபடி சிறிது பின்புறமாக சாய்ந்தபடி நின்றாள். கௌசக் தண்ணீர் தெளிக்கும் குழாயை நிறுத்திவிட்டு தொழுவத்திற்குள் சென்றான். அவளது முகத்தில் திருப்தி தெரிந்தது.

போலந்திலிருந்து துரத்தப்பட்டு ஐரோப்பா முழுவதும் அலைந்து திரிந்து, இப்போது இனம் தெரியாத ஒரு நாட்டிற்கு வந்து குத்தகைக்காரர்களுக்கான கொட்டிலில் வாழும் இந்த வறிய மனிதனைப் பார்க்க அவளுக்கு இரக்கமாக வந்தது. ஆனால் அவள் இவற்றுக்கெல்லாம் பொறுப்பாளி அல்ல. அவள் கூட இப்படியான கடினமான நாட்களை அனுபவித்தவள் தான். மக்கள்கட்டாயம் கஸ்ரப்பட்டு, அதனால் வரும் அனுபவங்களைப் பெறத்தான் வேண்டும். அவன் ஐரோப்பாவிலிருந்து வந்த பின் இங்கு அவனுக்கு தேவையானவற்றை பெருபாலனவை கிடைத்துள்ளன. அவன் ஒருவன் வாழ்வில் அடையக்கூடிய எல்லாவிதமான கஸ்ரங்களையும், இன்னும் அனுபவிக்கவில்லை. அவள் அவனுக்கு ஒரு வேலை தந்துள்ளாள். அதற்கு அவன் நன்றியுடையவனாக இருப்பானோ என்வோஎன்று அவளுக்குத் தெரியாது. அவன் தனக்குத்தரப் பட்ட வேலையை ஒழுங்காகச் செய்கிறான். அவனைப்பற்றிய சரியான நிலைப்பாடு என்ன என்பது தற்சமயம்வரை தெரியாமல் இருக்கிறது. அதுதான் உண்மை. தான் கண்ட ஏதோஒரு அதிசயம் போன்றதே அவன் என்று எப்போதும் பேசிக் கொண்டிருந்தாலும், இப்போதும் கூட அவள் அவனை நம்பவில்லை.

வெளியில் இருந்து வந்து கொண்டிருந்த இளைஞனான சல்கை நோக்கி தொழுவத்தில் இருந்து வந்து கொண்டிருந்தான் கௌசக். நீகிரோ அங்கிருந்து நகராமல் கையில் கிடைத்த எல்லாவற்றையும் பியத்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்....)

## வாசகர் கடிதம்

### உரியவர்களின் பார்வைக்கு ஓர் கடிதம்

சமீபத்தில் ஈழநாதம் 15 - 22.05.2003ஆம் திகதி இதழில் மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்ற பெயரில் எழுதப்பட்ட கட்டுரையில் ஆசிரியர், தமிழ் நாட்டு இலங்கை தமிழ் நிலை பற்றியும் எழுதியிருந் தார். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ் என்ன நிலையில் உள்ளது.

1956யூன் 05ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் உருவாக் கப்பட்டது. பின்னர் தமிழ் மொழிக் கான சிறிய போராட்டம், வேறு பல போராட்டங்கள் நடந்தன. 1989ல் மாகாணசபைகள் அமைக்கப்பட்டு, தமிழ் பேசும் மக்களுக்கான வடக்கு, கிழக்கு மாகாணசபை அமைக்கப் பட்டது. பெயரளவில்தான் அது தமிழ் பேசும் மக்களுக்காக உரு வாக்கப்பட்டுள்ளதேதவிர 1989 முதல் இன்று வரை அந்த மாகாண நிர்வாக மொழியில் ஆங்கிலம் மட்டுமே உள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண த்தின் கடிதத்தலைப்புக்களில் மட் டுமே தமிழ் உள்ளது.

இத்தனைக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபைத் தலைமைச் செயலாளர் திரு.சி. இரங்கராசா என்ற தமிழர். இதன் செயலர்களாக உள் ளவர்கள் எல்லோரும் தமிழர்கள். ஆனால் இவர்கள் தமிழில் பேச, எழுதத்தெரியாத "டமிலர்கள்" (Tamils) வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள 08 மாவட்ட செயலகங்களில் 06 மாவட்ட அரச அதிபர்கள் தமிழர்கள் - திருகோண மலை, அம்பாறை சிங்களவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கீழ் உள்ள 72க்கு மேற்பட்ட பிரதேச செயலகங்களில் 60க்குமேற்பட்ட பிர தேச செயலாளர்கள் உதவி அரசா ங்க அதிபர்கள் தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள். ஏனைய விவசாய , கடற்றொழில் போன்ற அலுவலகங் களில் அதாவது வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் (இதில் வேடிக்கை என்னவென்றால் வடக்கு கிழக்கு மாகாணத்தலைவர் செய லாளராக உள்ள ஒரு தமிழர் (திரு.சி. இரங்கராசா) கிளிநொச்சியில் அரச அதிபராக உள்ள ஒரு தமிழருடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்வது தான் வடக்கு கிழக்கின் 08 மாவட்டங் களிலும் இதே நிலைதான்)

(அதாவது வடக்கு கிழக் கில் உள்ள தமிழ் மக்கள், தமிழ் நிர்வாக அதிகாரிகளால் ஆங்கிலத் தின் மூலம் ஆளப்படுகிறார்கள்) வரும் அலுவலகங்களில் 90%க்கு மேற்பட்டவர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்கள்.

நிலமை இப்படியிருந்தும், இந்த மாகாண நிர்வாகம் (எவ்வித தமிழ் கலப்பின்றி) நூற்றுக்கு நூறு வீதம் ஆங்கில மொழியில் மட்டுமே நடைபெறுகின்றது. (நீங்கள் அருகில் உள்ள கிளிநொச்சி கச்சேரிக்குப் போய், வடக்கு, கிழக்கு மாகாண தலைநகர் திருகோணமலையிலிரு ந்து வரும் அலுவலகக் கடிதங்களைப் பார்வையிட்டால் உண்மை தெரியும்)

தென் இலங்கையிலுள்ள அமைச்சுகளிலிருந்து சிங்களத்தில் மட்டுமே, அலுவலகக்கடிதங்கள் வருகின்றன. ஆனால் வடக்கு கிழக்குமாகாண நிர்வாகம், ஆங்கிலத் தில் நடைபெறுவதையிட்டு, தமிழ் மக்களோ, அல்லது சம்பந்தப் பட்ட வர்களோ எவ்வித கவனமும் செலுத் தாமல் உள்ளது புரியாதபுதிராக உள்ளது.

ஈழநாதம் மூலம் பதில் கிடைக்குமா?

தங்கள் உண்மையுள்ள,
க.ஆறுமுகம்.

திருப்தியே தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் ஞானியின் கல் - பெஞ்சமின்ஃ பிராங்க்ளின்



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம் - 06

*"இல்லை. ஒரு போதும் இல்லை நிச்சயமாக நீங்கள் வரலாம். வரும் போது ஒரு நாள் சேர்ந்து உணவருந்துவோம்"* என்றார்; மிகவும் நட்போடு.

உண்மையாகச் சொன்னால் நான் முதன்முறை அவருடன் கதைத்தது ஓர் அரிய சந்தர்ப்பத்தின் ஆர்வமேலீட்டால்தான். பின்புதான் இதை எழுத வேண்டும் என்ற எண்ணம் இந்த எழுத்தாளனுக்கே வந்தது. முதலில் ஒருவித விடுப்பார்வத்தினாலேயே நான் இத்தனை உரையாடலையும் செய்திருந்தேன். இது எழுதப்படுவது அவசியம் என்ற உணர்வு அப்போது எனக்கெழவில்லை.

இப்பொழுது எழுதவேண்டும் என்ற நோக்கத்துடனேயே தகவல்களை மேலும் பெறுவதற்காக அவரிடம் போக வேண்டும் என்றெண்ணினேன். அதற்கான வாய்ப்பும் வந்தது.

ஒரு பிந்திய மாலைநேரம் மீண்டும் அவர் இருக்கும் அவரது நண்பர் வீடு சென்றிருந்தோம். நன்கு நெருங்கியவர்களாகிவிட்ட உணர்வு அவர்களது வரவேற்பிலிருந்து எனக்குக் கிடைத்தது.

வழமையான உரையாடல்களை விடுத்து எமது உரையாடலில் ஈராக் பற்றியவற்றை உங்களிடம் தரலாம் என விரும்புகிறேன்.

அதற்கு முன் அவரைப் பற்றியும் அவரது தொழில்பற்றியும் நான் சில விபரக்குறிப்புகளையும் உங்களிடம் தர வேண்டும்.

அவர் ஒரு கப்பல் கப்டன். ஏறத்தாழ இருபத்திரண்டு வருட கப்பல் தொழில்சார் அனுபவம் அவருக்குண்டு. பெரிய, சிறிய கப்பல்களை ஓட்டிய அனுபவம் மிக்கவர். பல நாட்டுக்காறரின் கப்பல்களில் கப்டனாகப் பணிபுரிந்திருக்கிறார். உலகில் பல நாடுகளுக்கும் சென்றுவந்திருக்கிறார். அதில் தான் இலங்கையும் ஒன்று. அண்மைக்காலமாக அவர் சொந்தநாட்டுக் கப்பலில் பணிபுரிந்ததுடன் தனது நாட்டின் வளமான எண்ணெயை அமெரிக்காவின் தடைக்கும் கடல் கண்காணிப்புகளுக்கும் மண் தூவிவிட்டு வெளிநாடுகளில் கொண்டு சென்று விற்கும் கடலோடியாகவும் அமெரிக்காவிற்குக் கடத்தல்காரனாகவும் பணியாற்றி வந்தார்.

ஒரு கடலோடியின் அனுபவமும் வாழ்வுமே புதுமையானது. அதிலும் ஒரு நாட்டுப்படையின் கண்காணிப்புகளைக் கடந்து 'கடத்தல்' செய்யும் ஒருவனின் அனுபவம் மிகப் புதுமையானது. அதிலும்கூட ஒரு ஈராக்கியனின் அனுபவம் அதிபுதுமையானதாக இருக்கும் என்று நான் நம்பினேன். அது தொடர்பாக என்னுடன் அவர்பகிர்ந்துகொண்டவற்றை தாராள மனதோடு உங்களிடம் தருகிறேன்.

"எண்ணெயை வெளியில் நீங்கள் கடத்திச் செல்வதற்கு ஈராக்கில் ஏதாவது தடை இருக்கிறதா?"

*"ஈராக்கில் என்னதடை. வெளியில் எண்ணெய் செல்வதில்தான் ஈராக்கின் வருமானமே இருக்கிறது. யாரும் எண்ணெயை வெளியில் கொண்டு போகலாம். அவர்களுக்கு ஒரு டன் டீசலுக்கு எழுபது டொலர் கொடுத்தால் சரி."*

"கடத்தும் போது நேரடியாக உங்களுக்கு ஏதும் பிரச்சினைவருமா?"

*"என்ன கதைக்கிறீங்கள் நீங்கள் கடலில் அமெரிக்கன் நிற்பான்.கரையிலிருந்து ஐம்பது நொட்ஸ் தூரத்தில் அவனது தாய்க்கப்பல் ஒன்று நிற்கும். அதுதான் அவனுடைய தளமாக இருக்கும். அதை மையமாக வைத்து சிறியரக கப்பல்களும் படகுகளும் ஈராக்கடலைக்கண்காணித்தவாறிருக்கும். ஈராக்கில் இருந்து ஒரு கப்பல் வெளியே போவதைக் கண்டால் சரி உடனே பீரங்கிப் படகுகளால் துரத்திவருவான்."*

"கையும் மெய்யுமாக அமெரிக்கரிடம் பிடிபடநேர்ந்தால் என்ன நடக்கும்; என்ன செய்வார்கள்." இந்தக் கேள்வியிலும் கிடைக்கப் போகிற பதிலிலும் எனக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது.

*"எங்கள் கப்பலில் ஏறி எஞ்சினை நிப்பாட்டி விட்டு எங்களையும் தங்கள் படகுகளில் ஏற்றி கப்பலையும் தனது தாய்க்கப்பல் நிற்கும் இடத்திற்கு இழுத்துச் சென்றுவிடுவான்."*

"அதற்குப் பிறகு?"

*"ம்...ம்...ம் அதற்குப் பிறகு விசாரணைகள் அறிக்கைகள் என்று தொடரும். அவனது கட்டளைப் பணியகத்தில் இருந்து விசாரணைகள் செய்ய நேரிலும் வருவார்கள். அது மாதக்கணக்கில் இழுபடும்."*

"உங்களுக்கு உயிர் ஆபத்து ஏதும் விளைவிக்க மாட்டார்களே?"

*"இல்லை அப்படி ஒன்றும் கிடையாது."*

"கப்பல் கடத்தியதற்காக நடவடிக்கை என்று என்ன செய்வார்கள்?"

*"ஆரம்பத்தில் கப்பலில் உள்ள எண்ணெயைப் பறித்தெடுத்துவிட்டு ஒரு மாதத்தில் எம்மையும் கப்பலையும் விட்டுவிடுவார்கள். ஆனால் பிற்காலத்தில் கப்பலையும் எங்களிடமிருந்து பறிமுதல் செய்து எமக்கும் விசாரணை அது இது என்று மூன்றுநான்கு மாதங்கள் அவர்களது கப்பலில் எங்களையும் தடுத்து வைத்திருப்பார்கள்."*

"எத்தனை கப்பல்கள் இப்படி ஈராக்கில் இருந்து வெளியில் எண்ணெய் கொண்டு சென்று விற்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன."

*"நிறைய, மிக நிறையக் கப்பல்கள் இப்படி எண்ணெய் விற்பனையில் ஈடுபடுகின்றன. ஏன் அமெரிக்கர்களுக்கு ஈராக்கியர்கள்' பயந்து விடுவோம் என்று எண்ணுகிறீர்களா?"* என்று என்னிடம் மிடுக்காகவும் நக்கலாகவும் கேட்டார்.



பிரவீன்

அவரது நக்கலுக்கு ஆப்புப் போல நான் கேட்டேன்.

"நீங்கள் இந்தக் கடல் அனுபவத்தில் எப்பொழுதாவது அமெரிக்கர்களிடம் பிடிபட்டிருக்கிறீர்களா?"என்று..

(ஒரு வாரம் காத்திருக்க)

# நேர்நோக்கு

## பலமடைவதில் என்ன தவறு?

இன்றைய சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருக்கின்றனராம். இவ்வாறு சிறிலங்காவின் முப்படைத் தளபதிகள், முப்படைகளினதும் தளப்தியும் நாட்டின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவிற்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றனராம். இன்னொன்றையும் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். அதாவது. புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக அவசரகால நிலைமை அமுலில் இல்லாததால் தம்மால் புலிகள் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியவில்லையாம்.

முதலாவதாக இந்த அறிக்கையானது மிக அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டதா? அல்லது முன்னரே வழங்கப்பட்டு இப்பொழுதுதான் வெளியிடப்படுகிறதா? என்பது குறித்து தெரியவரவில்லை. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் சனாதிபதி சந்திரிகாவுக்குப் பயன் தரத்தக்கவகையில் இந்த அறிக்கை அமைந்திருக்கின்றது.

இதுமுப்படைத் தளபதிகளும் யாருடையபக்கம் அவர்களின் உள்ளக்கிடக்கை என்ன? என்பனவற்றை வெளிப்படுத்தியிருக்கிறது என்றும் சொல்லலாம்.

இரண்டாவதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு 16 மாதங்கள் கழிந்துள்ள நிலையில், இதன் அமுலாக்கத்துக்கு முப்படைத் தளபதிகளும்சரி, முப்படைகளினதும் தளபதியாகிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சரி எவ்வளவு தூரம் ஒத்துழைத்திருக்கிறார்கள்? சமாதான முயற்சிகளின் ஆரம்பகட்ட முயற்சிகளுக்கு எவ்வகையில் பங்களித்திருக்கிறார்கள்?

25வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த யுத்தத்திற்கு சமாதான வழிமூலம் தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளுக்கு எவ்வகையில் நம்பிக்கையூட்டியிருக்கிறார்கள்?

இவ்வாறு நிலைமை இருக்கையில் தமிழ் மக்களாயினும்சரி, விடுதலைப்புலிகளாயினும் சரி இந்தச் சமாதான முயற்சிகளில் நம்பிக்கைவைத்து எவ்வாறு தம்மைப்பலப்படுத்தியிருக்க முடியும்?

தமது பாதுகாப்புக்கென ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் மக்களின் வாழ்விடங்களையும், விளைநிலங்களையும், தொழிற்சாலைகளையும், பாடசாலைகளையும் சிறிதும் விட்டுக் கொடுக்க சிறிலங்காவின் தரைப்படை தயாராகஇல்லை. எந்தமக்களின் பாதுகாப்புக்காக என்று கூறிக்கொண்டு இவற்றையெல்லாம் ஆக்கிரமித்து நிற்கிறார்களோ அந்தமக்கள் ஒன்று திரண்டு இப்பகுதிகளை விட்டுநகருங்கள், குறைந்தது தமது அன்றாட வாழ்வுக்காவது இடையூறாக இராதீர்கள் எனப்போராட்டம் நடத்துகின்றபோதும் அதனையெல்லாம் பொருட்படுத்த இவர்கள் தயாராக இல்லை. போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் போர்நிறுத்த விதிகளை மீறி பெரும் இடையூறுகளையும் இன்னல்களையும் விளைவிக்கின்றனர்.

சிறிலங்கா கடற்படையோ இதனிலும் மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. தமிழ் மக்களின் கடற் தொழில் இவர்களின் தொடர்ச்சியான நடவடிக்கைகளால், தடைகளால், மீண்டும் துளிர்க்கமுடியாத அளவிற்குப் பாதிப் படைந்துள்ளது. முன்னரைவிடவும் அச்சமும் அவலமும் கொண்ட தொழிலாகமாறிவருகிறது. புலிகளின் தாக்குதல் குறித்த அச்சத்தால் ஆழ்கடலில் பதுங்கிச்சென்ற சிறிலங்காக் கடற்படையின் விரைவுப்படகுகள் இப்பொழுது கரைவரைக்கும் வந்து மீன் பிடிப்படகுகளை மோதிச்சிதைக்கின்றன. வெளிநாட்டவர் மீன் பிடிக்க ஒப்பந்தமும் அனுமதியும், ஆனால் கடலுக்குச் சொந்தமான மக்கள் பெரும் அவலத்தில் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

புலிகளின் கப்பல்களை அல்லது படகுகளை எதிர்கொள்ள அல்லது தமது விநியோக நடவடிக்கைகளுக்குக் கூட "வருண கிருண" என்று கூறிக்கொண்டு கூட்டுச்சேர்ந்து கும்பலாகச் சென்ற சிறிலங்கா கடற்படையினர், இன்று கேட்பார் எவருமின்றி கடலில் சென்று சர்வதேசக் கடற்பரப்பில் செல்லும் விடுதலைப்புலிகளின் கப்பல்களை மூழ்கடித்து வருகின்றனர். போராளிகளை சாவிற்குத் தள்ளுகின்றனர். போர்நடைபெற்ற காலத்தில் வடக்கிற்கும் கிழக்கிற்குமான போராளிகளின் கடற்பயணத்தைத் தடுக்கதிராணியற்ற நிலையிலிருந்த கடற்படையினர் இன்று அதற்கு கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் விதிக்கின்றனர்.

இவையெல்லாம் எவருக்காயினும் இவர்கள் மீதான நம்பிக்கையையூட்டப்பயன்படுமா?

இதேவேளை முப்படைகளினதும் தளபதியும் சிறிலங்காவின் தலைவியுமாகிய சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் என்றுமே தமிழ்மக்களுக்கு நம்பிக்கைக்கு உரியனவாக அமைந்தவையல்ல. சமாதான வேடம் பூண்டு உலகை ஏமாற்றிய அவரால் தமிழ்மக்கள பெரும் அவலங்களை எல்லாம் சந்தித்தார்கள். ஆனால் அதற்குத் தகுந்த பதிலடியும் கொடுத்தார்கள். இன்றைய சமாதான முயற்சிகள் கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மீதுவைத்த நம்பிக்கையினால் நடைபெறுபவையல்ல என்பதும் வெளிப்படையாகும். இன்னமும் அவரின் நிறைவேற்று அதிகாரம் அடிபட்டபாம்பாக மயங்கிய நிலையில் இருப்பினும் மீண்டும் உயிர்பெறவாய்ப்பிருக்கும் நிலையில் புலிகள் எவ்வாறு தம்மைப்பலப்படுத்தாது இருக்க முடியும்.

இதேவேளை நம்பிக்கையென்பது இருதரப்பும் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் விடயமாகும். ஒரு தரப்புமட்டும் மற்றத்தரப்பு மீது நம்பிக்கை கொள்வது அறிவீனமாகும். தமிழர் தரப்பு மீது முப்படைகளும் சரி, முப்படைகளினதும் தளபதியும் சரி நம்பிக்கை கொள்ளாதவிடத்து மறுதரப்பாகிய தமிழர் தரப்பிடமிருந்து அதனை அவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? எனவே தயார் நிலை அல்லது உசார்நிலை என்பது அவர்களுக்கு மட்டுமே உரியதாகுமென எதிர்பார்க்க முடியாது.

மூன்றாவதாக அவசரகால நிலைமை இல்லாததால் தம்மால் புலிகளின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாகப் படைத்தரப்பு கூறுவது கேலிக்குரியவிடயமாகும்.

1980களில் போராட்டம் வளர்ச்சிப் பெற்றுக் கொண்டிருந்த வேளை யாழ். குடா நாட்டில் கடமையாற்றிய ஒரு பொலிஸ் அதிகாரி சொன்னார் "விடுதலைப்புலிகள் சிறு எண்ணிக்கையைக் கொண்டவர் களாக இருப்பதால் அவர்களைப் பிடிக்க முடியாது இருக்கிறது. ஆனால் பெரும் படையாக இருந்தால் அவர்களை இலகுவாக மடக்கிப் பிடித்துவிடலாம்" என்று. ஆனால் புலிகள் பெரும்படையாகினார்கள்: அதனால் விளைந்ததை சிங்கள இனவாதிகளால் கண்டு கொள்ளமுடிந்தது.

புலிகள் இவ்வாறு பலம் பெற்றது அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்த காலத்தில்தான் என்பதை இவர்கள் சுலபமாக மூடிமறைத்து விட முயல்கின்றனர்.

இன்னும் கூடப்பேச்சளவில் அல்லது பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்படவில்லையே தவிர அதிலுள்ள அதிகாரங்கள் பலவற்றைப் படையினர் அனுபவித்தே வருகின்றனர் என்பது வெளிப்படையாகும்.

எனவே இந்த அறிக்கை எதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளதென்றால் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சி நிலையில் - ஏழுவருடகாலம் தீவிரயுத்தம் நடத்திய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கொலை, மோசடி சந்தேகநபராக சிறைக்காவலரின் காவலுடன் கட்சி மாநாட்டுக்கு வருகை தரவேண்டிய சூழ்நிலையில் - ரணிலின் அரசாங்கம் மீது குற்றம் சுமத்தவும், புலிகளைத் தாம் ஓயாது கண்காணித்து வருவதாகத் தோற்றம் காட்டவுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை மாநாட்டில் கலந்துகொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிரவிசுவாசிகள் நம்பியிருக்கவும்கூடும்.

வேலவன்

திருப்தி அடையாமலிருப்பது, துணிவு இல்லாமையின் அறிகுறிதான் - சார்ல்ஸ் சர்ச்சில்




# பொங்கியெழும் அன்பு குருகுலத்தின் குருத்துகள்

கொடிய போரின் வடுக்களால் உறவுகள் இழந்து எதிர்காலமே தொக்கி நின்ற வேளைகளிலெல்லாம் அவர்களை அரவணைத்து சிறுவர் இல்லங்களை அமைத்து அவர்களைப் பேணிப்பாதுகாக்கும் பணியை எம்தேசம் தன்னகத்தே தாங்கிக்கொண்டு பல இல்லங்களை அமைத்திருக்கிறது.

அவற்றில் காந்தி நிலையம், குருகுலம் சிறுவர் இல்லங்களும் அமைகின்றது. இவை இரண்டிலும் 700க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்கள் பராமரிக்கப்படு கிறார்கள்

அப்படி அணைக்காது விட்டிருந்தால் இன்று அவர்கள் தெருக்களில் கையேந்துபவர்களாகவும், பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டவர்களாகவும் விரக்தியுற்று அலைபவர்களாகவுமே அலைந்திருப்பர்.

காந்திநிலையத்தின் 46வது ஆண்டையும்,



குருகுலத்தின் 43வது ஆண்டு நிறைவையும் காண்பதற்காக குருகுலத்தின் வாயிலில் நுழைந்தபோது “வாங்கோ சித்தி...வாங்கோ சித்தி என்று முகமலர்ந்து வரவேற்ற அன்புச் சிறுமியரின் வரவேற்பில் திளைத்தநான் அங்கு சென்றதும் நிகழ்வுகள் ஆரம்பமாக நேரமிருந்ததால் அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஒரு சிறுமியாகவே வந்துவிட்ட உணர்வு எனக்கும் ஏற்பட்டது.

“சித்தி நாங்கள் கட்டுரைகள் எழுதுறநாங்கள், சித்தி கவிதை எழுதிறநாங்கள் என்றும் தங்கள் கலைத்துறையோடு கூடிய எழுத்தார்வத்தையும் வெளிக்கொண்டு வந்தார்கள். அதைக்கேட்டதும் பெரியதொரு சந்தோச அலை என்னுள் பொங்கியெழுந்தது.

இவர்கள்யார்? இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்...? இவர்களுக்கான அரவணைப்பின் பின்னணி யாருடையது என்று பார்ப்போமாக இருந்தால்...

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் பெற்றோரின் இழப்பால் நிர்க்கதியற்று நின்றவர்களாகவும், பொருளாதார வாழ்வற்று எப்படி எங்கள் பிள்ளைகளை வளர்க்கப் போகின்றோம் என்று ஏங்கியபெற்றோர்களிடமிருந்து இளம் சிட்டுக்களை தத்தெடுத்த காந்திநிலையம்,குருகுலம் இல்லங்களின் இயக்குநர்கள் முறையே 46,43 ஆண்டுகளாக வளர்த்து ஆளாக்கி அவர்களுக்கு ஒரு எதிர்காலத்தையே காட்டிவருகிறார்கள். அதோடு என்றைக்குமே க்ருணையை, அரவணைப்பை,அன்பை எதிர்காலத்தை காட்டுவார்கள் என்ற அசையாத நம்பிக்கை உண்டு....

இவர்களின் வளர்ச்சிப் பணிக்காக தமிழர்புனர்வாழ்வுக் கழகம் கைகொடுத்து வழிநடத்தும் திறன் அளப்பரியது...

“எனக்கு என்ர அம்மா,அப்பாயார் என்றே தெரியாது. என்னை என்பெரியம்மா தான் வளர்த்து வந்தார். பெரியம்மாவின் அரவணைப்பிலிருந்து தவறுண்டு நிர்க்கதியாக நின்றவேளை குருகுலத்தில் சேர்த்துவிட்டார்கள். 10ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் போது வந்த நான் A/L பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கிறன்” என்றார் இல்ல மாணவி ஒருவர்.

எனக்கு ஒரு மகள். அவர்திருமணம் செய்து அவருக்கு 4 பிள்ளைகள், மற்றஇரு மகன்களும் போராளிகள். நான்கு பேரப்பிள்ளைகளையும் விட இங்கு இருக்கும் பிள்ளைகளை விட்டு என்னால் இருக்கமுடியாது... பாருங்கள் திலீபன் என்ற பிள்ளை அக்கராயன் ஆஸ்பத்திரியில் பிறந்த அன்று இரவே தாயார் இறந்து விட்டார். பிள்ளையைப் பொறுப்பெடுங்கள் என்று டொக்டர் கடிதம் அனுப்பியிருந்தார். நானும் அவர்களோடு சேர்ந்து சென்று அக்குழந்தையைத் தூக்கி வந்தேன். அன்றிலிருந்து இப்போ 3வயது வரை நானே எல்லாமாக வளர்த்து வருகிறேன். 5 வயதானதும் பெண்பிள்ளைகளின் இல்லத்திலிருந்து பிரித்தெடுத்து காந்திநிலையத்தில் அவர்கள் சேர்க்கப்படுவார்கள்.ஆனால் திலீபன் தனக்கு ஒருபருவம் வருமட்டும் பிரிவான் என்று எனக்கு நம்பிக்கையில்லை... அவன் எங்கள்ளையும் இங்கிருக்கும் பிள்ளைகள்மீதும் பிரியாத ஒரு அன்பை வைத்திருக்கிறான். பாருங்கோ பிள்ளை எனது மருமகனுக்கு கோபம் தங்கடை பிள்ளைகள் இருக்க அவயள வளர்க்காமல் இந்தப்பிள்ளைகளை வளர்க்கிறன் என்று. பேரப்பிள்ளைகளுக்கு அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிள்ளையை வளர்த்துவிட வேண்டியதற்கு தாயுள்ளம் கட்டாயம் தேவை . இவர்கள்

**பொ.நந்தினி**

எங்களை வார்த்தைக்கு வார்த்தை அம்மா...அம்மா..என்னும் போது எங்கள் மீது குடிகொண்டகவலைகள் தூரவிலகி நின்று அன்பு மட்டும் பொங்கி எழுகிறது.

வீடுகளில் இரண்டு மூன்று பிள்ளைகளை வளர்ப்பவர்கள் பெரிய குழப்படி என்கிறார்கள் தான். ஆனால் இங்கும் அடிபடுவார்கள் சண்டைபிடிப்பார்கள் கொஞ்சநேரத்தால் ஒன்று கூடிவிடுவார்கள். எதற்கும் அவர்கள் போக்கிலேயே விட்டுவிடுவோம். இருவர் சண்டைபிடிக்கிறார்கள் என்று அவர்களைக் கண்டித்து தண்டனை கொடுக்க முடியாது. ஏனென்றால் அடுத்த நிமிடமே கைகோர்த்து நிற்பார்கள் என்றார்” வயதில் 'சிறியவர்களைப் பராமரிக்கும் ராஜேஸ் அம்மா.



“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்மண்ணில் பிறக்கையிலே அவர் நல்ல வராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே...” என்று ஒரு பாடல் உண்டு. இந்தப் பிள்ளைகளின் வளர்ப்பு சித்திகளின்கைகளிலும்...மாமாக்களின் கைகளிலும்... அரவணைத்துப் பராமரிக்கும் அம்மாக்களின்



கைகளிலுமேதான் உள்ளது.

அவர்களின் பண்பான பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் பேணும் திறன், அன்பை எவ்வாறு எல்லோரிடமும் எதிர்பார்க் கின்றனரோ அதுபோலவே அவர்களும் எல்லோரிடமும் அன்பைப் பகிர்ந்து கொள்ளும் ஆளுமை...என்னுடையதென்று பார்க்காது எங்களுடையது என்று பார்க்கும் அவர்களின் வெள்ளை மனம் என்பவற்றிற்கு வரிவடிவம் கொடுத்து விடமுடியாது. அவர்களின் திறனையும் குறைத்துக் கொள்ள முடியாது.

ஆண்,பெண் என்ற பாகுபாடின்றி மேடையேறி தங்களின் கலையார்வத்தை வெளிக்கொண்டு வரும் திறன்...அது நடனமாயினும் சரி,நாடகமாயினும் சரி, பாட்டாயினும் சரி மெய்சிலிர்க கவைக்கும் வசீகரத்தன்மை அவர்களுக்கே உரியதான கொடையாகும்.

மனமகிழ் பூங்காவும் கட்டப்பட்டு திறந்துவைக் கப்பட்டது. அப்பூங்காவிற்குள் இந்த இளஞ்சிட்டுக்கள் குதூகலித்து மகிழ்ந்ததை அதில் கலந்து கொண்டவர்களும் கண்டு மெய் சிலிர்த்துநின்றார்கள். வீடுகளில்தங்களின் பிள்ளைகளை வளர்த்து அவர்களுக்கு ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு பெற்றோரும் விரும்புகின்றார்களே. அதுபோன்று இந்த இல்லங்களில் வளருகின்ற பிள்ளைகளையும் எல்லோரும் பார்த்து பூரித்து நின்று சீர்தூக்கிக் கதைக்கும் அளவிற்குவளர்த்து அவர்களுக்கொருநல்ல எதிர்காலத்தை இந்த நாட்டில் ஏற்படுத்திக் கொடுப்பது என்பது தமிழ் மக்களாகிய ஒவ்வொருவருடைய பொறுப்பும்...தலையாய கடமையுமாகும்.

---

(05பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பக்ரீரியாக்கள் மூலம் செயற்கை உரத்தின் வீரியத்தை பயிர்கள் பெறமுடியும். இதே வேளை மண் சேதமடையாமலும் சூழல் பாதிப்படையாமலும் பாதுகாக்க முடியும்.

செயற்கை உரங்களை விட மலிவானவையாக இந்த பக்ரீரியாக்கள் உள்ளன. இன்னும் நாம் அவற்றை இறக்குமதி செய்து பயன்படுத்தமுடியும்.

இயற்கை வேளாணுக்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பயிரமுது இயற்கை உரப்பயன்பாடு இன்று அறவே நின்று போய் விட்டது. பயிரமுதுடன் குறித்த அளவு யூரியாவைக்கலந்து வேளாண் செய்கையாளர்கள் இன்று அதைப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் பயிர்களையும் நிலங்களையும் சூழலையும் நிச்சயமாகப் பாதுகாக்க முடியும்.

கிருமிநாசினிகளுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் வன்னியில் கடந்த காலங்களில் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று அதுவும் கைவிடப்பட்டு கிருமி நாசினிகளிடம் தஞ்சமடையப் பட்டுள்ளது. அழிவுதரும் பூச்சிகளை அழிக்கும் ரைகோகிராமா என்ற பூச்சியையும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்தகாலங்களில் அறிமுகம் செய்தது. கமநல சேவை நிலையங்கள் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை அறிமுகம் செய்தன. ஆனால் இன்று இவை காலமாகிப் போகின.

நமது விவசாயிகள் ஒன்றைப்புரிந்த கொள்ள வேண்டும். நமது நிலங்கள் தொடர்ந்து வேளாண் செய்கைக்கு ஏற்றதாக, வருமானம் தரக்கூடியதாக இருக்கவேண்டுமானால் அவர்கள் தாம் நவீன விவசாயம் எனக் கருதும் செயற்கை உரம், கிருமிநாசினிப் பயன்பாடுகளை குறைக்க வேண்டும். உண்மையில் நவீன வேளாண்மையாக உள்ள இயற்கை வேளாண்மையில் அக்கறை காட்ட வேண்டும்.

இதற்கு இது தொடர்பான அமைப்புகள், நிறுவனங்கள் வழிகாட்ட வேண்டும். கண்காணிப்புக்களை மேற்கொள்ளவேண்டும். அதைவிட இதற்கான ஒழுங்குச் சட்ட முறைகள் தாயகம் தழுவி நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது தாய் மண் பௌதீக உயிர்ப்புடன் இருந்து அமுத சுரபியாக விளைச்சலை அள்ளி வழங்க வேண்டும் என நாம் கருதுவோமாக இருந்தால் இதனைக் கட்டாயம் கைக்கொள்ள வேண்டும். அல்லாவிடில் தாய்மண் பௌதீகம் மலடாகிப் போகும்.

---

பிறரைத் திருப்தி செய்யும் கலை, நாம் திருப்தி அடைவதில்தான் உள்ளது. - வில்லியம் ஹேஸ்லிட்



# அனுமார் பதில்கள்

● அனுமாரே இதுவரையும் நடந்து முடிந்த யுத்தங்களுக்கு சாட்சியாக யார்? அவரின் ஆயுட்காலம் எவ்வளவு?

சு.ராகினி,
மல்லாவி.

யுத்தங்களுக்கு சாட்சியாக வரலாறு உள்ளது, அதன் ஆயுட்காலம் பூமியில் உயிர்கள் உள்ளவரைக்கும் நீளுமே! ராகினி

● தனித்தமிழ் பற்றி கவனமெடுக்கும் இக்காலத்தில் பல பத்திரிகைகள் அதை புறக்கணிக்கின்றனவே ஏன?

பிரசாத்,
மல்லாவி.

தனித்தமிழ் ஏன் தேவை என ஒரு காத்திரமான படைப்பை அனுப்பிவையுங்களேன்.

● யாழ்ப்பாணத்தில் கட்டுமீறிப்போகும் வன்முறைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் அனுமார்?

ச.மாறன்,
திருநெல்வேலி.

அதற்கு தனியே யாழ்ப்பாண இளைஞர்கள் மட்டும் காரணமில்லை. இவ்வன்முறைகளுக்கு முழு யாழ் சமூகமுமே பொறுப்பேற்கவேண்டும்.

● புலிகளின் கப்பல் கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டது காலை 5 மணிக்கு என்றாலும் 7 மணிக்கே அதுபற்றி தனக்கு தெரியும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றாரே?

த.மயூரன்,
சுண்ணாகம்.

அவர் வழமையாக 7 மணிக்குத்தான் நித்திரைவிட்டெழும்புவாராம்...

● மீண்டும் யாழில் 'பீல்ட்பைக் குறூப்' அட்டகாசம் தொடங்கியுள்ளதே அனுமாரே?

க.றஜனி,
திருவையாறு.

இனிமேல் முடியாது என்று நினைக்கிறார்கள் போல்!

● அனுமாரே, சிறிலங்கா அரசு மட்டுமல்ல, அன்னிய அரசுகளும் தமிழரை ஆத்திரமூட்டும் போதும், "அண்ணர்" இன்னும் அமைதியாகவே இருப்பது ஏன்?

யே.சுடர்,
வட்டக்கச்சி.

எல்லாம் நன்மைக்கே சுடர்.

● அன்பின் அனுமாரே எமதுநாட்டில் போரை தொடக்கி வைக்க முயலும் தீவிரவாதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கு. தீபன்,
கிளிநொச்சி.

இப்பொழுது அவர்களுக்கு உழைப்பில்லைத்தானே.

● பிரிட்டிஸ் விமான நிலையத்தில் 'புஸ' க்கு கால் சுளுக்கியதாக படம் வந்ததே. அதை பார்த்த போது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?

S.ரமேஸ்,
கந்தபுரம்

ஈராக்கில் இரண்டு கைகளையும் இழந்த சிறுவன்தான் கண்களில் வந்தான்.

● இணையம் நம் இளம் சந்ததிக்கு கொடுத்திருப்பது என்ன?

க.சுரேன்,
கணேசபுரம்.

அறிவை வளர்க்குதோ என்னவோ தெரியவில்லை. ஆபாசப் படங்களை இறக்கம் செய்யவும் பிரிண்ட் எடுக்கவும் பழகிவிட்டார்கள் என்கிறார் யாழில் பிரபலம் ஒருவர்.

● அமெரிக்க அணுவாயுத நாசகாரிகள் பற்றி சுருக்கமாகக் கூறுங்களேன்?

மித்திரா
கிளிநொச்சி

உயிர்களை வறுத்தெடுக்க உதவும் பெரிய பாத்திரங்கள் அவை.

● அனுமாரே உங்கள் பொழுது போக்கு என்ன?

ம.சாரதா,
புதுக்குடியிருப்பு.

பொழுதை நான் போக்குவதில்லை. அது தானாகவே போகும் என்று (நடிகை) மனோரமா ஒரு பேட்டியில் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

● சமாதான முயற்சிகளில் இடை வெளிகள் நீண்டு கொண்டு வருவது போலுள்ளதே! இது பற்றி நீங்கள் கூறுவது தான் என்னவோ?

எம்.எஸ்.வரன்,
வன்னேரிக்குளம்.

யுத்தத்திற்கிடையிலான இடைவெளி குறைகின்றதோ!

● சிக்குறுவில் சிக்கெடுத்தவர்களுக்கு கடலில் சிக்கலைக் கொடுப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் அனுமாரே?

க.முரளி,
கிளிநொச்சி.

அவர்கள் தங்கள் தலைகளில் தாங்களே குட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

● அரசியல் யாப்பை மாற்ற பொ.ஐ.மு தயார் என கதிர்காமர் சொல்கிறாரே. இதற்கென்ன அர்த்தம்?

எ.ஸ்.றாஜீவ்,
பருத்தித்துறை.

அதற்குள் கவுக்கிறதுக்கு வழி ஒன்றை கண்டறிந்து விட்டார்கள் என்றே அர்த்தம்.
புல்லாங்குழலில் நாதஸ்வர இசை வராதாம்.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

-ஆர்மிரேஜ் விடுதலைப்புலிகளை மிரட்டும் பாணியில் பேசுகிறார்.
-நிருபம்சென் கூட்டணியினரை சற்று மிரட்டியே உள்ளார்.

ரணிலை அமெரிக்கா முழுமையாக கையாள நினைக்கிறது. சந்திரிகாவை இந்தியா தற்காப்பு நிலையில் மறைமுகமாகப் பயன்படுத்திவருகிறது.

அள்ளிக்கொடுத்தே அரசை மயக்க முனைகிறது அமெரிக்கா. தனக்கான பாரம்பரிய அயலக உரிமையை மறைமுகமாக வலியுறுத்தியே அச்சுறுத்துகிறது இந்தியா.

மீண்டும் சண்டைவந்தால் தனது உதவி தவிர்க்க முடியாது என்பதை சீனாவும்- பாகிஸ்தானும் கோடிகாட்டி நிற்கிறன.

விடுதலைப்புலிகளின் கப்பல்களை இனங்கண்டு அழிக்க கடற்படைக்கு உதவ 'தனது சேவை' அவசியம் என உணர்த்தி நிற்கிறது இந்தியா.

அதே கடற்படைக்கு நவீன போர் மற்றும், கண்காணிப்புக் கப்பலை முன்வந்து வழங்குகிறது அமெரிக்கா..... இப்படியே.....

எல்லா நாடுகளுக்கும் 'ஆமாம்சாமி' போடும் சனாதிபதியும் பிரதமரும், சொந்த முரண்பாடுகளைத் தீர்க்க 'மாட்டேன் சாமி' எனச்சொல்வது தான் அறியாமையின் உச்சக்கட்டம்.

இவர்களின் அறியாமையை உச்சக்கட்டத்திற்கு வளர்த்து மந்தபுத்தி கொண்டவர்களாக நிரந்தரமாக விளங்கவைத்தமை ஆதிக்க சக்திகளின் பெரும் வெற்றியாகும்.

அவர்களுக்கு தேவை போரின் பேராலோ, சமாதானத்தின் பேராலோ, இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் தமது ஆதிக்க வலுவை நிலை நாட்டிக் கொள்வதற்கான தளமாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதேயாகும்.

அதற்கு நிரந்தரமான போரோ, நீடித்த- உறுதியான தீர்வுடன் கூடிய சமாதானமோ அவர்களுக்கு அனுசரணையாக இருக்காது என்றே அந்த நாடுகள் நம்புகின்றன.

அதனால் தான் 'சமாதானத்திற்கான' யுத்தம் என்று கூறும் சந்திரிகாவையும், போருக்குத் தயார் நிலையை ஏற்படுத்திக் கொண்டே சமாதானம் பேசும் ரணிலையும் மட்டுமே அந்தநாடுகளின் அரசுகள் ஆதரிக்கின்றன.

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயலும் அப்பட்டமான அரசியல் சுயநலம் இதுவாகும்.

இந்த நிலையில் வெறும் 'சமாதான சங்கீதம்' மட்டும், பிரச்சாரம் மட்டும் அமைதியை கொண்டுவந்து விடும் என எவரும் நம்பினால் அதுவும் அறியாமையின் வெளிபாடாகவே அமையும்.

அழுத்தங்களால் ஏற்படுத்தப்படும் அமைதியோ, சமாதானமோ, தீர்வோ, புயலுக்கு முன்னான அமைதியாகவும், போருக்கு முன்னான சமாதானமாகவும், குழப்பத்திற்கு முன்னான தீர்வாகவும் மட்டுமே இருக்கும்.

"வல்லாதிக்க சக்திகள் எப்போதும் அதிகாரம் பண்ணவே விரும்புவார்கள். அடக்குமுறைக்குள் அமைதி என்பதுதான் அவர்களின் கோட்பாடாக இருக்கும். யுத்தத்திற்கு தயார்ப்படுத்தி விட்டே சமாதானம் குறித்து பேசத் தொடங்குவார்கள். சமாதானத்தை எட்டமுன்பே யுத்தத்தை ஆரம்பித்தும் விடுவார்கள்."

வல்லாதிக்க சக்திகளின் தலையாட்டிகளாக விளங்கும் பேரினவாதசக்திகள் எப்படி இருப்பார்கள் என்பதை விளக்க வேண்டியதில்லை....

'சமாதானம் ஒரு அற்புத விளக்கு. அது அலாவுதீனின் கைகளில் இப்போது இல்லை.... வல்லாதிக்கப் பூதங்களிடமும் பேரினவாத மந்திரவாதிகளிடமும் அது சிக்கிக்கொண்டுள்ளது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –24



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –24

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : .................................................
முகவரி : .................................................
.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –23



மேதினி.செ
73/1 விசுவமடு கிழக்கு,
விசுவமடு.

### பரிசுக்குரிய வரிகள்

ஒப்பந்தம் மீறி இன்று தம் தோழர் மடிவதை
பொறுக்கமுடியாது விழிகள் அனல்கக்க
ஒப்பந்த விதிக்கமைய பொறுமை காக்கின்ற
தலைவனின் ஆணைக்காய் நங்கையவள் - கலம்தாங்கி

### பாராட்டுக்குரிய வரிகள்

*விழிமேல் விழிவைத்து வைத்த குறிமாறாமல்*
*உன்னத உள்ளம் படைத்த உயிரே*
*எமக்கான விடிவிற்காய் விழித்திருக்கும்*
*உன்னுடன் நாமும் என்றென்றும்.*

து.நந்தினி,
அக்கராயன்குளம்.

*காவலனே! உன் தவிப்பு*
*எனக்குப் புரிகிறது.*
*நாளை தமிழீழம், நிச்சயம் – நீ*
*நேசித்த மக்களின் கைகளில் தவழும்.*

K.தீபா, இல.23,
ஜெயந்திநகர்,கிளிநொச்சி.

*புலியே ஏன்யோசிக்கிறாய் -ஆம் சமாதானம்*
*என்ற பெயரில் உன்னையும் உன் துப்பாக்கியையும்*
*ம்..அரசு செயலிழக்க வைத்து விட்டது என்றா - இல்லை*
*பொறுத்திருந்துபார் இல்லையேல் பொங்கி எழு.*

குகநேசன் - சுஜாதா,
நீர்வேலிமேற்கு.

*நீயோ விடுதலைக்காய் காவலரணில்*
*உன் பருவத்தினரோ தியேட்டரில்*
*நீ விழித்திருப்பது இவர்களுக்காகத்தான்*
*என்பது இவர்களுக்குத் தெரியுமா?*

T.பிரதீப்,
சாவகச்சேரி.

*வீர வரிப்புலிமகளே! - சுடுகலனால்*
*சிங்கள தேசம் கதிகலங்கியதுமுண்டு*
*புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்ததுமுண்டு - இதனை*
*கை விடலாகாது சிங்கள பேரினவாதத்தை நம்பி.*

து.கிரி,
கிளிநொச்சி.

*என் நாள நாடி நரம்புகளில்*
*துடிக்கும் இரத்தம் தூக்குகிறது.*
*விரல்கள் மீண்டும் விசைவில்லழுத்தினால்*
*முடிவு ஈழத்தில் முடியும்.*

T.நெல்சன்,
நீதிமன்றவீதி, மல்லகம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.






தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் சிறுவர் இல்லங்களான காந்தி இல்லம்,குருகுலம் சிறுவர் இல்லம் ஆகியவற்றின் 46ம், 43ம் ஆண்டு நிறைவு கடந்த 23ம் திகதி குருகுலம் சிறுவர் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான சிறுவர் பூங்கா ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் மகிழும் உள்ளங்கள் எனும் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு சிறுவர்கள் மலர் வணக்கம் செலுத்துவதையும், திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதையும் மேலுள்ள படங்களில் காணலாம். நிகழ்வில் மேற்படி சிறுவர் இல்லங்களைச்சேர்ந்த சிறுவர்கள் அணிவகுத்து நிற்பதையும் கீழ் உள்ள படங்களிலும் காணலாம்.







கிளி.நகரில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் விநோத உடை நிகழ்வில் கலந்து கொண்டு முதலாவது இடத்தைப்பெற்ற மாணவி ஒருவர்







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.